ஆங்கீரஸ-ஐப்பசி

1932-௵ அக்டோபர்-நவம்பர்௴

# ப்ரஜா




மாலை 4. மணி 7.

## ஓர் செந்தமிழ்
## மாதப் பத்திரிகை.

ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.

பிரசுராலயம்:
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

72
[handwritten call number] N32.4.7 197814

2 DEC 1932

## ராட்டூர் வீரன்-துர்க்காதாஸ்.

வங்காளகவி சம்ராட் துவிஜேந்திர லால் ராய்
எழுதிய தேசீய-சரித்திர நாடகம்.
க்ஷத்ரபதி சிவாஜி, ரஜபுத்திர சிங்கம் பிரதாப சிம்மன்,
வீர விளக்கு க்ஷத்திரஸால் முதலிய இந்திய வீர
தெய்வங்களுடன் இணையான வெற்றி வீரன்
துர்காதாஸ் ஒருவனே
ஆரம்ப முதல் இறுதிவரை வீரம்! வீரம்!! வீரம்!!!
தேச பக்தி ததும்புகிறது; சத்தியம் ஜெபிக்கிறது.
திலேர் கானின் தீரம், மஹா மாயாவின் மாயா சக்தி,
ரஸியாவின் கவிதா விலாசம், காஸிமின் பிரமாணிக்க ஊழியம்
எல்லாம் அற்புதம்! ஆச்சர்யம்!! இன்பம்!!!
ஆவேச நடை! அலங்கார பாஷை! மயிர் சிலிர்க்கும் செய்திகள்!
விரைவில் வெளிவரும். விலை ரூபாய் ஒன்றே
"பாரதி" புத்தகாலய வெளியீடு.

பாரத நாட்டின் வீரப் புதல்வி

## ஜான்ஸி மகாராணி லக்ஷ்மீ பாய்

ஜீவிய சரித்திரம்.
பிரதி 1-க்கு விலை அணா 0—2—0.
வேண்டுவோர் தபால் செலவிற்கும் சேர்த்து இரண்டரையணா
ஸ்டாம்பு அனுப்பி வைக்கவும்.
10 பிரதிகள் வாங்குவோருக்குத் தபால் செலவு இனாம்.
"பாரதி" புத்தகாலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## விளம்பர விகிதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சாதாரண | பக்கம் | 1-க்கு | மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| ,, | ,, | ½-க்கு | ,, | | 5—8—0 |
| ,, | ,, | ¼-க்கு | ,, | | 3—0—0 |
| கவர் | ,, | 2 & 3 | ,, | | 15—0—0 |
| ,, | ,, | 4 | ,, | | 20—0—0 |

விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன்பணம் அனுப்பவேண்டும்.
நீண்டகாலம் விளம்பரம் தருவோர் மானேஜருக்கு எழுதவும்.



சிறந்த செந்தமிழ் மாஸிகை.

19884

## பொருள் அடக்கம்.

மாலை 4. ஆங்கீரஸ—ஐப்பசி. மணி 7.


| தொடர் எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | வேண்டுகை:— | 425 |
| 2. | ஐக்கிய பாரதம்:— | 426 |
| 3. | வித்தியாபிவிருத்தி முறைகள்:— திரு. இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை அவர்கள் | 436 |
| 4. | பீஜியில் இந்தியர்களின் நிலை:— திரு. ஆர். கே. பண்டாரம் அவர்கள் F.C.I. | 447 |
| 5. | தேசபந்து சித்தரஞ்சன தாஸ்:— திரு. N. வேங்கடரமணன் அவர்கள் | 450 |
| 6. | சூரிய அஸ்தமனம்:— திரு. து. லா. சசிவர்ணம் அவர்கள் | 464 |
| 7. | எனது குருநாதரின் கடிதம்:—(மனோகரனார்) | 469 |
| 8. | பிரெஞ்சு இந்தோ—சைனா:— திரு. M. K. அழகப்பா அவர்கள் | 479 |
| 9. | நமது அரசியல் தஸ்தவேஜு:— | 491 |
| 10. | ஆசிரியர் குறிப்புகள் | 501 |


---

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

ரா. நாராயணஸ்வாமி, போசிரியர்.
ரா. சுப்ரமண்யம், பொறுப்பாசிரியர்.

மாலை 4 | ஆங்கீரஸ—ஐப்பசி 1932-ஞ அக்டோபர்-நவம்பர்மீ | மணி 7

# வேண்டுகை.

க. நல்லதோர் வீணைசெய்தே—அதை
நலங்கெடப் புழுதியி லெறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி!—எனைச்
சுடர்மிகு மறிவுடன் படைத்துவிட்டாய்,
வல்லமை தாராயோ—இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி சிவசக்தி!—நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?

உ. விசையுறு பந்தினைப் போல்—உள்ளம்
வேண்டியபடி செலும் உடல் கேட்டேன்.
நசையறு மனங் கேட்டேன்—நித்தம்
நவமெனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்.
தசையினைத் தீ சுடினும்—சிவ
சக்தியைப் பாடுநல் லகங் கேட்டேன்
அசைவறு மதிகேட்டேன்—இவை
அருள்வதில் உனக்கெதுந் தடையுளதோ? —பாரதியார்.

# ஐக்கிய பாரதம்.

"தனக்குத் தானே விரோதமாய்ப் பிரித்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத் தானே விரோதமாயிருக்கிற எந்த வீடும் விழுந்துவிடும்.

"உனக்குக் கிடைத்த இந்த நாளிலாவது உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தால் நலமாயிருக்கும். இல்லாவிட்டால் உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதிற் போட்டு, உன்னை வளைந்துகொண்டு, நாலாபக்கத்திலும் நெருக்கி, உன்னையும் உன் பிள்ளைகளையும் நாசமாக்கிவிட்டு ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடி செய்யும் நாட்கள் உனக்கு வரும்."

*—மகாத்மா இயேசு.*



சிரஞ்சீவியான ஒருமையோடும், சாக்ஷாத்காரமான யௌவனத்தோடு மிருக்கிற லோக நாயகியாகிற பாரத தேவிக்குச் சில நூற்றாண்டுகளாக நல்ல காலமில்லை. மேற்குத் திக்கிலிருந்து பல வேட்டைக்காரர்கள், நாட்டு வெறி பிடித்துக் கூட்டங் கூட்டமாய் நுழைந்து, நமது பாரத கண்டத்தை எல்லையில்லாத கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் உள்ளாக்கிவிட்டார்கள். பராதீனத் திறைற் பவிசழிந்து, சுயாதீனமிழந்து பிச்சைப் பிழைப்பும், கந்தைக் கோலமுமாய் நாட்டு மக்கள் கதிமோக்ஷமின்றிக் கலங்குகின்றனர். இந்தியரின் தாரித்ரிய தசையும், வாழ்க்கை நலிவும் இவ்வளவென்று சொல்லிடப்படாது. தெரு நாயினும் கேவலமாக ஆள்வினையாளராலும் பிறராலும் நடத்தப்பட்டார்கள்—படுகிறார்கள்.

இருள் முடிந்து பகல் விடிந்ததும்—நித்திய சோபிதா சொரூபியான பாலசூரியன் உதயமான உடனே சமஸ்த பிரகிருதிப் பொருள்களும் ஒருவிதமான புதிய ஜீவனையும், புதிய உற்சாகத்தையும் பெற்றுத் திகழ்கின்றதுபோலும் ஒரு புதிய ஆதர்ஸம்—கிளர்ச்சி தோன்ற நாட்டுப் பற்றுடைய பலர் சூரியனை நோக்கித் திரும்பும் சூரியகாந்த மலர்களைப்போன்று அந்த நவீன ஜெனனமாகிற தேசபக்த சமாஜத்தை நோக்கித் திரும்பினார்கள். அத்தகைய தேசாவேச கேசரிகள் அக்காலத்தில் வெகு வெகு சிலரே யிருந்தனர். பிறகு நாளாவட்டத்தில் தேசபக்த சமாஜத்தாரின் தீவிர பிரசாரத்தால் ஆள் சேர்க்கை அதிகரிக்க அதிகரிக்க, அன்னிய அரசாங்கத்தின் அடக்கு



முறையும் வலுத்தது. தேசத்து ஜனங்கள் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டார்கள். ஒரு சாரார் சொந்த நாட்டைப் பிறநாட்டாரின் ஆதீனத்திலிருந்து விடுவிக்க முயன்றனர். இன்னொரு சாரார் அன்னிய ஆதிக்கத்திற்கு உடந்தையாயிருந்து அடக்குமுறைக்குத் துணைபுரிந்தார்கள். மூன்றாவது கூட்டத்தாரோ "ராமனாண்டா லென்ன, ராவணனாண்டா லென்ன?' என்று பராமுகத்திலிருந்தார்கள். இந்த இணக்கமின்மையைச் சந்தர்ப்பமாகக் கொண்டு முன்னர் ரோம அரசர்களால் அனுஷ்டிக்கப்பட்டிருந்த பிரித்தாளுங் கொள்கையைப் பிரிட்டிஷ்காரர்கள் பலமாகப் பற்றிப் பிடித்திருந்ததால் நாட்டிலெங்கும், ஜாதிச் சண்டையும், சமயப் பூசலும் முற்றிவிட்டிருக்கிறது. ஹிந்துக்களுக்கு இஸ்லாமியரைப் பிடிக்கவில்லை; முஸ்லீம்களுக்கு இந்துக்களைக் கண்டால் கசப்பு; காபிர் என்றும் கழிக்கிறார்கள். ஹிந்துக்கள் சீக்கியரைப் பகைக்கின்றனர்; சீக்கியர் ஹிந்துக்களைத் திட்டுகிறார்கள். இவ்வாறு இந்தியர்கள்—இந்தியாவில் பிறந்தவர்கள் எல்லோரும்—அவர்கள் எந்த மதம், எந்த ஜாதி, எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாயினுஞ் சரி, இந்தியர்கள்—எல்லாரும் இந் நாட்டு மன்னர்கள் என்பதை மறந்து மாற்சரியப்பட்டு ஒருவர் சிண்டை இன்னொருவர் பிடித்துக்கொண்டு சண்டை செய்கிறார்கள். இந்தியர்களை இந்தியர்களால் ஜெயித்து இந்தியர்களாலேயே யாளுகிறார்கள் இங்கிலீஷ்காரர்கள் என்கிற அவச் சொல்லுக்கும், அவமானத்திற்கும் இலக்கான இழி நிலையிலே நாமிருக்கிறோம். இவ்வளவு மானஹானியையுஞ் சுமந்துகொண்டு எத்தனை நாளைக்குத் தான் அடிமைக்குத் தலைப்பாரம் என்பதாக வாழுகிறது?

மனிதன் சமூகப் பிராணி (Social being). காட்டு மிருகத்தைப்போலத் தனித்து வாழப் பிறந்தவனல்லன். மனிதனுக்கு மனிதன் அளவளாவி, அன்புத் தளையால் பிணிப்புண்டு, சகோதர பாவத்தோடு வாழ்ந்து முடிக்கவேண்டியவன். அதா அன்றிக் குரோதத்தாலும் விரோதத்தாலும் வீண் கலகத்தி லிறங்குவார்களானால் அந்தோ! அவர்கள் நாசமாய்ப் போக நாட்டுக்கே நல்லவர்களில்லை; நலஞ் செய்கிறவர்க ளில்லை. தேசத்தின் சத்துருக்களாகவும், சுமையாகவும் கருதப்பட வேண்டியவர்கள். அறக் கடவுளும் தேச மாதாவும் அப் புல்லுருவிகளை அழித்துவிடட்டும்.

இந்தியா பரந்த நிலம்; இந்தியர்கள் எல்லோருக்கும் ஏராளமான இடம் இங்கிருக்கிறது. ஒருவரோ டொருவர் மோதிக்கொள்ள வேண்டாம். அன்போடும் ஆதர்ஸத்தோடும் வாழ்ந்தால் இந்தியர்களுக்கு இயற்கை மாதா என்ன குறை வைத்திருக்கிறாள்? சோற்றுக்குப் பஞ்சமா? துணிக்குத் தரித்திரமா? வருணன் நல்ல மழையை வர்ஷிக்கின்றான்! பூ தேவி மூன்று போகத்தையல்லோ விளைவிக்

கின்றாள்! வாயு ஆரோக்கியக் காற்றை ஊதுகிறான்! கடல் மகள் உப்பையும், கடல்படு திரவியங்களையும் வாரி வாரி இறைக்கின்றாள்! பிரகிருதி தேவியால் நமக்கு நல்ல பிழைப்பிருக்கும்போது நாம் வெறுமே அன்பு செலுத்தி வாழாமல் ஒருவரை யொருவர் அடித்துக்கொண்டும், பகைத்துக்கொண்டும் வாழ்வதாவது? "உலகம் பெரிது; மனிதன் சிறியவன். ஒத்தாலன்றி எத்தாலும் வாழவே முடியாது" என்பது ஓர் பேரறிவாளர்தங் கருத்து. மனுஷ்ய அனுபவமும் அதைத்தான் திரும்பத் திரும்ப எதிரொலிக்கின்றது. "என்னுடைய மரக்கலமோ மிக மிகச் சிறியது; உமது கடலோ கரையற்றது. என்றாலும் பரம பிதாவே! என்னைக் காப்பாற்றும்" என்பது மாலுமியின் பிரார்த்தனை. இந்த எண்ணத்தைக் கருத்திருத்திப் பார்த்தால் இந்தியர்களாகிற நமக்குள்ளே சண்டை சத்தமிருக்கக் காரணமே யில்லை. "மனமுண்டானால் இடமுண்டு" என்னும் முதுமொழியும் முதுமொழியாமோ!

"மானுடருழாவிடினும் வித்து நடாவிடினும்
வரம்பு கட்டாவிடினுமன்றி நீர் பாய்ச்சாவிடினும்
வானுலகு நீர் தருமேல் மண்மீது மரங்கள்
வகைவகையா நெற்கள் புற்கள்மலிந் திருக்குமன்றே?

யானெதற்கு மஞ்சுகிலேன் மானுடரே நீவிர்
என் மதத்தைக் கைக்கொண்மின்!.........
..................உணவியற்கை கொடுக்கும்
உங்களுக்குத் தொழிலிங்கே அன்பு செய்தல் கண்டீர்."

என்னும் கவியரசனின் அன்பு மதத்தை உலகம் அனுஷ்டித்துவிட்டால் மனிதர் அமரபத மடைவார்கள்.

மனிதன் கூட்டங் கூட்டமாக வாழப் பழகியவன். புதிய காரியங்களிலே புத்தியைச் செலுத்திப் புதுமையான வாழ்க்கை செய்வதுதான் அவனுக்குப் பிரியம். பழையன கழித்துப் புதியன புகுத்தாவிட்டால் மனிதனுக்கு வாழ்க்கை ரஸிக்கிறதில்லை. நேற்றைய வாழ்வு இன்றைக்குத் தெவிட்டிவிடுகிறது. நாளைக்கொரு புதிய வாழ்க்கை; அப்புறம் ஒரு புதுக் கொள்கை. என்றாலும் அவற்றிலெல்லாம் சமூகத் தொண்டும், சமுதாய நலனும் பிரிக்கமுடியாது பின்னிக் கிடக்கும். மனுஷ்யன் ஒவ்வொருவனும் பிறருக்காகவே மூச்சு வாங்குகிறான்; மூச்சு விடுகிறான். மிருகத்தைப்போல் தனக்குத் தானே வாழுகிற ஸ்வபாவம் மனிதப் பிராணிக்கில்லை. பின்னர் ஏன் இந்தச் சண்டையும் சச்சரவும் ஏற்பட வேண்டும்?



நீ ஒரு இந்தியனா யிருப்பதற்காகப் பெருமை பாராட்டு (Be proud that you are an Indian) என்பது விவேகானந்த வாக்கு. ஆனால் அடிமை இந்தியன்—இணக்கமில்லா இந்தியன் சிறுமையை யன்றிப் பெருமையை யெங்ஙனம் அடைய முடியும்? நாம் முப்பத்தைந்து கோடிப் பேர்; உலக ஜனத் தொகையில் ஐந்திலொரு பங்கு மக்கள் இந்தியர்கள். என்றாலும் பூகோளத்தில் ஒரு புள்ளிமாத்திரமாயிருக்கும் பிரிட்டிஷ் தீவுகளுக்கு இப் பாதகண்டம் அடிமையென்றால் எவ்வளவு இழிவு? இதைவிட இழிவு, பாரதர்க்கு எஞ்ஞான்றும் வேறேது? ஆனால் கொட்டிய பாலில் முட்டி யழுவதாலாய பயனென் கொல்? சபிப்பதாலென்ன சாயுச்யங் கிடைத்துவிடப்போகிறதா? காரணங்கண்டு காரியத்திலிறங்கி நிவிர்த்தி காண்பதுவே அறிவுடையார்—ஆண்மையாளர்தஞ் செயலாம்.

பள்ளிப் பாடத்திலே ஒற்றுமைச் சிறப்பைக் கதை கதையாகப் படித்திருக்கிறோம். ஒரு காடு. அதிலே நான்கு மாடுகள். அவைகளுக்குள் உட்பகை யில்லாமல் ஒத்து வாழ்ந்தவரை வன ராஜனும் மிருகேந்திரனுமாகிற சிங்கத்தாலும் அவைகளை யடித்துத் தின்ன முடியவில்லை. தினந்தோறும் முயன்றது; தினந்தோறும் தோற்றது. என்றாலும் எருதுகளின் கொழுத்த தசை வன ராஜாவின் வாயிலே ஜலம் சொட்டிக் கொண்டே யிருந்தது; ஆசை அதை விட்டகலவில்லை. ஜீவப் பிரயத்தனங்களெல்லாஞ் செய்து பார்த்தது. எருதுகளிடத்திலே சிங்கத்தின் செயல் சாயவில்லை. கண்ணையுறுத்திக்கொண்டு, கொம்புகளைத் தீட்டி நீட்டிக்கொண்டு நாலு பக்கமுமாக நிற்கிற மாடுகளிடம் நெருங்கத் தானும் சிங்கத்தால் முடியவில்லை. அப்புறம் ஒரு நாள் வந்தது. அன்றைக்கு அந்த மாடுகளின்மீது சனிப் பார்வை விழுந்து அவைகளுக்குள் ஏதோ, எவ்வாறோ மாற்சர்யம் புகுந்து ஒன்றையொன்று பகைத்துக்கொண்டு வெவ்வேறு திசைகளில் பிரிந்துபோய் மேய்ந்தன. சிங்கம் அவைகள் நான்கையுங் கொன்று தின்று தீர்த்தது. ஒற்றுமை வலி ஓங்கியிருந்தவரை சிங்க பலத்தையும் எருதுகள் எதிர்த்துநின்றன. அந்த ஒற்றுமை போனபின் அவைகள் இரையாயின. இந்தியர் பிறநாட்டாரின் அடிமைகளான கதையும் இப்படித்தான். இதனை இல்லை யென்று யார் மறுக்க முடியும்?

இந்தியா இயற்கை வள நாடு. செல்வத்தில் இணையற்ற தேசம். பண்டைப் பெருமைகளையும், தொன்மையான நாகரீகத்தையும் சொல்லித்தானா தெரியவேண்டும்? அந்த மனோ லஹரிதமான சரித்திரத்தை உள்வெளியின் கண்ணே உண்டு கழித்து உன்மத்தம் பிடித்துத் தெய்வ நாட்களைப் பரவசத்தில் கழித்துக்கொண்டிருக்க இது சமயமில்லை. ஸ்வதந்திர தாகம் வெறிகொள்ளச் செய்கிறது;

நாட்டபிமானம் மலர்ந்து மனதைக் கவ்வுகிறது. மஹாத்மா மாஜினியின், மஹா வீரன் கரிபால்டியின் இத்தாலியாவைப்போல யௌவன இந்தியாவை ஐக்கிய இந்தியாவாக்க எமதுள்ளத் தணல் ஜ்வாலை கக்குகிறது.

எம் "பாரதி"யின் ஒவ்வொரு மலர்ச்சியின் முதல் இதழ்கடோறும் ஐக்கிய பாரத மணம், சுத்த சுகந்தமாகவும் சுபோதமாகவும் வீசுகிறது. ஒவ்வொரு மணியிலும் ஒற்றுமை ஒளி பிர்மப் பிரபையோடும் ஒளி பரப்புகிறது. **எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் இந்தியா மக்கள்; எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை, எல்லாரும் இந்நாட்டு மன்னர்** என்பதல்லவா 'பாரதி'யின் கொள்கை! 'பாரதி'யின் வேதம்! 'பாரதி'யின் பிரசாரம்! ஐக்கிய பாரதத்தை ஆக்குவதற்குத்தான் 'பாரதி' பிறந்தது; அதற்காகவே வாழுகிறது. கூடுமானல்—அவசியம் நேர்ந்தக்கால் ஐக்கிய பாரதத்திற்காகவே இறப்பினும் இறக்கும். வாழ்க பாரதம்! வாழ்க பல்லாண்டு! ஆள்க புவித்தலத்தி லெங்கள் அரசு!—அஹிம்சை அரசு!

"நாம் இந்தியர். இந்தியர் எல்லோரும் ஒரே குலம். பிர்ம குலமோ, க்ஷத்திரிய குலமோ, வைஸ்ய குலமோ, சூத்திர குலமோ, அன்றிப் பஞ்சம குலமோ அதுகளெல்லாம் எங்களுக்கு இல்லை. நாங்கள் எல்லாம் இந்தியர்கள் என்கிற ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். ஹிந்து இந்தியனும், இஸ்லாமிய இந்தியனும், சீக்கிய இந்தியனும், கிறிஸ்தவ இந்தியனும், பௌத்த இந்தியனும், சொராஸ்த இந்தியனும் எல்லாரும் இந்தியா மக்கள். எங்களுக்குள் தேசீயமாக எந்தவொரு ஏற்றஞ் சுருக்கமான நிறையும், எந்தவொரு கூடுதல் குறைச்சலான விலையுங் கிடையாது. "நாங்களெல்லாம் நாங்கள் பிறந்து வளர்ந்த நாட்டுக்கு மன்னர்கள்" என்கிற உணர்ச்சி உண்டாகிவிட்டால் நமக்கு சுயராஜ்யம் வந்து சேருகிற வழியை எவரால் மூட முடியும்? எவருக்கு நாம் அடிமையாயிருப்போம்? எவர்தான் நம்மை ஆளுகிறது?

இந்தியா ஒரு சந்தைக் கடை. உலகத்தில் உற்பத்தி செய்யப்படுகிற எல்லாப் பொருள்களும் இங்குதான் விற்பனையாக வேண்டும். இந்தியா ஒரு மடம். சமஸ்த ஜெகத்திலுமுள்ள மனுஷ்ய வர்க்கத்தாரெல்லாம் இங்கேதான் கூடுகிறார்கள். சகல சமயஸ்தரும், சர்வ பாஷையாளரும் இந்தியாவிலிருக்கின்றனர். இதைப்பற்றி நமக்குப் பொறுமையோ குரோதமோ யில்லை. சொந்த நாட்டிற் பிழைப்பற்றவர் எவர் வேண்டுமானாலும் வரட்டும். இந்தியா எல்லோருக்கும் இடங் கொடுக்கும். உலகத்தின் சங்கப் பலகை இந்தியா!



உலகத்தின் காமதேனு ஆரியாவர்த்தம்! உலகத்தின் கல்ப தரு பாரத வர்ஷம்! கர்ணன் பிறந்த காணி நிலம்! தர்மனிருந்த தர்மாசனம்! ததீசி சிறந்த தயாள பூமி! அக் காலத்திலும், இக்காலத்திலும், இனி எக்காலத்திலுஞ் சரி இந்தியா தனது கொடைக் கரத்தை உலகினுக்கு ஒளிக்காது. ஆனால் திருட்டுப் புத்தியோ, சுரண்டுஞ் ஸ்வபாவமோ, தீய சிந்தனையோ கொண்டு பாரத வர்ஷத்தை எவராவது பார்த்துவிடப்போகிறார்களா? சர்வ சமயத்திற்கும், சர்வ மனுஷ்ய ஜாதிக்கும், சர்வ பாஷைகளுக்கும் புக்ககமாகவும், பிறப்பகமாகவு மிருக்கின்ற ஹிந்துஸ்தானம் இனியும் ஏமாந்திராது. இந்தியர்களாகப் பிறந்தவர்களும், இந்தியர்களாக வாழ வந்திருப்பவர்களும் மாத்திரமே எங்கள் இந்தியாவி லிருக்கலாம்.

இந்தியாவின் 35 கோடி ஜனங்களில் ஹிந்துக்கள் 22½ கோடியும், முஸ்லீம்கள் 7½ கோடியும், ஏனைய சீக்கிய, கிறிஸ்தவ, பௌத்த, சொராஸ்திய மதத்தினர் 5 கோடியருமாவர். இந்த மத வேறுபாட்டினால் இந்தியர்களுக்குள்ளே உட்பகையும், பூசலும், புகைச்சலும் இருந்துவந்தன. என்றாலும் முழுக் குற்றத்தையும் மதங்களின் மீது மாத்திரம் சுமத்தி விடலாமா? அரசியல் கரங்களும் கலகக் கொள்ளி வைத்துக்கொண்டே வந்திருக்கின்றன. இதற்கு ஆதாரங்களும், சாக்ஷியங்களும் ஏராளமாக உண்டு. அவைகளை யெல்லாம் இங்கே எழுதிக்கொண் டிருக்கப் போவதில்லை. ஒரே யொரு சமீப நிகழ்ச்சியால் மாத்திரம் ஆளப்படுவோர் ஐக்கியமாக வாழ்வதை ஆள்கிறவர்கள் விரும்பவில்லை என்கிற உண்மையை விளக்குவாம்.

காந்திஜீதான் இந்தியாவின் கதிமோக்ஷம்; காந்திஜீதான் இந்தியாவுக்கு சுதந்திரம் தரப் பிறந்தவர். காந்திஜீயாலேதான் இந்தியாவின் அடிமைத் தளையை அறுத்தெறிய முடியும். அவனன்றி சுயராஜ்யமாகிற மஹா மாளிகையின் ஒரு கல்லைக்கூட எவரால் உயர்த்த முடியும்? சாம்ராஜ்யமோ பெரியது; வலியது. இந்தியர்கள் ஏழைகள்; வாயில்லாப் பூச்சிகள்; வலிமையற்றவர்கள். இந் நிலைமையில் இந்தியாவை அந்நியர் ஆதிக்கத்தினின்றும் விடுவிப்ப தென்றால் சாமான்யமா? ஆயுத பலமல்ல; ஆத்ம பலத்தால் காந்தியும், காந்தியின் ஆட்களும் பிராண பிரயத்தனஞ் செய்கிறார்கள். ஆத்ம பலத்தைப் பற்றிய சந்தேகம் யாருக்குமில்லை. விடுதலையைப் பற்றித் தீர்க்கமான நம்பிக்கையு மிருக்கிறது.

ஆறே ஆறு நாட்கள்—ஆறு தெய்வ தினங்கள் இந்தியர்களிடத்தே ஒரு புதிய ஜீவனை—நவ சக்தியை—பிராணப் பிரபையைக் கொடுத்து விட்டிருக்கிறது. மஹாத்மாவின் மஹா நோன்பால்—உயிர் உபாசனையால்—அன்பு வேள்வியால் இந்தியாவின் அடிவா

னத்தே ஐக்கிய பாரதத்தின் நிழல்—சாயை தோன்றுகின்றது. ஹிந்துக்களும், இஸ்லாமியரும், சீக்கியரும், கிறிஸ்தவரும் இந்தியர்கள் என்கிற எண்ணத்தில் தங்களுக்குள்ளிருக்கும் உட்பகையை, குரோதப் பான்மையை, சமயாதீதத்தை மறந்து சிநேகப்பான்மையாலும், ஐக்கிய பாவத்திலும் ஒன்று கூடிச் சந்தி பேசுகிறார்கள். நாடு முழுதும் இச் சமரஸத்திற்கு ஆதரவு செய்கிறது; ஆசி கூறுகிறது. தலைவர்களெல்லாம் நன் முடிவு காணாமல் விடுகிறதில்லை யென்கிற திடமான—தீர்க்கமான எண்ணத்தில் வேலை செய்கிறார்கள். கர்ம தேவதை கல் நெஞ்சுக்காரியல்ல. ஜெயலட்சுமியானவள் வெற்றியை நமக்கா ஒளிக்கப் போகிறாள்?

சகுன சாஸ்திரம் நமக்குச் சாதகமா யிருக்கிறது. இடமுங் காலமும் நமது பக்ஷம். பிரகிருதி தேவியும் இயற்கை மாதாவும் படிப்பினை தருகிறாள்; ஐக்கியோபதேசஞ் செய்துகொண் டிருக்கிறாள். சாந்த மூர்த்தி காந்தியின் சாக்ஷாத்காரமான தெரிசனத்தை சர்க்கார் தடுத்து விட்டிருந்தாலும் அவரது அருள் ஒளியின் தெய்வீக அலையை மறிக்க—ஆத்ம ஜோதியின் பிரவாகத்திற்கு அணைப் போட யாரால், எந்த ஒரு பலத்தால், எந்த சர்க்காரால் முடியும்?

ஐக்கிய மாகாணம். அதை நினைத்த மாத்திரத்திலேயே ஐக்கிய பாவம் ஸ்புர்த்தியாகிறது. ஐக்கிய மாகாணத்திலே ஐக்கிய பாரதம் ஆக்கப்படுகிறது. சந்தேகமேன்? சாச்வதமான ஐக்கிய தீர்த்தத்தால் ஹிந்து, முஸ்லீம், சீக்கியர்கள் இந்தியர்களாக ஞானஸ்நானம் (Baptism) செய்யப் பெறுவர். புனிதமான கங்கா தீரமுங் கைக்குள்ளாகவே யிருக்கிறது.

அலகபாத்து நகரியிலே சந்தி பேசப்படுகிறது. அதிலேயும் ஒரு விசேஷம். பல தேவ யாறுகளுக்குப் பிதுர்ஸ்தானமாக இருந்து மாரி காலத்தில் மழைப்ரவாகத்தையும், கோடை காலத்தில் தன்னகத்தே நிறைத்து வைத்திருக்கும் பனி முடிகளை உருக்கி வெள்ளமாகவும் சதா சர்வ காலமும் நீர்ப் பெருக்கை உலகினுக்கு உதவி வரும் கொடை வள்ளலாக இருக்கிற ஹிமய ராஜன் கங்கை, யமுனையாகிற இரண்டு புத்ரீ ரத்தினங்களைத் தனது கேந்திர ஸ்தானத்திலிருந்தும் புறப்பாடுறச் செய்தான். அவ் விரு நதிமகளிரும் சக்களத்தி பாவத்தில் மனஸ்தாபப்பட்டு வெவ்வேறு போக்கிலே பிரிந்து போய்க்கொண் டிருந்தார்கள். கங்கைக்கும் யமுனைக்கும் காதலன் ஒருவன்தான். வங்கக் கடலைத் தனது பிரேம ஸ்வாமியாக வரித்துக்கொண்டு அவனுடன் தானே பிரேம சங்கமம் ஆகிவிட வேண்டுமென்று கங்கா தேவி கிழக்கு நோக்கி யோட ஆரம்பித்தாள். யமுனையும் அதே கடலைத்தான் நாயகனை வரித்துக்



கொண்டோடுகிறாள். இந்தத் தேவ ரகசியத்தை அவ் விரண்டு நதிமகளிருக்கும் எவரோ சொல்லிவிட்டார்களோ என்னவோ இருவருக்கும் ஒரு உணர்ச்சி யெழுந்து, பிறந்தகமும் ஒன்று, புகுந்தகமும் ஒன்றாகப் போகிற தமக்குள் பகைமையே னிருக்க வேண்டும் என்கிற எண்ணம் உண்டாகி இப்பொழுது நமது தலைவர்களெல்லாம் எங்கே கூடி யிருக்கிறார்களோ—எங்கே சந்தி பேசுகிறார்களோ அதே யிடத்தில்—அலகபாத்திலேதான் கூடினார்கள். கங்கையும் யமுனையும் ஐக்கியமாகச் சேர்ந்து ஒரே யாறாகக் கூடுகிற பிரயாகை யென்கிற கட்டத்திலேதான், வெவ்வேறு மனப்பான்மையோடு போய்க்கொண் டிருந்த இந்து, முஸ்லீம், சீக்கியர் எல்லோரும் இந்தியர்கள் என்கிற ஒரே ஜாதியாராக, மதஸ்தராக மெய்ப்பாடுறுவதில் நற் சகுன மிருக்கிறதல்லவா?

இந்தியாவின் மண்ணிலே பிறந்து, இந்தியாவின் மண்ணிலே வளர்ந்து, இந்தியாவின் மண்ணிலேதானே சமாதியாகிப் போகிற இந்தியர்கள் எந்த ஜாதி, எந்த மதம், எந்தக் குலத்தைச் சேர்ந்தவர்களாயினும் இந்தியர்கள்தான். இந்தியாவைக் கவிந்திருக்கின்ற ஒரே வானத்தின் கீழ் குடியிருந்தும், இந்தியாவி லெங்கும் பரந்து வியாபித்திருக்கின்ற ஒரே ஆகாயத்தை ஸ்பரிசித்தும், இந்தியா முழுதிலும் வீசிக்கொண்டிருக்கின்ற ஒரே காற்றை உச்சுவாசித்தும், நிச்சுவாசித்தும், இந்தியாவின் பரந்த நிலப் பரப்பிலே விளைகின்ற தானிய மணிகளை உண்டும், இந்தியா வெங்கணும் பாய்ச்சல் செய்து முப்பத்தைந்து கோடியரின் தாகவிடாய் தீர்க்கின்ற ஒரே தண்ணீரைக் குடித்தும் உஜ்ஜீவிக்கின்ற ஹிந்துவோ, முஸல்மானோ, சீக்கியனோ எல்லோரும் இந்தியாவில் இருக்கும் வரை இந்தியர்கள்தான்; நிஸ்ஸந்தேகமாய் இந்தியர்களேதான். பின்னர் மனக் கசப்பேன்? சண்டை சச்சரவேன்? கைக்கலப்பும் கலகமும் என்னத்திற்கு?

இச் சமாதான மஹா நாட்டில் சமரஸச் சாரணர்களாக இருப்பவர்களெல்லாம் மஹா பண்டிதர்களும் மௌலானாக்களும் ஆவர். தலைமை வஹிக்கும் ஸ்ரீ விஜயராகவாச்சாரியாரும் மஹா மேதாவி. அரசியல் சாஸ்திரத்திலும், சட்ட சாமர்த்தியத்திலும், இலக்கிய பாண்டித்தியத்திலும், எல்லை யில்லாத அறிவாளி; அனுபவசாலி. 1920-ம் ஆண்டில் நாகபுரியிலே பிரதிஷ்டை செய்யப் பெற்ற 35-வது அகில இந்திய காங்கிரஸ் மஹா சபையிலே அக்கிர ஸ்தானம் வஹித்தவர். அவருடைய சன்னிதானத்திலேதான் தீண்டாமைப் பிரச்னை காங்கிரஸ் பீடத்தில் பலி செய்யப்பட்டது. மதத் தகராறைத் தீர்த்து வைக்கும் பஞ்சாயத்திற்கும் அவரேதான் தலைமை

பூண்டிருக்கிறார். விசால பாரதம் அவரது தீர்ப்புக்காகக் காத்திருக்கிறது. ஒத்துழையாமை விரதமெடுக்கப்பட்டதும் அவரது திருச் சமுகத்திலேதான். சேலஞ் செய்த பாக்கியமாக இருக்கின்ற ஸ்ரீ ராஜாகோபாலாச்சாரியார் காங்கிரஸின் நிர்வாகத் தலைவராகவும், சேலத்தின் தவப்பயன் ஸ்ரீ விஜயராகவாச்சாரியார் சமாதான மஹாநாட்டின் தலைவராகவும் இற்றைய இந்தியாவில் விளங்குவது தமிழ் நாடு பெற்ற பாக்கிய மென்று பூரிக்கின்றோம். இவ் விரு ஆச்சாரியார்களும் ராஜ விஜயம் பெற்று, ஜெய சம்பன்னராய்த் தமிழ் நாடு திரும்ப வேண்டுமென்று பிரார்த்திப்போம்.

மஹா நாட்டைக் கூட்டி வைத்த பண்டிதருக்கும், மௌலானாவுக்கும் நமது பாரதர் பெரிதுங் கடப்பாடுடையர்; காணிக்கையுஞ் செலுத்துவர்; அன்பாலும், ஆதர்ஸத்தாலும் ஆசி கூறுவர். மௌலானா ஷவுக்கத் அலியார் புனர் ஜென்மமெடுத்து அரசியல் உலகத்திற் புகுந்ததில் பலர் வியப்புறலாம். மண்ணாலும் புற்பூண்டாலும் போர்த்தப்பட்டிருக்கும் எரிமலை எந்த நேரம் வெடிக்குமென்று எவரால் சொல்ல முடியும்? தேசீயம் என்கிற நெருப்பு ஒருவருள்ளே பிடித்துக்கொண்டால் அப்புறம் அது அவியவே அவியாது—அவிக்கவும் முடியாது. அலி சகோதரர்களின் ஹிருதய அறைகளிலே ஸ்வர்க்கீய மாதா—வீரத் தாய் **பீகம் பீ அம்மன்** ஏற்றிவைத்த வீர விளக்கு அணைந்துவிடு மென்று அனுமான மாத்திரத்திலாவது நினைத்துவிடலாமா? "எனது ஷவுகதும், முகமதும் தங்களுடைய மதத்திற்காவது, தேசத்திற்காவது துரோகம் செய்வார்களானால் அவர்களுக்கு அமுதூட்டி வளர்த்த இக் கரங்களிலே வாள் பிடித்து அவர்களின் நெஞ்சைப் பிளந்து வீழ்த்துவதுடன், அன்னாரையீன்ற இவ் வுதரத்தையுங் கிழித்தெறிவேன்" என்ற வீரத் தாயின் இரத்தத்திலே பிறந்த ஷவுக்கத்தலி—இந்து முஸ்லீம் இணக்கத்திற்காகப் பாடுபட்டுப் பரகெதியடைந்த பரமாத்மாவும், "என்னைச் சிறை செய்தவனை நான் சிறை செய்யும் அதிகாரம் பெறுவதுதான் சுத்த சுயராஜ்யம்" என்கிற வியாக்கியானத்தைச் செய்தவனும் "இந்தியாவுக்காக சுதந்திரத்தைப் பெற என்னால் முடியாவிட்டால் இந்த என் சரீரம் இங்கிலாந்திலேதானே சமாதியாகட்டும்" என்று கூறிக், கூறியாங்கே செய்து தீர்த்தவனும், **பைத்துல் முகத்தி** ஸென்னும் புண்ணிய பூமியாகிற **உமர் பள்ளி**யிலே தூங்காமற் தூங்கிச் சுகம் பெறுகிறவனுமாகிற மஹா வீரன் முகமதலியின் முன்னவன் ஷவுகத்தலியின் பேரிலே சந்தேகத்திற் கிடமில்லை. காந்திஜீ அவரைச் சதா சர்வ காலமும் நம்பிக்கொண்டே யிருக்கிறார். இரண்டாவது வட்ட மேஜைக்குக் காந்திஜீ சென்றபோது "என் ஷவுக்கத்தை நான் எந்த நிமிஷமும் என் வசம் ஆக்கிக்கொள்ளுவேன்" என்றார்.



சமீபத்தில் சமாதான மஹாநாடு சம்மந்தமாகக் காந்திஜீக்கு மௌலானா தந்தி கொடுத்திருந்தார். அதற்குக் காந்திஜீ "உங்கள் சட்டைப் பையைப் பாருங்கள். அங்கே காந்தி யிருக்கக் காணுவீர்கள்" என்கிற பதிலை விடுத்தார். இவ்விரு காரணங்களாலும் மஹாத்மா மௌலானாவின் பேரில் பிரியாத நம்பிக்கை கொண்டுள்ளா ரென்பது நன்கு தெரிகிறது. காந்தியின் நம்பிக்கை அகில பாரதத்தின் நம்பிக்கையா யிருக்கட்டும்.

"நாம் கௌரவமான சமாதானத்தைப் பெற்றுவிடப் போகிறோம். கேவலம் தாழ்மையான சமாதானமல்ல; உண்மையான சமாதானம்—நிச்சயமான சமாதானத்தை நாம் அடையப் போகிறோம். ஹிந்துக்களும், முஸல்மான்களும் ஐக்கியப்பட்டுவிட்டால் இந்தியாவின் மனங் குளிரும். நாம் அரசியலில் அடிமையா யிருக்கிறோம்; கேவலமாகத் தாழ்த்தப்பட் டிருக்கிறோம். ஆகாரங் கேட்டால் கல்லடி கிடைக்கிறது. ஆகாரத்திற்கு ஆகாரமே வேண்டுமானால் அதற்கு ஒற்றுமைதான் மூல மந்திரம்" என்பது மௌலானாவின் மணிவாக்கு. ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு. இல்லையேல் இந்தியருக்கு இன்னும் நல்ல காலம் பிறக்கவில்லை யென்றுதான் சொல்லுவோம்.

ஐப்பசிமீ 20-ம் நாள் கூடிய மஹாநாடு நாளிது பத்தாகியும் பூர்த்தி பெறவில்லை. அந்தோ! பேரம் என்னத்துக்கு? உடன் பிறந்த சகோதரர்களுக்குள் கொஞ்சம் கூடுதல் குறைச்சலாக விஸ்தி செய்துகொண்டால் கெட்டுப்போகிற தென்ன? பட்டும் பட்டும் பாடங் கற்றுக்கொள்ளவில்லை யென்றால் எவ்வள வெவ்வளவு இழிவு! ஊரை யிரண்டுபடுத்திக் கூத்தடிக்கும் மூன்றாவது மனிதனுக்கு இன்னுமா இடங் கொடுத்துக் கொண்டிருக்கப் போகிறார்கள் இந்தியர்கள்? ஒரு தொழு மாடுகளுங்கூடக் குதித்துக்கொண்டாலுங் கூடிக்கொள்ளுகின்றனவே? இந்தியர்கள் எந்த நேரமும், எந்தக் காலமும் ஒருத்தரை யொருத்தர் குத்திக்கொண்டே யிருந்தால் என்றைக்குத்தான் கூடிக்கொள்ளப் போகிறார்கள்? பிரித்தாளும் பிரிட்டிஷ் கொள்கைக்கு இனியும் உடந்தையாகவோ, உறுதுணையாகவோ நிற்குமானால் இந்தியாவுக்கு விமோசனமில்லை. சர்வ நாசம் நிச்சயம்.

மௌலானா ஷவுக்கத்அலி எவ்வளவோ கேட்டுக்கொண்டும் காந்திஜீயை விடுதலை செய்யவில்லை யென்று சர்க்காரை நாம் குறை கூறலாமா? ஒற்றுமைப் பஞ்சாயத்தில் மகாத்மாவின் திருமேனி தோன்றிய மாத்திரத்திலே—திருமுக விலாசம் பிரசன்னமான உடனே—ஆத்மமூர்த்தி தெரிசனந் தந்ததும் ஒற்றுமை ஒளி நிச்சயமாகவும், நிரந்தரமாகவும் பிரகாசித்துவிடும் என்பதைத் தீர்க்கமாக

# வித்தியாபி விருத்தி முறைகள்.

திரு. இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை அவர்கள்.

பண்டை நாளில் நம் நாட்டுக் கல்விப் பயிற்சி மறுமைக்கும், இம்மையிற் பல திறப்பட்ட வாழ்க்கைக்கும் பொருந்தியதாய் இருந்தது. "ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்" வளர்த்து உணர்விக்கும் "அம்மை" கலை மகளாக வணங்கப் பட்டாள். அவ் வித்தியா தெய்வம் ஐம்புலன்களுக்கும் இன்பம் தருகின்ற பெண்ணின் உருவத்தையே தனது உருவமாகக் கொண்டது; அது ஈடும் பாடும் வாய்ந்தது; அழகு நிறைந்தது. அதன் குளிர்ந்த பார்வையும், வீணை கானமும் பண்டித பாமரர் எவரையுந் தன் வயப் படுத்துவன.

---

அறிந்துதான் சர்க்கார் பட்சமாக அத் தப்புச் செய்யப்படவில்லை. "இந்தியர்கள் பல ஜாதியாரிடையும், பல மதஸ்தினரிடையும் இருந்து வருகின்ற மனஸ்தாபத்தையும் பிரிவினையையும் வளர்த்து வருவது தான் நமது வேலை. ஒன்று சேர்க்க ஒருபோதும் முற்படக் கூடாது. பிரித்தாளுங் கொள்கையை பிரிட்டன் கைக்கொண்டிருக்கும் வரை இந்தியா நம்முடையதுதான்" என லெப்டினண்டு கர்னல் ஜான் கோக் என்பவன் தனது அரசாங்க நிருபம் ஒன்றில் எழுதி யிருக்கிறான். லார்டு எல்பின்ஸ்டோனும் அதே கொள்கையைத்தான் வற்புறுத்துகிறான். இப்பொழுது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிரதம மந்திரியாயிருக்கிற மக்டொனால்டும் தனது **இந்தியாவின் எழுச்சி (Awakening of India)** என்ற புத்தகத்தில் "சிம்லா சர்க்காரும், லண்டன் சர்க்காரும் இந்து முஸ்லீம் பிரிவினையை வெகுவாக வளர்த்துவிட் டிருக்கிறார்கள்" என்றெழுதியிருக்கிறார். இன்னும் எத்தனையோ மேற்கோள்கள் எடுத்தாளலாம்; தேவை யில்லை. இப்பொழுதைய இந்தியரில் எவருக்கு இச் சூழ்ச்சி தெரியாமலிருக்கிறது?

ஐக்கிய மண்டலத்தில் ஐக்கிய பாரதம் ஆக்கப் பெறுவதை இப்பொழுது ஜீவிதமாயிருக்கிற ஒவ்வொரு இந்தியனும் இனிமேல் பிறக்கப்போகிற ஒவ்வொரு இந்தியனுங்கூட எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். வாழ்க பாரதம்! வாழ்க ஐக்கியம்! வாழ்க ஐக்கிய பாரதம்!

---



கல்வி ஒன்றினா லன்றிக் கேள்வி, காட்சி, அநுபவம் இவைகளாலும் வித்தியாபி விருத்தி யாகலாம். அக் கல்வியும் யாதாமொரு பள்ளியின் மூலமாகத்தான் பெற்றாக வேண்டு மென்பதில்லை; என்றாலும், பள்ளிக் கல்வியே வித்தியாபி விருத்திக்கு விசேஷ கருவியாக இருத்தலினால் பள்ளிக் கல்வி முறையின் குறைகள் வித்தியாபி விருத்தியை பெரிதும் பாதிக்கின்றன. ஆகவே தற்காலப் பள்ளிகளில் அவைகளை நீக்கித் திருத்திய முறைகளை அநுசரிக்க வேண்டியது அவசியமாகிறது.

பண்டைக் காலப் பயிற்சி பிரணவ (ஓம்) வழிபாட்டுடனும், தன் படிப்பும் உலகும் நன்றாக வேணுமென்கிற தூய நினைப்புடனும், குரு வணக்கத்துடனும், குருவே துணை யென்ற உறுதி யுடனும், துவக்கியது பண்டைக் கால குரு சிஷ்ய பாவ வித்தியாபி விருத்திக்கும், இம்மை மறுமை வாழ்க்கைக்கும் பொருத்தமாய் இருந்தது. பண்டைக்காலக் குருவே, இம்மை வாழ்க்கைக்கு ஓர் வீரத் தலைவராயும், உத்தமத் தோழராயும், மறுமை வாழ்க்கைக்கோர் சிறந்த துணைவராயும் விளங்கி வந்தார். பண்டைக் குருகுலவாசம் மனோ சாந்தியையும், எவ் வுயிரையும் தன்னுயிர் போற் பேணுந் தன்மையையும், சமுதாய நன்மையில் ஆர்வத்தையும் வளர்த்து வந்தது.

ஒருவனுக்கு உலகமெலாஞ் சித்திக்கினும் அவன் ஆன்ம லாபத்தை இழப்பானாயின் பிறவியின் பயனை இழக்கின்றான். சமய ஞான போதனை இல்லாதபோது உள்ளம் மலர்ந்து மணப்பதற்கில்லாமலும், ஒழுக்கமும், சமூகத் தொண்டில் ஆர்வமும் அமைவதற்கும், பலப்படுவதற்கும், சந்தர்ப்பம் வாய்ப்பதற்கில்லாமலும் போகின்றது. இயற்கை அழகிலும், இசையிலும், ஓவியத்திலும், மனதைக் கவியச் செய்யாத கல்வி, மனோ சாந்தியைத் தரத் தக்கதில்லை. மறுமைக் கன்றி இம்மையிலும், ஊக்கமும், வீரமும் இன்றி ஏதும் சாத்திய மாவதில்லை. வறுமையிற் செம்மை நம் நாட்டைப்போல் வேறெங்கும் மிளிர்ந்ததில்லை. தரித்திர நிலைமையிலும் தம் வாழ்க்கையில் திருப்தியும், தெய்வம் பேணலும், சுற்றந் தழுவலும், எவர்க்கும் உபசாரஞ் செய்தலும், வேறெங்கும் காண்பதரிது. தற்காலக் கல்வி அவைகளையும் கெடுத்து வருகிறது. சுருங்கச் சொல்லின், தற் காலக் கல்வி, அநேகமாய் தெய்வத்திற்கே இடந் தராததாய், ஆன்ம ஞான மற்றதாய், ஒழுக்கத்தின் உயர்வைக் கருதாததாய், வீரம் போற்றாததாய், விசாலமான அறிவைப் புகட்டாததாய், ஏதேனும் ஒரு படியாய் வளர்ந்து செல்வதாய், ஜட உலகத்தையே போற்றுவதாய், குறுகிய அறிவையும் தன்னலத்தையும் வளர்ப்பதாய் இருக்கக் காண்கிறோம்.

நம் நாட்டில் ஜாதி சமய பேதங்கள் பலவாறாக இருப்பதனால் சமய ஞான போதனை சாத்தியமில்லை யென்று கருதுவதற்கு இட

யில்லை. எச் சமயத்திலும் ஊடுருவிச் செல்லும் சிறந்த கருத்துக்களையும் அந்தந்த சமயத்திற்கே உரிய கருத்துக்களையும் சமரச பாவமாய் போதிப்பது சிரமமான காரியமல்ல. அதுபோன்றே எவரும் போற்றும் வீரர்கள், பெரியார்களுடைய சரித்திரங்களையும் அந்தந்தக் கூட்டத்திற்கே உரிய பெரியார்களின் சரித்திரங்களையும் சொல்லுவதும் சாத்தியமான காரியமே. சமூக ஊழிய வேலைகளில் உபாத்தியாயர்களும், வயது வந்த மாணவர்களும் ஈடுபடலாம்; சாரணப் படைகளும் எங்கும் வளர்க்கப்படலாம். பண்டை நாள் விளையாட்டுக்களும், தற்காலத்திற்கேற்ப அமைத்து ஆடப்படலாம். அதி காலையில் தனித்துச் செய்யக்கூடிய தேகப் பயிற்சிகளை வழக்கமாகச் செய்து வரலாம். அதிலும் விசேஷமாகத் தொகுதி தொகுதியாக மாலையிலும், நிலவிலும் ஆடும் விளையாட்டுகளால் சேர்ந்து ஆடுவதின் மூலம் பலரைத் தன் வழி நடத்தும் திறமையையும், செய்ய வேண்டியது இன்னதெனச் சடுதியில் முடிவு செய்து அப்படியே செய்யும் சாமர்த்தியத்தையும் சமய மறிந்து தன் தோழர்களுக்கு வேண்டியவற்றைச் செய்து உதவுந் திறத்தையும் வளர்ப்பதும், ஜாதி சமய பேதமின்றி ஒரே குறிக்கோளைக் கொண்டு செலுத்துவதில் ஆர்வமுடைய தோழர்களாக இருந்து வருவதும் அவசியமாகும். உயர்தரக் கலாசாலை ஆடவ மாணவர்கள் இராணுவப் பயிற்சி பெறுவதும், ஓர் ஒழுங்கிற்கு உட்பட்டு நடப்பதற்குச் சாதகமாகும். பள்ளி மாணவர்களன்றி மற்றும் பாலியர்களும், வயது வந்தவர்களும் விளையாடுவதற்குச் சௌகரியமாக கிராமங்கள் தோறும் பொது இடங்கள் ஒன்றேனும், பட்டணங்களில் பலவும் இருத்தல் வேண்டும். எங்கும் இயற்கை அழகையும், புஷ்பங்களின் கண் கவர் வனப்பையும், மணத்தையும், இசையையும், ஓவியத்தையும் எவரும் அநுபவிப்பதற்குப் போதிய வசதிகளிருத்தல் வேண்டும்.

இயற்கை அழகும், இலக்கியமும் போன்று தன்னளவிலேயே இன்பந் தரும் இசையிலும், சிற்பத்திலும், ஓவியத்திலும், எவரும் ஈடுபட வேண்டியது அவசியமாகும். ஆகவே எல்லா ஆரம்பக் கல்விச் சாலைகளிலும் உருவம் செய்தலும், சித்திரம் வரைதலும், வர்ணந் தீட்டலும் கற்பிக்கப்பட வேண்டும்.

நம் நாடு விவசாய நாடு. விவசாய விருத்தியை வைத்தே பெரிதும் பிழைக்கக்கூடிய நாடு. மற்றுந் தொழில்கள் அநேகமாய் விவசாய விருத்தியால் விருத்தியாகக் கூடியதும், விவசாய முயற்சிக்கு அநுகுணமாக இருக்கக் கூடியதுமன்றித் தன் தன் அளவிலேயே பெரிதும் பயன் தருவன அல்ல. ஆகவே நம் நாட்டின் கல்வி விவசாய விருத்திக்கு ஏற்றதாயும், கல்வி பயில்வாரிற் பலரையேனும் விவசாய முயற்சிகளிலே ஈடுபடச் செய்வதாயும் இருத்தல் வேண்டும்.



ஆனால் தற்காலக் கல்வியோ, மாணவர்களைத் தங்கள் முன் பின் வாழ்க்கைக்குச் சுற்றுப் புறத்தினின்றும் பிரித்துத் தங்கள் நிலைமைக்கு அதிகமான செலவில் சுகவாசிகளாக எத்தகைய பழக்க வழக்கங்களும் அழுத்தமாகப் பதியக் கூடிய பருவத்தில் வேண்டாப் புதிய பழக்க வழக்கங்களில் பழக்கித் தங்கள் குலத் தொழிலில், விருப்பமற்றவர்களாகவும், சேவகா விர்த்தி தவிர்த்து வேறு எத் தொழிலிற்கும் லாயக்கில்லாதவர்களாகவும் ஆக்கிவிடுகிறது. சர்வகலாசாலைப் பட்டதாரிகளுக்கும், சாதாரணமாக மற்ற ஜனங்களின் நிலைமை இன்னதென்றும், அவர்களுக்குத் தாங்கள் என்னென்ன வகையில் உதவலாமென்றும் தெரிகிறதில்லை அவர்களுடைய படிப்பும் விவசாய விருத்திக்கும், கிராம வாழ்க்கைக்கும் முற்றிலும் பொருந்தாததாகவேயிருக்கிறது.

தற்காலக் கல்வியானது பெரும்பான்மையாய்ச் சர்க்கார் உத்தியோகத்தை எதிர்பார்த்தே பயிலப்படுகின்றதாயினும், கல்விச் சாலைகள் அதைத் தங்கள் நோக்கமாகக் கொண்டதில்லை. அந்த நோக்கத்திற்கும் அவை சரிவரப் பொருந்தியதாயுமில்லை. இது பற்றியே வேறு தனிப் பரீக்ஷையிலுந் தேறுகிறவர்களை மட்டும் சர்க்கார் உத்தியோகங்களுக்கு எடுத்துக்கொள்வதாயிருக்கிறது. அப்படிச் சர்க்கார் உத்தியோகம் பெறுபவர்களும் தங்கள் முன் வாழ்க்கையினின்றும் அறவே பிரிக்கப்பட்டவர்களாகவும், பட்டண வாச விருப்பம் தவிர்த்த வேறு எவ்வித வாழ்க்கையிலும் லக்ஷியமில்லாதவர்களாகவும் காணப்படுகிறார்கள். தற்காலக் கல்வி பயின்றவர்களுக்குச் சர்க்கார் உத்தியோகங்களும், கிடைக்காது போகும்போது அவர்கள் எதற்கும் உதவாக் கழியாக—பணத்தைச் செலவழித்துப் படித்தும் பட்டினி கிடந்து சாகிறவர்களாக ஜன சமூகத்தில் நின்று தவிக்குங் காட்சி பரிதாபகரமாக இருக்கிறது.

மாணவர்களும் உபாத்தியாயர்களும், முக்கிய விவசாய காலத்தில் தங்கள் தங்கள் கிராமத்திலேயே இருக்கக் கூடியதாகவும் தங்கள் விவசாய வேலைகளைத் தாங்களும் நேரில் கவனிக்கக் கூடியதாயும் கல்விச் சாலை விடுமுறை நாட்கள் அமைய வேண்டும். வியாபாரக் கலாசாலைகள் தவிர்த்த மற்ற எல்லாக் கலாசாலைகளுக்கும் நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்கள் விடுமுறையாக இருக்கலாம், மற்றும் நாட்களிலும் அக்கம் பக்கம் விவசாய வேலைகளுக்குத் தக்கதாகப் பள்ளிக்கூட நேரங்கள் அமைக்கப்படலாம்.

ஆரம்பக் கல்விச் சாலைகளிலும், 6-வது பாரம் முடிய வுள்ள உயர்தரப் பாடசாலைகளிலும் பயிலும் படிப்பு பின் வாழ்க்கைக்குப் பிரயோஜனமாயிருக்கும்படி செய்தாலொழிய இரண்டொரு வகுப்புக

ளோடு படிப்பை நிறுத்திக்கொள்ளும் வழக்கமும் நிற்பது கஷ்டமாகும். ஆகையால் அவைகளில் இயற்கைப் பொருட் பாடமும், தோட்ட வேலையும், ஆரம்ப சாஸ்திரமும் அவசியம் கட்டாயப் பாடங்களாக இருத்தல் வேண்டும். எண்ணும் எழுத்தும் வாழு முயிர்க்கு இரு கண்களாகும். ஆதலால் அவைகளில் ஆரம்பக் கணிதமும் நாட்டு இலக்கியமும் கட்டாயப் பாடங்களாக இருத்தல் வேண்டும். எந்த வகுப்பிற்கும் நாட்டிலக்கியப் பயிர்ச்சியோ டன்றி வேறெந்த இலக்கியப் பயிற்சியும் தனித்து இருக்கக் கூடாது. ஆரம்பக் கணிதமும் கூடிய வரையில் விவசாயத்தை ஒட்டியதாக இருத்தல் வேண்டும். காட்டும் படங்களும், சொல்லும் கதைகளும், விவசாய வாழ்க்கையைப் பற்றியும், ஆடு மாடுகளைப் பற்றியும் மிகுதியாக இருக்கலாம். ஏகதேசம் மாணவர்களைத் தோட்டம், தோப்பு, துறவுகளுக்கும், நஞ்சை புஞ்சைகளுக்கும், ஆறு குளங்களுக்குங் கூட்டிப் போய் விவசாய முறைகளை விளக்கிக் காட்டலாம். பெற்றோர்களுக்கும் மற்றும் வயது வந்தவர்களுக்கும் மழைக் குறிப் பறிதலையும் விவசாய விஷயங்களையும் போதிக்கலாம். வாசகப் புஸ்தகங்களிலும், விவசாய விருத்திக்கான விஷயங்களும், இயற்கை விநோதங்களும், சரீர அமைப்பு, சுகாதாரம் முதலியது போன்ற பல பிரயோஜனமான விஷயங்களும விரவி யிருத்தல் வேண்டும். பாலிய மாணவர்களுக்குப் போதிக்கும் உபாத்தியாயர்கள் மாணவர்களின் மனோ நிலைமை கண்டு அவரவர்கள் நிலைமைக்குத் தக்கதாகப் பயிற்றுவிக்கும் சாமர்த்தியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். கையெழுத்தும், உச்சரிப்பும், பிசகின்றி எழுதலும, எவர்க்கும் தக்க துணையாகப் பின் வாழ்க்கையில் உதவக்கூடும். ஆதலால் பாலியம் முதலே இவைகளில் கவனம் செலுத்திவர வேண்டும்.

விவசாயிகள் தங்களின் தீராத் தரித்திரத்திற்குக் காரணம் அறியாராய், எல்லாம் விதிபோல் நடக்குமென் றிருக்கிறார்கள். அவர்களின் கஷ்டங்களைத், தவிர்த்து அவர்களை நல்ல நிலைமைக்குக் கொண்டுவரும் வழிகளை அறிவார் இல்லை; அறிந்தாலும், அவைகளை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வருவார் இல்லை. பாலியத்தில் புகட்டப்படும் விஷயங்களே பின் வாழ்க்கையைத் தன் வய மாக்குகிறதென்கிற அபூர்வ தத்துவ முணர்ந்த பெரியார்கள் எல்லாம் தங்கள் தங்கள் நாட்டை எவ் வகையாகத் திருப்ப விரும்புகிறார்களோ அத்தகையதான கல்வியையே தங்கள் நாட்டில் பெரிதும் புகட்டுகிறார்கள். நம் நாட்டிலும் கல்வி இலாக்காத் தலைவர் நம் நாட்டினராகவும், நம் நாட்டின் நிலைமையும், பிற்கால வாழ்க்கை அமைய வேண்டிய மாதிரியையும் நன்கு தெரிந்தவராகவும், இருந்திருப்பாரானால். இது வரையுமே கல்விப் பயிற்சி நல்ல விதமாக மாறி யிருத்தல் கூடும். இனிமேலும் அவ்விதம் அமையாதவரை நம் நாடு க்ஷேமமடையப் போவதில்லை.



சென்னை கவர்னராக இருந்த "சர் தாமஸ் மன்றோ" மாணவர்கள் நாலணா முதல் எட்டணா வரை பள்ளிச் சம்பளந் தருகிறார்கள் என்றும், அந்த வகையில் கிராம உபாத்தியாயர்களுக்கு ரூபாய் ஏழு வரை கிடைக்கக்கூடு மெனவும் சர்க்காரிலிருந்து அவர்களுக்கு மாதம் ஒன்பது ரூபாயாவது சம்பளங் கொடுக்க வேண்டு மென்றும் 1826-ம் வருஷத்திய தனது குறிப் பொன்றில் எழுதுகிறார். இப்போதைய கால நிலையை உத்தேசிக்கும்போது ஆரம்பப் பள்ளி ஆசிரியருக்குக் கிடைக்கும் ஊதியம் அவர் சிபார்சில் நாலில் ஒரு பங்காகக் கூட இருப்பதாகச் சொல்வதற் கில்லை. ஆரம்ப ஆசிரியர்களின் பொதுக் கல்விப் பயிற்சி இன்னும் அதிகப்படியாக இருத்தல் வேண்டும். மற்றும் எந்த உத்தியோகம் பார்ப்பவர்களைக் காட்டிலும் போதகாசிரியர்களாக இருப்பவர்களே ரொம்பக் கெட்டிக்காரர்களாக இருக்க வேண்டியது அவசியம். ஆதலால் சம்பளம், ரஜா, படிப்பு வசதி முதலியவைகள் மற்ற உத்யோகங்களுக்கு ஏற்பட்டிருப்பதைக் காட்டிலும், அதிகப்படியாக இருந்தால்தான் அதிகத் திறமைசாலிகள் யாவரும் போதகாசிரியர்களாக வரக் கூடும்.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் மாணவர்கள், எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டே வருவதாக இருந்தாலும், படிப் பின்மையின் விதாசாரம், நாளுக்கு நாள் குறைந்ததாயில்லை. ஜனப் பெருக்க விதாசாரத்திற்குத் தக்கதாகப் பள்ளி வசதிகள் அதிகப்படாத வரை, படிப்பின்மை விதாசாரம் அதிகரித்துக் கொண்டேதான் வரும். இலவசக் கட்டாயக் கல்வி எங்கும் ஏற்பட வேண்டும். 5-வது வகுப்புவரை கட்டாயம் துவக்கி எட்டு வகுப்பு முடிய கட்டாயம் படித்தாக வேண்டும். எல்லா ஆரம்பப் பள்ளிகளும், ஸ்தல ஸ்தாபனங்களால் நடத்தப்பட வேண்டும். செலவை ஸ்தல ஸ்தாபனங்கள் ஒரு பங்கும், அரசாங்கம் மூன்று பங்குமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். பரோபகார ஸ்தாபனங்களால் நடத்தப்படும் பள்ளிகள் தவிர்த்து சொற்ப சர்க்கார் உதவி பெற்று நடக்கும் எந்தப் பள்ளியும் சரிவர நடக்கக் கூடியதில்லை. இராணுவத்திற்குச் செலவழிக்கும் பணத்திற்கும் அதிகமாய்க் கல்விக்குச் செலவழிக்கலாம். அதனால் அளவிறந்த பிரயோஜனமுண்டு.

குருடர்களுக்கும், ஊமை, செவிடர்களுக்கும், அபூர்வ விவேகிகளுக்கும், தனித்த பள்ளிக்கூடங்கள் போதுமான அளவு இருக்க வேண்டும் ஏதேனும் இரண்டொரு பாடங்களில் மந்தமா யிருப்பவர்களுக்கும், அப்பேர்ப்பட்ட மந்தத்தை நீக்கிப் போதிப்பதற்கான சௌகரியங்கள் சிற்சில பள்ளிக்கூடங்களிலாவது இருத்தல் வேண்டும்.

பள்ளிக்கூடங்கள் சூரிய வெளிச்சம் பாய்வதாய், காற்றோட்டம் உள்ளதாய், குளிர்ந்த கூரையுடையதாய்த், தோட்ட வேலைக்கும் விளையாட்டிற்கும் விசால இடமுடையதாய் இருத்தல்வேண்டும். பலப் பல போதன முறைகளின் உட்கருத்தும், மாணவர்கள் தாங்களே எதையும் கவனிக்கவும், எதைப் பற்றியும் நினைக்கவும், இப்படிச் செய்வதென முடிவுசெய்யவும் பழக்குவதாகவே இருப்பதால், கால தேச வர்த்தமானங்களுக்கும், பள்ளியின் பண நிலைமைக்கும் தக்கதாக ஏதேனும் இரண்டொரு முறைகளையே அநுசரிப்பதாக இருந்தாலும், பல முறைகளின் உட் கருத்துக்களும் விரவியிருத்தல்வேண்டும். ஆனால் இலக்கணத்தை மீறியதும் கர்ணகடூரமானதுமான 'டப்பி, டமார' முறை எவ்வகையிலும் பொருந்தாது. உபாத்தியாயர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கலாமேயன்றித் தங்களுக்குத் தெரிந்ததையெல்லாம் மூளையில் வலுவந்தமாய் திணிப்பவராக இருத்தல் கூடாது. எதையும் குருட்டுப் பாடம் செய்வது கூடாததேயன்றி ஞாபக சக்தியை முறையாக வளர்க்கவேண்டியதும் அவசியமேயாகும்.

அதி பாலியப் பெண்களும், வயதுவந்த பெண்களும், வேறு தனிப் பள்ளிக்கூடங்களும், வகுப்புகளும், அமையாதபோது தீராப் பொறியாக ஆடவர்களோடு கலந்து வாசிக்கலாம். இடைத்தரப் பெண்கள் ஆடவர்களோடு எக் காரணத்தை யிட்டும் கலந்து வாசிப்பது உசிதமல்லாத காரியமேயாகும். முகமதியர்களுக்கு என்றும், ஆதி திராவிடர்களுக்கு என்றும் தனித்த பள்ளிகள் அமைப்பதும் வேண்டாத காரியமேயாகும். அவர்கள் இருப்பிடங்களிலும் அவைகளை அடுத்தும், அவர்கள் விரும்பும் பாடங்கள் போதிக்கும் பள்ளிகள் போதுமான அளவு இருக்கவேண்டியது அவசியமேயன்றி அவர்களுக்கென்த் தனித்திருக்க வேண்டியது அவசியமில்லை. அரசாங்கச் செலவில் நடத்தப்படும் அல்லது அரசாங்க உதவிபெறும் எல்லாப் பள்ளிக்கூடங்களும் எவரையும் விலக்குதல் கூடாது.

ஆரம்பக் கல்விச்சாலைகளில் கிராமச் செல்வ விருத்தி முறைகளும், கிராம ஸ்தாபன அமைப்பும் அவைகளின் வேலை முறைகளும், போதிக்கப்படவேண்டும். 3-வது வகுப்பிலிருந்து மாணவர்கள் பிரியம்போல ஆங்கிலம், அல்லது சமஸ்கிருதம், ஹிந்தி, உருது, அராபி இவைகளில் ஒன்றோ அல்லது மற்றும் ஏதாமொரு பாஷையோ தம் தாய்மொழியுடன் கற்பிக்கப்படலாம்.

உயர்தரப் படிப்புகள் சர்வகலாசாலைப் படிப்பு என்றும் மற்றும் தொழில் படிப்புகள் (Diploma Schools) என்றும் இரு வகையாகப் பிரிக்கப்படலாம். அவைகளும் திருத்தி யமைக்கப்பட வேண்டியதாக இருக்கின்றன. அவைகளையும் ஆரம்பக் கலாசாலைகளையும் இணைக்கிற



மத்யதரப் பாடசாலைகளையும் அதாவது 4 முதல் 6-வது பாரம் முடிய உள்ள படிப்பை மேல் படிப்புகளுக்கும், பின் வாழ்க்கைக்கும் பொருத்தமாய் இருக்கும்படியாக ரொம்பவும் திருத்த வேண்டியிருக்கிறது. படிப்பவர் எவரும் எந்த நிலைமையில் தம் படிப்பை நிறுத்தினாலும் அம்மட்டில் அதற்குத் தக்கதாக அவர் படிப்பு பிரயோசனப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும். சொற்பக் கல்வி அறிவாவது எல்லோருக்கும் இருக்கவேண்டியது அவசியமாதலால் ஆரம்பக் கல்விச் சாலைப் படிப்பு எல்லார்க்கும் ஒன்றுபோலிருத்தல் வேண்டும். மேற் படிப்புக்கு ஆங்கிலம் அவசியமாக உள்ளவர்கள் மட்டும் ஆங்கிலம் படிக்கவும் மற்றவர்கள் ஹிந்தி முதலிய சுதேச பாஷை படிக்கவுமாக இருக்கலாம் வேத பாடசாலை, மதரஸா இவைகளில் சேருபவர்களும் எட்டாவது வகுப்பு முடியப் படித்தவர்களாக இருத்தல் வேண்டும். அந்தந்த பாடசாலைகளில் மற்றும் மத்யதரப் பாடசாலைகளின் கட்டாயப் பாடங்களுடன் அதுதன் நோக்கத்திற்குத் தக்கதான விசேஷ பாடங்களாக் அவைகள் நடத்தப்படலாம்.

சமய பாடசாலைகளில் பயில்பவர்களுக்கும், பின் சங்கீதம் பயில விரும்புபவர்களுக்கும், ஆங்கிலம் அவசியமாயிருக்கக் கூடியதில்லை. சர்க்கார் உத்யோகங்களையோ சர்வகலாசாலைப் படிப்பையோ, மற்றும் தொழிற் படிப்பையோ விரும்புகிறவர்கள் எவரும், ஆரம்பக் கல்விச் சாலையிலிருந்தே மத்யதரச் சாலையிலும் ஆங்கிலம் கற்றுவர வேண்டும். ஆரம்பக் கல்விச்சாலையில் கட்டாயப் பாடமாக இருப்பவையெல்லாம் மத்யதரப் பாடசாலைகளிலும் கட்டாயப் பாடமாக இருக்கவேண்டும். மத்யதரப் பெண் பாடசாலைகளில் கிராம ஸ்தாபனங்கள், விவசாய தத்துவம், கிராமச் செல்வ விருத்திபற்றிய பாடங்களைக் கொஞ்சம் குறைத்துக்கொள்ளலாம். ஆனால் அவர்களுக்கு அவசியமான வீட்டு நிர்வாகம், தையல், பின்னல், பால் கறத்தல், தயிர் கடைதல், சமையல் முதலிய வீட்டு வேலை, உணவுப் பதார்த்தங்களின் சாரம் இவைகளைப் பற்றிய அறிவு திறம்படப் போதிக்கப்படவேண்டும்.

மத்யதரப் பாடசாலைகள், சர்வகலாசாலைப் பாடசாலைகள் என்றும் விவசாயப் பாடசாலைகள் என்றும், வைத்திய பாடசாலைகள் என்றும், வியாபார பாடசாலைகள் என்றும், உபாத்திமைப் பாடசாலைகள் என்றும், நெசவுப் பாடசாலைகள் என்றும், சிற்ப யந்திரப் பாடசாலைகள் என்றும், மற்றும் தொழில் முறைப் பாடசாலைகள் என்றும் பிரிக்கப்படலாம். அந்தந்தப் பாடசாலைகளில் அதனதன் நோக்கத்திற்குத் தக்கதாக விசேஷ பாடங்களும், சர்வகலாசாலைப் பாடசாலைகளில் சரித்திரம், சாஸ்திரம் முதலிய பாடங்களும் நடத்தப்படவேண்டும். இவ்விதம் பிரிக்கும்போது பெண்களுக்கென சர்வகலாசாலை வைத்தியம், உபாத்திமை, மத்யதர பாடசாலைகளே போதுமானதாகும்.

நெசவுத் தொழில் அதிகமாக உள்ள இடங்களில் மத்யதர நெசவுப் பாடசாலைகளும், வியாபாரம் மிகுதியாக உள்ள இடங்களில் வியாபார மத்யதரப் பாடசாலைகளும், விவசாய விருத்தியில் ஈடுபட்டு உழைக்கக் கூடியவர்கள் உள்ள இடத்தில் விவசாய மத்யதரப் பாடசாலைகளும், மற்றும் அவசியத்திற்கும், நடக்கக்கூடிய சௌகரியத்திற்கும் தக்கதாக மற்ற மத்யதரப் பாடசாலைகளும் அமைக்கப்படலாம். எல்லா மத்யதரப் பாடசாலைகளிலும் கட்டாயப் பாடங்கள் ஒன்றுபோ லிருக்குமாதலால் அவர்களில் ஆங்கிலம் கற்றுள்ள எல்லோருமே சர்க்கார் உத்யோகங்களுக்கு ஒன்றுபோல் அருகராயிருப்பார்கள். அது சித்திக்காதபோது, தான் தான் படித்துள்ள தொழில் முயற்சிகளில் இறங்கிப் பிழைத்துக்கொள்ளவும் சௌகரியமாயிருக்கும்.

தற்காலம் 4-வது பாரம் படித்தவர்களையே ஆஸ்பத்திரியில் மருந்து சேர்க்கும் வேலைப் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள். 6-வது பாரம் முடிய முடித்துப் பரீக்ஷையில் பாஸ் செய்தவர்களையே சுகாதாரப் பரீக்ஷைக்குப் படிக்க எடுத்துக்கொள்ளுகிறார்கள் அவ்விதமில்லாமல் வைத்திய மத்யதரப் பாடசாலையிலேயே சரீர சாஸ்திரமும், சுகம் பேணும் முறைகளும் நகர கிராம சுத்த நிர்மாணமும், வியாதி வராமல் தடுக்கும் முறைகளும், முதலுதவியும் (First aid) அம்மைப் பால் குத்தலும், தொத்து நோய்வராது தடுத்தலும், புண்களுக்கு மருந்து கட்டலும், சீமை வைத்திய முறைப்படி மருந்துகள் சேர்க்கவும், ஆயுர்வேத, சித்தவைத்திய, யூனானி முறைகளின்படி கஷாயம், லேகியம், செந்தூரம் முதலியவைகள் சேர்க்கவும், பத்திய நியமங்களும் படித்திருந்தால் அவர்கள் சர்க்கார் ஸ்தல ஸ்தாபன ஆஸ்பத்திரி உத்தியோகங்களுக்கும் அவ்வளவிலேயே லாயக்குள்ளவர்களாகவு மிருப்பார்கள். அவ்வித உத்தியோகங்கள் கிடையாதபோது சொந்தமாய் வைத்தியஞ் செய்தும் பிழைத்துக்கொள்ளுவார்கள். ஜனங்கள் தற்காலம், உடற்கூறு, வியாதிக்கூறு தெரியாதவர்களிடம் மருந்து சாப்பிட்டுக் கஷ்டப்படுவதும் நாளாவட்டத்தில் குறைந்துபோம். இதுபோலவே உபாத்திமைப் படிப்புக்குத் தனியாக இரண்டு வருஷம் படிக்கவேணுமென்று இராமல், மற்ற படிப்புகளோடேயே சேர்த்துப் படித்து உபாத்திமைத் தொழிலுக்கு அருகராய்விடலாம். உபாத்திமைத் தொழில் சம்பந்தமான பாடங்களோடு விவசாய மூலதத்துவங்களும், உடல் நூலும், சுகாதாரமும், வியாதி தடுத்தலும், முதலுதவியும், கற்பிக்கப்படலாம். அவ்வித போதனை அவர்கள் கிராமத் தலைவராக இருந்து வேலை செய்வதற்கு மிகுந்த சௌகரியத்தைத் தரும்.

1. விவசாயம், 2. வியாபாரம், 3. வைத்தியம், 4. சுகாதாரம், 5. மருத்துவம், 6 சிற்பம்-யந்திரம் இவை சம்பந்தமான (Diploma Schools) உயர்தரப் பாடசாலைகளுக்கு அடுத்துச் சம்பந்தப்பட்ட



மத்யதரப் பாடசாலைகளிலிருந்தே படிக்கப் போகலாம். சங்கீதம் எல்லா ஆரம்பக் கல்விச்சாலைகளிலும், மத்யதரப் பாடசாலைகளிலும் கட்டாயப் பாடமாக இருத்தலினால் எந்த மத்யதரப் பாடசாலையிலிருந்தும் சங்கீத உயர்தரப் பாடசாலைகளுக்குப் படிக்கப் போகலாம்.

சர்வகலாசாலைப் படிப்புகள் எல்லாம் விவசாயம், வியாபாரம் சிற்ப-யந்திரம், தனித்தொழில் படிப்புகளாகவும் மற்றவை சாதாரண படிப்போடு கூடிய பிரவிர்த்திப் படிப்புகளாகப் பிரிக்கப்படலாம். அவைகளில் ஏதுமே தற்காலம் 'இண்டர்மீடியட்' என அழைக்கப்படும் இரண்டு வருஷப் படிப்புக்குமே அதன் பகிரங்க பரீக்ஷைக்கும் பின்னதாகப் படிக்கக்கூடியதாய் இருத்தல்வேண்டும். மேலே சொல்லிய தனித்தொழிற் சர்வகலாசாலைப் படிப்புகளில் ஆங்கிலமும், தாய்ப் பாஷையும் கட்டாயப் பாடங்களாக இருக்கவேண்டியதில்லை. மற்ற சர்வகலாசாலைப் பரீக்ஷைகளுக்கெல்லாம் குறைந்தது 3 வருஷப் படிப்பாவது இருக்கவேண்டும். ஆங்கிலமும் தாய் பாஷையும் கட்டாயப் பாடமாக இருத்தல்வேண்டும். ஆங்கிலம், நாட்டிலக்கியம் சாதாரண அளவிற்கு அதிகமாயும் மற்றும் பாஷையும், பரீக்ஷைக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது B.Litt. பட்டத்திற்கும்; ஆங்கிலமும், நாட்டிலக்கியமும், சாதாரண அளவோடு சாஸ்திர பரீக்ஷையும் ஏற்படும்போது B Sc. பட்டமும்; இராஜீய முறை, தேசீய செல்வ விருத்தி, தேச சரித்திரம், சட்டம் இவைகள் அமைகிறபோது B.L. பட்டமும்; உபாத்திமைத் தொழிலுக்குரிய பாடங்கள் சேரும்போது B. T. பட்டமும்; வியாபார சம்பந்தமான உயர்தரப் பாடங்கள் சேர்ந்து தேறும்பொழுது B.Com பட்டமும் கொடுக்கப்படலாம். அதே மாதிரி பின் உயர் பரீக்ஷைகளில் தேறும்பொழுதும் அந்தந்தப் பாடங்களில் மாஸ்டர் பட்டமும் கொடுக்கப்படலாம். மேலே சொல்லிய பட்டங்களுக்கு எடுத்துக்கொள்ளும் பாடங்களுக்குத் தக்கதாக அவர்களுடைய இண்டர்மீடியட் பாடங்களும் மத்யதரப் பாடசாலைப் படிப்புகளும் அமைந்திருக்கவேண்டும்

மத்யதரப் பாடசாலைகளில் 6-வது பாரம் முடிவிலும், தொழிற் பாடசாலைகளிலும், சர்வகலாசாலைக் கல்லூரிகளிலும், குறிப்பிட்ட சில வகுப்புகளிலுமே பகிரங்க பரீக்ஷைக ளிருத்தல்வேண்டும். அப்போர்ப்பட்ட பரீக்ஷைகளிலும் வாய்மொழிப் பரீக்ஷைக்கு இடமிருக்குமானால் வாய்மொழிப் பரீக்ஷைக்கே அதிக மார்க்குகள் இருத்தல்வேண்டும். எழுத்துப் பரீக்ஷைக் காகிதங்களும், பரீக்ஷை நடக்கும் இடத்திலேயே இருவரால் பார்வையிடப்பட்டுப் பரீக்ஷை நடந்த 2 வாரத்திற்குள் முடிவு சொல்வதாயிருக்கவேண்டும். பரீக்ஷையில் தவறுபவர்கள் தவறிய பாடங்களில்மட்டும் பள்ளிக்கூடங்கள் திறக்குமுன் அதாவது

மூன்று மாதத்திற்குள் பரீக்ஷிக்கப்படக் கூடியதாயிருக்கவேண்டும். மாணவர்கள் அறிவுக் களஞ்சியமாக விளங்குவதைக்காட்டிலும், அவர்கள் அவ்வறிவை உபயோகப்படுத்துந் திறமையே அவர்களின் பின் வாழ்க்கையில் பெரிதும் பிரயோசனப்படக் கூடுமாதலால் அப்பேர்ப்பட்ட கேள்விகளையே பரீக்ஷைகளில் கேட்கப்படவேண்டும், அவைகளை மாணவர்கள் தாராளமாய்ப் புத்தகங்களை வைத்துப் பதிலெழுத அநுமதிக்கவேண்டும்.

பாடசாலை மேற்பார்வை அதிகாரிகள், உபாத்தியாயர்கள் சொல்லி வைக்கும் முறைகளைக் கவனிக்கவும், அவசிய திருத்தங்களையும், புதிய போதனைமுறை நுட்பங்களையும் அவர்களுக்குப் போதிக்கவும் வேண்டும். அவர்கள் சிக்ஷாதிகாரிகளாக, மான்யம் கூடுதல் குறைவு செய்பவர்களாக விளங்கவேண்டியதில்லை.

இப்பொழுதும் படிப்பில்லாதவர்களின் தொகை அதிகமாக இருப்பதாலும் இனிக் கட்டாயக் கல்வி முறை வந்து படிப்பின்மை சாதாரண முறையில் குறைய இன்னும் ஒரு தலைமுறையாவது செல்லும் ஆதலாலும், வயதுவந்தவர்களுக்கு, வாசிக்கவும், எழுதவும் போதிப்பதோடு நாடகம், சினிமா, புகைப்படங்கள், துண்டுப் பிரசுரம் மற்றும் பிரசாரம் மூலமாகவும் அறிவைப் புகட்டவும், விருத்தி செய்ய வேண்டும். அப்போது அதனல் ஆகும் விவசாய விருத்தி முதலிய பலன்கள் புலவற்றையும் உடனே அநுபவிக்கவும் சாத்தியமாகும். அவர்கள் மக்களுக்குக் கட்டாயக் கல்வி புகட்டுவதும் எளிதாகும். தற்காலப் போக்கிற்குத் தக்கதாகத் தாலாட்டுகளும், தில்லாலப் பாட்டுக்களும், கும்மிகளும், கர்ணபரம்பரைக் கதைகளும், விவசாயம் முதலிய கைத்தொழில் விருத்தி, ஒற்றுமை, நாட்டின் நன்மை—மேன்மைக்கான போக்கில் திருப்பப்படவேண்டும்.

ஏதேனும் திருத்த முறைத் திட்டம் இல்லாமல் செய்யும் முயற்சியால் நல்ல பலன் இருக்கக்கூடியதில்லை; எவ்விதத் திட்டம் வேலை செய்வதானாலும் ஏராளமான தொண்டர்களும், பணமும் தேவையாகும்; அவ்விதம் தொண்டர்களையும், பண உதவியையும் எதிர்பார்த்தவர்களாய் சும்மா இருந்துவிடாமல் ஒவ்வொருவரும் தங்களாலியன்ற அளவு வயதுவந்தவர்களின் அறிவு விளக்கத்திற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ளும்போது அவ்வளவிற்கு நம் நாடு இப்போதைய நிலைமையிலும் நல்ல நிலைமையை அடையுமென்பதில் சந்தேகமில்லை.

# பிஜியில் இந்தியர்களின் நிலைமை.

திரு. ஆர். கே. பண்டாரம் அவர்கள், எப். சி. ஐ.

பிஜியில் இப்பொழுது 76,722 இந்தியர்களிருக்கிறார்கள். அநேகமாய் இவர்கள் கரும்பு நிலங்களிலேதான் வேலை செய்துவருகின்றனர். ஏறக்குறைய 1,10,000 ஏக்கர் நிலம் இந்தியர்களிடத்திலிருக்கிறது. இதில் Native Leases 64,000 ஏக்கரும், Crown Leases 2,500 ஏக்கரும், Free hold 3,000 ஏக்கரும், வாடகை நிலம் 5,000 ஏக்கரும், C.S.R. கம்பெனி நிலம் 33,000 ஏக்கரும் இந்தியர்களால் பயிர் செய்யப்பட்டு வருகிறது. இங்கு முதன்மையான தொழில் சர்க்கரை செய்வதே யாகும். பிஜியில் சர்க்கரை செய்யும் மில்கள் ஐந்து இருக்கின்றன.

கரும்புத் தோட்டத்தில் கரும்பு வெட்டுகிறவர்களுக்குச் சம்பளம் நாள் ஒன்றுக்கு 1 ஷிலிங்கு 8 பென்ஸும் போனசும் (Bonus) கிடைக்கிறது. நன்றாக வேலை தெரிந்தவர்களுக்கு வாரம் 17 ஷிலிங் 6 பென்ஸும், சர்க்கரை மில்லில் வேலை செய்கிறவர்களுக்கு வாரம் 10 ஷிலிங்கிலிருந்து 21 ஷிலிங் வரையிலும் கிடைக்கிறது. சூவாடா நகரத்தில் ஆள் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 2 ஷிலிங் 6 பென்ஸ் சம்பளம் கிடைக்கிறது. தவிர நம்மவர்களுக்கு பூரா வேலை கிடைக்காமல், அநேகர் கஷ்டப்படுகிறார்கள். இவ்விடத்திலும் வேலை யில்லாக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

இவ் வருஷத்தில் இங்கு நெல் நன்றாக விளைந்திருக்கிறது. கூடியவரையில் பிஜியில் விளையும் நெல்லைக்கொண்டு ஜீவிக்கக்கூடிய நிலைமைக்கு வந்திருக்கிறது. ஆனால் மழை மாத்திரம் தவறாமல் வருஷிக்க வேண்டும். நெல் மூடை 1-க்கு இது சமயம் 10 ஷிலிங் வீதம் விற்கிறது.

இங்கு சில இடங்களில் பருத்தி பயிராகிறது. இப்பொழுது 2,500 ஏக்கர் நிலம் பருத்தி பயிர் செய்யப்பட்டிருக்கிறது. பஞ்சு கவர்ன்மெண்டாராலேயே வாங்கப் பெற்று வெளி தேசங்களுக்கு அனுப்பப்படுகிறது.

கொப்பரைத் தேங்காய், வாழை, ஆமையோடுகள், முத்துச்சிப்பிகள், ஆரஞ்சு, அனுசி பழங்கள் இவைகளும் வெளி தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தவிர புகையிலை, கடலைக்காய், மக்காச்சோளம், துவரை, உளுந்து அநேகவித காராமணி பீன்ஸ் அதிகமாய் விளைவாகிறது.

எங்கோனா (Yagona) என்ற ஓர் செடியின் கட்டைகள் ஏராளமாய் விற்பனையாகின்றன. இங்குள்ள பீஜியர்கள் இந்தக் கட்டைகளை நன்றாகத் தூள் செய்து தண்ணீருடன் கலந்து வடிகட்டிய சாற்றை ஓர் பானமாகக் குடிக்கிறார்கள். இப்போது நம்மவர்களும் இதைப் பழக்கத்திற்குக் கொண்டுவந்து விட்டார்கள். கள் குடிப்பதற்குப் பதிலாக இதை உபயோகிக்கின்றனர். அதிகமாய் இதைக் குடிப்பவர்களின் திரேகம் குஷ்ட நோய் கொண்டவன் திரேகம்போலாகிவிடுகிறது. இப்பொழுது "எங்கோனா" ஏராளமாய்ப் பயிர் செய்யப்பட்டு அதனுடைய கட்டைகள் 1 பவுண்ட் இடை 1 ஷிலிங் வீதம் விற்பனையாகிறது.

பீஜியில் மொத்தம் இப்போது 778 இந்தியர்களுடைய கடைகளிருக்கின்றன. 1930-ல் மட்டும் 1,004 இந்தியக் கடைகளிருந்தன. இப்போது குறைந்திருப்பதற்குக் காரணம் அதிக வட்டிக்குப் பணம் வாங்கிச் சரக்குகள் எடுத்து வெளியில் சரக்குகளைக் கடனுக்குக் கொடுத்து வியாபாரம் செய்வதாலும் அவைகள் சமயத்திற்கு வருவாகாமையாலும் கடைகள் உடைவதற்குக் காரணமாயிருக்கிறது. இவ்விடத்தில் ஒவ்வொரு கடையும் கவர்ன்மெண்ட் லைசென்ஸ் பெற்றுத்தான் வியாபாரம் செய்ய வேண்டியதாயிருக்கிறது. அதாவது "Whole Sale" மொத்த வியாபாரம் செய்ய வேண்டுமானால் வருஷ லைசென்சுக்கு 20 பவுனும், சில்லரை வியாபாரம் செய்ய வேண்டுமானால் வருஷம் 5 பவுனும், வெளியில் எடுப்பு வியாபாரம் செய்ய வருஷம் 3 பவுனும் கவர்ன்மெண்டுக்குச் செலுத்தவேண்டும்.

இங்கு 775 இந்தியர்களுக்கு வாடகை மோட்டார் ஓட்ட லைசென்சும், 568 பேருக்கு சொந்த மோட்டார் ஓட்ட லைசென்சும் கிடைக்கப் பெற்றிருக்கிறது.

350 மோட்டார் கார்களும் 196 மோட்டார் லாரிகளும் நம்மவர்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன. இதில் விசேஷமாய் ஜனங்களை வாடகைக்கு ஏற்றிச் செல்லும் மோட்டார்களும் வாடகை லாரிகளுமே அதிகமிருக்கின்றன. தவிர மோட்டார் வாடகைத் தொழில் முழுதும் இந்தியர்கள் வசமேயிருக்கிறது. மற்ற எந்த ஜாதியாரும் இந்தத் தொழிலில் பிரவேசிக்கவில்லை.



தென்னிந்தியர்கள் இவ்விடத்தில் தாய்ப்பாஷையை அபிவிருத்தி செய்ய மிகச் சிரத்தையெடுத்து, ஐந்து அல்லது ஆறு பாடசாலைகளைக் கட்டியிருக்கிறார்கள். இவைகளில் நந்தியிலிருக்கும் சங்கப் பாடசாலையே மிகவும் விசேஷமானது. இதைப்போல ராக்கி ராக்கியிலும் ஒரு அழகான பாடசாலை கட்டியிருக்கிறார்கள். மேலும் நந்தியில் சிவசுப்ரமண்யக் கடவுள் பேரால் ஓர் கோவிலும் கட்டியிருக்கிறார்கள்.

பீஜியில் சகல பாடசாலைகளிலும் வாசிக்கும் இந்தியச் சிறுவர் சிறுமிகள் 6 வயது முதல் 15 வயதுவரையுள்ளவர்களின் தொகை மொத்தம் 16,200. இன்னும் இதைவிட அதிகமாகக் கல்வியில் முயற்சியெடுப்பார்களென்று எதிர் பார்க்கப்படுகிறது.

இந்தியர்களுக்காக இங்கு இரண்டு பத்திரிகைகள் வெளியாகின்றன. அதாவது "பீஜி சமாச்சார்" என்ற பத்திரிகை இங்கிலீஷிலும் ஹிந்தியிலும் வாரம் ஒரு முறை வெளியாகிறது. "விர்த்தி" என்ற பத்திரிகை இங்கிலீஷிலும் ஹிந்தியிலும் இரண்டு வாரத்திற்கொருமுறை வெளியாகிறது.

கப்பல் கல்கத்தாவிலிருந்து வருஷம் ஒரு முறை பீஜிக்கு வந்து போகிறது. புதிதாகப் பீஜிக்கு வரக்கூடிய ஆள்களுக்கு இவ்விடத்து கவர்ன்மெண்ட் உத்திரவு இல்லாமல் வரமுடியாது. காரணம் பம்பாய்க்காரர்களும் பஞ்சாப்காரர்களும் ஏராளமாய் வந்து வியாபாரத்தையும், கூலி வேலையையும் கெடுத்து விட்டார்கள். தையல் வேலையும், லாண்ட்ரி (வெளுத்தல்) வேலையும், செருப்பு, பூட்ஸ் தைக்கிற வேலையும், க்ஷவரத் தொழிலும், தட்டார வேலையும் பம்பாய்க்காரர்களாலேயே முதன்மையாகச் செய்யப்படுகின்றன.

---

"சிம்மாசனம் என்பது மரத்தால் செய்யப்பட்டு, மெத்தையால் தைக்கப்பட்ட வெறும் நாற்காலியைத் தவிர வேறென்ன?

* * *

"மனுஷ்யன் ஆரம்பிக்கின்ற யுத்தங்களைப் பிரேதங்கள் நிறுத்துகின்றன.

* * *

"வெற்றியில் வீரமும் புகழும் இருக்கிறதுபோலத் தோல்வியிலும் உண்டு.

* * *

"கிறிஸ்துவானவர் சிலுவையிலே செத்திராவிட்டால் தெய்வகுமாரனைப் பூஜிக்கப்படுவாரா?

—நெப்போலியன்.

# தேசபந்து சித்தரஞ்சன தாஸ்.

திரு. என். வேங்கடரமணன் அவர்கள்.

இந்திய அரசியல் உலகில் ஒப்பற்ற வீரமும், தியாகமும், செல்வாக்குங் காட்டி, இந்திய அரசாங்கத்தையே திக்பிரமை யடையச் செய்த தேசீய வீரத் தலைவர்கள் சிலருள் சித்த ரஞ்சன தாசரும் ஒருவர். ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்தது முதல் இன்றுமே அகில இந்தியக் காங்கிரஸ் மகா சபைக்கு நாட்டில் அதிகச் செல்வாக் கேற்பட்ட தென்னலாம். ஹிம்சை யில்லா வழியில் நாட்டின் விடுதலையைச் சாதிப்பதற்கு ஒரு சாதனமாக மகாத்மா காந்தி யடிகளாரால் கண்டு பிடிக்கப்பட்டதே ஒத்துழையாமை என்பதாகும். ஒரு நாட்டின் முழு ஜனங்களின் ஒத்துழைப்பு இன்றேல், எந்த அரசாங்கமும் ஒரு நாள் கூட நிலை நிற்க முடியாது. போலீஸ் வீரர்களும், போர்ச் சேவகர்களுங் கொண்ட துப்பாக்கிக் குண்டுகளும், இயந்திரப் பீரங்கிகளும், மற்றும் பல மாரணச் சாதனங்களும், உலகை யழிக்குஞ் சாதனங்களன்றி, ஆக்குஞ் சாதனங்க ளல்ல. எனவே நாட்டு மக்களின் சம்மதியை நாடி, அவர் தம் ஒத்துழைப்பைப் பெற்ற அரசாங்கமே உயிருடைய தாகும்; இன்றேல் அவ் வரசாங்கம் பாலை வனத்தைக் கட்டி யாண்டு உயிரிழக்க வேண்டியதே. சத்தியாக்கிரகத்தோடு கூடிய ஒத்துழையாமை இயக்கத்தை யழிப்பதற்கு உலகில் ஒரு சட்டமோ, ஒரு ஆயுதமோ கிடையாது. சர்வ வல்லமையும் படைத்த பிரிட்டிஷ் அரசாங்கமே ஒத்துழையாமை இயக்கத்தைக் கண்டு அஞ்சுகிறதென்றால் இதன் பெருமையை வேறாகப் புகழ வேண்டுமா? ஒரு முறை இந்தியா எங்கும் அரசியல் ரதத்தின் சக்கரங்களாகிய சட்ட சபைகளுக்குள் இவ் ஒத்துழையாமை இயக்கத்தைச் செலுத்தி, இந்திய அரசாங்கத்தையே ஒரு அங்குலங்கூட நகர முடியாமல் ஸ்தம்பிக்கச் செய்ய முயன்று, உலகத்தாரால் புகழப் பெற்ற பெருமை நமது சித்த ரஞ்சன தாசருக்கே உரியதாகும். அவர் நாட்டு மக்களின் நன்மைக்காகத் தம் உடல், பொருள், ஆவியனைத்தையும் ஒருங்கே அர்ப்பணஞ் செய்த பெருமையாலேயே பாரத மக்களால் "தேசபந்து" என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார். 'மகாத்மா' என்ற மாத்திரத்தில்



இந்தியரது உள்ளத்தில் எவ்வாறு காந்தியடிகளார் காட்சி யளிக்கின்றாரோ, அவ்வாறே 'தேசபந்து' என்ற மாத்திரத்தில் எல்லோரது உள்ளத்திலுஞ் சித்தரஞ்சன தாசர் காட்சி யளிக்கின்றார். தமது கம்பீரமான தோற்றத்தாலும், நியாய வாதத் திறமையாலும், ஆணித்தரமான பேச்சாலும், அன்பு ததும்பும் பார்வையாலும், ஏழைகளுக்குதவும் செய்கையாலும், அரசியல் தந்திரத்தாலும் பொது ஜனங்களின் மனத்தையே யன்றி அரசாங்கத்தாருடைய மனத்தையும் ஒருங்கே ஸி. ஆர். தாசர் கொள்ளை கொண்டார். சித்த ரஞ்னரின் வீர கர்ஜனையின் ஒலி வங்காளத்திலேயே யன்றி, இந்தியா எங்கும் இன்னும் ஒலித்துக்கொண் டிருக்கிறது. "வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி யுடைந்தா"லன்ன ஏகாதிபத்திய கர்வம் படைத்த இந்திய அரசாங்கத்தை ஒத்துழையாமை என்ற கயிற்றால் பிணித்துத் திக்குமுக்காடச் செய்த நிலையில் திடீரெனக் காலன் வாய் வீழ்ந்து மறைந்து பட்டார் அவரது பிரிவால் இந்தியருள்ளத்தில் எழுந்த துக்க வெள்ளம் இன்னும் பெருகிக்கொண் டிருக்கிறது. அத்தகைய சீரிய வாழ்வை நடத்திய சித்த ரஞ்சனரின் ஜீவிய சரித்திரம், வாலிப உலகத்திற்கு நல்ல வழிகாட்டியாகும். ஆகவே அவருடைய சரித்திர வரலாற்றை இதன் கீழ் சுருக்கித் தருகின்றோம்.

## பிறப்பும் படிப்பும்

வங்காளத்தின் தலை நகராகிய கல்கத்தாவில், கல்வி நலனும், குண நலனும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற ஓர் உயர் தனிக் குடும்பத்தில் 1870-ம் வருடம் நவம்பர் மாதம் 5-ம் தேதி நமது சித்த ரஞ்சன தாசர் பிறந்தார். இவரது தந்தையாரின் பெயர் பாபு பூபன் மோகன் தாசர் என்பதாம். பூபன் மோகன் தாசர் கல்வியிற் சிறந்தவர்; செல்வத்திலுஞ் செழித்தவர். அவர் கல்கத்தாவின் உயர்தர நீதி மன்றத்திற் சிறந்த நியாய வாதியாக விளங்கினார். நீதி வாதத்திலும், பொது நலத் தொண்டிலும் அவர் காட்டிய ஊக்கமும், உழைப்பும் அவருக்கு அதிகப் பெருமையையும், புகழையுங்கொடுத்தன. அவர் பிரஹ்ம சமாஜக் கருத்துக்களில் அதிக ஆர்வங் கொண்டு, அச் சமயப் பிரசாரத்திலும் ஈடுபட் டிருந்தார். உலக நன்மைக்கு உழைப்பதற்குப் பத்திரிகைகள் ஏற்ற சாதனங்களென்பதைக் கருதித், தமது நியாய வாதத் தொழிலுடன் "பிரஹ்மோ பப்ளிக் ஒப்பீனியன்" என்ற பத்திரிகைக்கு ஆசிரியராகித் தேச சேவை புரிந்தார். சின்னாட்களுக்குப் பிறகு "பெங்கால் பப்ளிக் ஒப்பீனியன்" என்ற மற்றொரு பத்திரிகைக்கும் ஆசிரியராகிச் சிறப்புற நடத்தினார். தமது சுற்றத்தாரும் பிறரும் ஆகிய ஏழைகளுக்கு எப்பொழுதும் இல்லை யென்னாது கொடுத்து

உதவி வந்தார். அவரது உதவியைப் பெற்று உயர்வடைந்த குடும்பங்கள் பல. ஏழைச் சிறுவர் பலருக்குப் பொரு ளுதவி புரிந்து கல்வி கற்கச் செய்தார். இது போன்ற மற்றும் பல தான தருமங்களை அளவின்றிச் செய்து வந்ததின் காரணமாக அவர் சம்பாதித்த பெரும் பொருளும் மறைந்து, லட்சக் கணக்கில் கடன் சுமை ஏற்பட்டது. காலக் கொடுமையினால் அவர் பட்ட கடன்களைத் தீர்க்க வகையின்றி, வருந்திக் கடைசியில் கோர்ட்டில் இன்சால்வெண்ட் விண்ணப்பங் கொடுத்து விடுதலை யடைந்தார். ஆயினும் அவ்வாறு தாம் செய்ய நேர்ந்த நிலைமைக்கு அவர் ஆயு ளளவும் மிக மிக வருந்தினார். சித்தரஞ்சனருடன் பிறந்த சகோ தரர்க ளிருவரும், சகோதரிக ளிருவரும் உளர். அவரது சகோ தரர்களில் பிரபுல்ல ரஞ்சன தாசர் என்பவர் பாட்னாவில் உயர்தர நீதிபதியாகவும், மற்றொருவராகிய எஸ். ஆர் தாசர் வங்காளத்தில் உயர்தர நீதிபதியாகவும் விளங்கிப் புகழ் பெற்றனர்.

நமது சித்தரஞ்சன தாசர் சிறு வயதினின்றே உயர் குணங் கள் பல வாய்ந்து விளங்கினார். இளமையிலேயே தாய் மொழியில் நல்ல அனுபவம் பெற்றார். இயற்கையிற் கவிதை வெள்ளம் அவரது உள்ளத்தில் ஊற்றெடுத்தது. சித்தரஞ்சனர் பவானிப் பூரிலிருந்த மிஷன் பாடசாலையிற் படித்து 1886-ம் ஆண்டில் பள்ளி யிறுதிப் பரீக்ஷையில் தேறினார். அதன் மேல் கல்கத்தா மாகாணக் கலா சாலையிற் சேர்ந்து படித்துத் தமது இருபதாவது வயதில் பி. ஏ. பட்டம் பெற்றார். அவர் கலாசாலை மாணவரா யிருக்கையிலேயே பொது விஷயங்களைப்பற்றி அடிக்கடி சொற்பொழிவுகள் நிகழ்த்து வார். தம்முடன் படிக்கும் மாணவர்களை ஒருங்கு கூட்டிப் பிர சங்கங்கள் புரிவார். ஒழிவு நேரங்களிற் பல சிறப்புற்ற உயர்ந்த நூல்களைப் படித்துத் தம் அறிவைப் பண்படுத்திக்கொண்டார். அவ்வாறு சித்தரஞ்சனர் சர்வ கலாசாலைப் பட்டம் பெற்றதன் பின் னர் இந்தியன் சிவில் சர்வீஸ் பரீக்ஷைக்குப் படிப்பதற்காக இங்கி லாந்து சென்றார். அவர் அப் பரீக்ஷையில் தேர்ச்சி யுற்றாராயினும் உடனே உத்தியோகம் பெற அவர் விரும்பவில்லை. மேலும் அவ ருக்கு இங்கிலாந்தில் வேறு சில அலுவல்கள் வாய்த்தன. அது காலை இங்கிலாந்தில், இந்தியாவின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்த தேச பக்தக் கிழச் சிங்கம் தாதாபாய் நௌரோஜி அவர்கள் ஆங்கி லப் பார்லிமெண்டு சபைக்கு அபேக்ஷகராகத் தேர்தலுக்கு நின் றார். அச் சமயத்தில் இயல்பாகவே தேசாபிமானத்தால் தூண் டப்பட்ட மனத்தை யுடைய வங்காள இளஞ் சிங்கமாகிய சித்த ரஞ்சனர், தாதாபாய் நௌரோஜி யவர்களின் சார்பாகத் தேர்தற் பிரசாரம் செய்ய முற்பட்டார். இங்கிலாந்திற் பல விடங்களுக்

17784k



குச் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அச்சமயத்தில் பார்லிமெண்ட் அங்கத்தினரில் ஒருவராகிய [illegible] என்ற ஒரு வெள்ளையர், ஒரு பிரசங்கத்தில் இந்தியரைக் கடுமையாக நிந்தித்துப் பேசினார். அச் சொற்களானவை இந்தியாவைத் தாய் நாடாகக் கொண்ட இந்துக்களுக்கும், முகம்மதியருக்கும் மன வருத்தத்தைக் கொடுத்தன. அவை சித்தரஞ்சனரின் சித்தத்தை யும் வாட்டிய தெனக் கூறவும் வேண்டுமா? உடனே சித்தரஞ்சனர் இங்கிலாந்தில் வசிக்கும் பாரத மக்களை ஒன்று கூட்டி, மக்ளீன் கூறிய நிந்தனைகள் அனைத்தையும் பொய்யுரைகளெனப், பல ஆதாரவுகளுடன் விளக்கிக் கண்டித்து ஒரு பிரசங்கம் புரிந்தார். அப் பிரசங்கம் உலகெங்கும் பிரசித்தியாயிற்று. அதன் பயனாக மக்ளீன் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதோடு, தமது பார்லி மெண்ட் மெம்பர் பதவியையும் இழந்தார். அதனால் சித்தரஞ்சன தாசரின் புகழ் இங்கிலாந்திலும், இந்தியாவிலும் ஒருங்கே பரவி யது. இந்தியாவின் நிலைமையைப்பற்றி நம் தாசர் இங்கிலாந்தில் மற் றும் பல உபந்நியாசங்கள் புரிந்தார். அவ்வாறு அவர் இங்கிலாந் தில் முதன் முதலாகத் தமது தாய் நாட்டு ஊழியத்தைத் தொடங் கியபடியால், அதிகார வர்க்கத்தினர் அவருக்கு இந்திய சிவில் அதி கார வர்க்கத்தில் ஒரு பதவியைக் கொடுக்க அஞ்சின ரென்றுங் கூறுவர். சித்தரஞ்சனர் தாஞ் செய்ய நினைத்த தேச ஊழியத் திற்கு உதவியாகும் பொருட்டு பாரிஸ்டர் பரீக்ஷைக்குப் படித்துத் தேர்ச்சியுற்ற பின் 1893-ம் ஆண்டு இந்தியாவுக்குத் திரும்பினார்.

## உத்தியோகமும் உழைப்பும்

தாசர் தாயகம் திரும்பிய வுடனே கல்கத்தாவில் நியாயவாதத் தொழிலை ஆரம்பித்தார். எனினும் போதிய வருவாயைக் காண முடியாமையின், வெளியூர்களுக்குச் சென்று வக்கீல் தொழிலை நடத்தினார். முதலில் தக்க வரும்படி யில்லாமல் மிகவும் பிரயா சைப் பட்டாராயினும் "முயற்சி திருவினையாக்கும்" என்றபடி நம் பிக்கையை விடாமல், மேன்மேலும் உண்மையுடனும், ஊக்கத்துட னும் பாடுபட்டு வந்ததன் பயனாக, வெளியூர்களில் இவருக்குச் செல்வாக்கேற்படத் தலைப்பட்டது. சித்தரஞ்சனரின் தந்தையார் பட்ட கடனைத் தீர்க்க வகையின்றி, நீதி மன்றம் நாடி, விடுதலை யடைந்த செய்தி சித்தரஞ்சனரின் உள்ளத்தில் சிறுவயதினின்றும் உறுத்திக்கொண்டிருந்தது. எனவே தமது வாணாளில் தமது குடும்பத்திற் கேற்பட்ட அவ்வசைச் சொல்லை நீக்கவேண்டுமென்று விருப்பங் கொண்டிருந்தார். ஆகவே சித்தரஞ்சனர் நியாய வாதத் தொழிலில் வருவாய் தமக்கேற்பட்ட வுடனே, தமது தந்தையா ரின் மீது பிறப்பித்த இன்சால்வெண்ட் உத்திரவை ரத்து செய்ய

மாறு நீதி மன்றத்திற்கு விண்ணப்பஞ் செய்துகொண்டார். அதைக் கண்ட நீதிபதிகளும், பிறரும் ஆச்சரிய மெய்தினர். காலங் கடந்து போன லட்சக் கணக்கான கடனை, மீண்டுங் கொடுத்துத் தீர்க்க முற்பட்டவர் உலகில் யாரே யுளர்? அவ்வாறு தாசர் நீதி மன்றத்தின் மூலம் தந்தையாரின் கடன் காப்பு மனுவை ரத்து செய்ததோடு, கடன்காரர் யாவரையும் வரவழைத்து அவரவரது கடன் பத்திரங்களைப் புதுப்பித்துக் கொடுத்து, முறையே அக்கடன் தொகைகளைக் கொடுத்துத் தீர்த்துவிட முற்பட்டார். அதனால் நாட்டில் சித்தரஞ்சனரின் உதார குணமும், சத்தியார்த்தப் பிரகாசமும் ஓங்கி விளங்கின. அவரது தந்தையாருக்குக் கடன் கொடுத்திருந்த பிரபுக்கள் பலரும் தாசரை அன்புடன் நேசித்தனர். பொது ஜனங்கள் புகழ்ந்து பேசிய பேச்சுக்கு அளவில்லை. அதற்கேற்பச் சித்தரஞ்சனரின் வருவாயும் மேலோங்கி வளர்ந்தது. வெளியூர்களிற் பிரபலமான கிரிமினல் வழக்குகளில் இவர் நியாய வாதம் புரிந்து ஜெயம் பெற்றார். அவ்வாறு சித்தரஞ்சனரைப் புகழ் மடந்தை தேடி யடைந்ததன் பின்னர், அவர் உயர் குலத்தில் உத்தம குணங்களுடன் உதித்த வசந்தா தேவி என்ற மகளிர் மணியை மனைவியாக மணம் புரிந்து கொண்டார். வசந்தா தேவியார் மனைத்தக்க மாண்புடையவராகிக் கொழுநரைப் பேணி இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தார். தாசர் கல்கத்தா ஹைகோர்ட்டில் நியாய வாதியாக மீண்டும் விளங்கினார். அங்கும் பல வழக்குகளில் அவர் காட்டிய திறமையைக் கண்டு நீதிபதிகளும், பிறரும் மெச்சினார்கள். அந் நிலையில் 1908-ம் ஆண்டில் அலிப்பூர் வெடிகுண்டு வழக்கில் அரசாங்கத்தினர் அரவிந்த கோஷ் அவர்கள் மீது குற்றஞ் சாட்டினர். அவ் வழக்கு நாட்டில் மிகவும் பிரசித்தி யடைந்தது. அதில் நமது சித்தரஞ்சன தாசர் தேச ஊழியம் ஒன்றையே கருதிப், பணத்தை எதிர் பாராமல் அரவிந்தரின் சார்பாக நியாயவாதியாகக் கோர்ட்டில் ஆஜரானார். அவ் வழக்குச் சுமார் பத்து மாதங்கள் போலும் நடைபெற்றது. முடிவில் தாசர் தமது நியாய வாதத் திறமையினால் வெற்றி பெற்று அரவிந்தரை விடுதலை யாக்கினார். அதனால் தாசரின் புகழ் நாடெங்கும் பரவியது. நாகப்பூர் ஹோம்ரூல் சங்கக் காரியதரிசியாகிய வைத்தியா அவர்கள் மீது அரசாங்கத்தார் கொணர்ந்த மற்றொரு வழக்கையும் இவர் எதிர் வழக்காடி ஜெயித்தார். பர்மாவில் டாக்டர் மேத்தா அவர்கள் மீது நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் மூலமாய்க் கொண்டு வரப்பெற்ற வழக்கிலும் தாசர் ஆஜராகி வெற்றி மாலை சூடினார். இவரது நியாய வாதத் திறனைக் கண்டு அரசாங்கத்தினரும் சில சமயங்களில் தங்கள் சார்பில் தாசரை நியாயவாதியாக அமர்த்தினார்களென்றால் அவரது திறமையைப் பற்றி வேறாகப்



புகழ வேண்டுமோ? அதுகாலை அவருக்குத் தினமொன்றுக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருமானங் கிடைக்கலாயிற்று. ஆரம்பத்தில் குடும்ப நிர்வாகத்திற்கே போதிய வருவாயின்றி வெளியூர்களுக்கு அலைந்து திரிந்து அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்த தாசர், விடா முயற்சியோடு உழைத்து வந்ததன் பயனாய்த் தினமொன்றுக்கு ஆயிரக் கணக்கான ஊதியம் பெறும் நிலைமையை யடைந்தது இந்திய வாலிப உலகம் நன்கு கவனிக்கத் தக்கதாகும். அவ்வாறு அவர் பெரும் பொருள் சம்பாதிக்க ஆரம்பித்த காலத்தில் பொருள் காத்த பூதம் போல் அப் பொருளை மூடிக் காக்க முற்பட்டாரல்லர். வறுமையின் கொடுமையை இளமையில் சுவைத்திருந்தாராதலின், வறுமைக் குள்ளாகித் தவிக்கும் ஏழைகளின் மீது இவரது கருணை வெள்ளம் கரை கடந்து செல்லலாயிற்று. எனவே தந்தையின் தருமத்தைப் பின் பற்றித் தாசரும் ஏழைகளுக்குப் பெருவாரியாக உதவி செய்து வந்தார். அநேக மாணவர்களுக்குக் கல்வி கற்கப் பொருளுதவி புரிந்தார். பொது ஸ்தாபனங்களுக்கு ஏராளமாகப் பணங் கொடுத்தார். வங்காளத்தில் அவரது உதவியால் முன்னுக்கு வந்த குடும்பங்கள் பலப்பல. கடைசிவரையில் அவர் தமக்கெனப் பொருளைச் சேமித்து வைக்கவே யில்லை.

அவ்வாறு சித்தரஞ்சனர் நியாய வாதத் தொழிலிலும், பொது ஜன சேவையிலும் உழைத்து வருங்காலத்திலேயே சமய நூல்களிலும், கவிதா விலாசங்களிலுங் கருத்தைச் செலுத்தினார். தாசரின் குடும்பத்தார் வைணவ மதத்தைச் சார்ந்தவர்கள்; எனவே பக்தி மார்க்கத்திற் பற்றுக்கொண்டவர்கள். தாசரும் தமது தந்தையாரைப் போலவே பக்தியை முதன்மையாகக் கொண்ட பிரஹ்ம சமாஜத்தின் கருத்துக்களில் அபிமானங் கொண்டார். வைணவ நூல்களை ஆராய்வதிலும், அவற்றை வசன நூல்களாக எழுதுவதிலும், பக்தி மார்க்கத்தின் பெருமைகளைப் பிறருக்கெடுத்துரைப்பதிலும் ஓய்வு நேரத்தைக் கழித்தார். ஆங்கில நாடு சென்று உயர்தரப் பரீக்ஷைகளில் தேறி, உயர்தர நீதி மன்றங்களிற் சதா ஊடாடிப் பழகிக்கொண்டிருப்பினும், நம் சித்தரஞ்சன தாசர் தந் தாய் மொழியாம் வங்காள மொழியில் இளமையிலேயே நல்ல அனுபவம் பெற்றிருந்ததற்கேற்பப் பின்னரும் வங்க பாஷையில் இலக்கண இலக்கியங்களை மேன்மேலுங் கற்று வந்தார். இளமையிலேயே அவருக்குக் கவிகள் எழுதுவது எளிதாக இருந்தது. பற்பல கவிகளை வங்காள பொழியில் எழுதி வெளியிட்டார். 1895-ம் ஆண்டில் 'மலஞ்சா' என்ற ஒரு நூலை எழுதினார். அதன் பின்னர் "அந்தர்யாமி" "கிஷோர் கிஷோரி" "சாகர சங்கீத்" என்பது முதலான பல அரிய கவிதா நூல்களை எழுதினார்.

அவை வங்காளத்திற் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன. அவற்றுள் "சாகர சங்கீத்" என்ற நூல் அரவிந்தரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. தாசர் 1915-ம் ஆண்டில் வங்காள மொழியில் "நாராயணா" என்ற பெயரால் ஒரு மாதப் பத்திரிகையைத் தொடங்கிச் சிறப்புற நடாத்தி வந்தார். பொதுவாக நந் தாசர் தந் தாய் மொழியில் அதிக அபிமானம் பூண்டு, அம்மொழி வளர்ச்சிக்கு அரிய ஊழியஞ் செய்து வந்துள்ளாரென்பதைத் தங்கள் தாய் மொழியை அனாதரவு செய்யும் தமிழ் மக்கள் நன்கு கவனிக்க வேண்டும்.

## தேச சேவையுஞ் சிறைவாசமும்.

சித்தரஞ்சனர் அறிவு பெற்றது முதற்கொண்டே தாய்நாட்டினிடத்து அபிமானம் மிகக் கொண்டிருந்தார். அஃது நாளடைவில் உறுதியடைந்துவந்தது. இங்கிலாந்து சென்றிருந்தபோது தாதாபாய் நௌரோஜி அவர்களின் சார்பாகச் செய்த பிரசங்கங்களில் இந்தியாவினுடையவும், இந்திய மக்களினுடையவும் பண்டைச் சிறப்பையும், தற்கால ஏழ்மையையும்பற்றி விரிவாக விளக்கினார். பாரத நாட்டின் தற்காலச் சிறுமைகளுக்கெல்லாம் காரணமாயிருப்பது பராதீன (அடிமை) வாழ்க்கையே யென்பதை நன்கு உணர்ந்தார். எனவே அவர் இந்தியாவுக்கு வந்தது முதல் இந்திய அரசியற் கிளர்ச்சிகளில் கவனஞ் செலுத்திவந்தார். ஆயினும் பகிரங்கமாக அக் கிளர்ச்சிகளிற் பங்கு பெற்று வேலை செய்வதற்கு அவரது குடும்ப நிலைமை இடங் தரவில்லை. ஆயினும் இந்திய அரசியற் சீர்திருத்தத்தைக் கோரி உழைத்து வந்த காங்கிரஸ் மகா சபையின் நிகழ்ச்சிகளில், அவ்வப்போது கலந்துகொண்டே வந்தார். கடைசியில் நாட்டின் அரசியல் நன்மையை நாடி உழைக்க முற்பட்ட ஹோம் ரூல் கிளர்ச்சியும், அதனை யடக்க அரசாங்கத்தார் கைக்கொண்ட அடக்குமுறை ஆர்ப்பாட்டங்களும், கிலாபத் இயக்கமும், காங்கிரஸ் போரும் முறையே சித்தரஞ்சனரின் சித்தத்தை யீர்த்ததோடு, அவரை அரசியல் அரங்கத்திற்கு இழுத்துவிட்டன. அவர் முதன் முதலாக 1917-ம் ஆண்டில் இந்திய அரசியல் விடுதலைப் போரில் பகிரங்கமாகக் கலந்துகொண்டார். அதுமுதல் தாசர் பாரத தேவியின் அடிமைத் தளைகளைத் தறித்தெறிந்து அவ் வம்மையை அரியணையின்மேல் அமரச் செய்ய மும்முரமாக உழைக்கத் தலைப்பட்டார். 1917-ம் ஆண்டில் ஆங்கிலேய துரைத்தனத்தார் இந்தியாவுக்கு ஒருவகை அரசியற் சீர்திருத்தத்தை வழங்க முற்பட்டனர். அதுகாலை அச் சீர்திருத்தங்கள் நாட்டின் தேவைக்குப் போதியனவல்லவென்று இந்திய மக்கள் அவற்றை ஏற்க மறுத்தனர். அவ்வாறு மறுத்த கூட்டத்



தில் நமது சித்தரஞ்சனருஞ் சேர்ந்து நின்றார். முழு உரிமையை வேண்டிச் சொற்ப உரிமைகளை மறுத்து நாட்டிற் பல இயக்கங்கள் தோன்றின. அவற்றின் கடுமையைக் கண்டு துரைத்தனத்தார் அவ் வியக்கத் தலைவர்கள் பலரைக் காவற்படுத்தி வந்தனர். அடக்குமுறைச் சட்டங்களைச் சிருட்டித்து இந்தியர்கள் அநேகரை அதற்குள்ளாக்கிப் பாதுகாப்பில் வைக்க அரசாங்கத்தார் முற்பட்டனின்றும் நமது தாசர், சர்க்கார் செயல்களைக் கண்டித்துப் பலமாகப் பிரசாரம் செய்யத் தலைப்பட்டார். நாடெங்கும் பல பிரசங்கங்கள் புரிந்து ஜனங்களை உற்சாகப்படுத்தினார். சிறைபுகுந்த நம் மக்களை விடுதலை செய்விக்க அரும்பாடு பட்டார். துரைத்தனத்தாருக்குப் பல உண்மைகளை எடுத்துக் கூறி அவர்களுடைய மனத்தை மாற்ற முயன்றார். அந் நிலையில் பாஞ்சால மாகாணத்தில் ஆங்கில சேனைத் தலைவர் டையர் துரை செய்த படுகொலைச் சம்பவம் நிகழ்ந்தது. அதனால் இந்தியா வெங்கும் ஒரு கொந்தளிப் பேற்பட்டது பாரத மக்களின் மனமெல்லாம் அனலைக் கண்ட மெழுகென உருகி யோடின. சித்தரஞ்சனரின் சித்தத்தைப்பற்றிக் கூறவேண்டுமோ? சற்றும் இரக்கமின்றி இந்திய மக்கள் விலங்குகளைப்போற் கொல்லப்பட்ட செய்தி அவரை யுருக்கிவிட்டது. காங்கிரஸ் மகா சபையாரால் பஞ்சாப் படுகொலையைப்பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட கமிட்டியில் நமது தாசரும் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக் கூட்டத்தினரோடு தமது சொந்தச் செலவில் பஞ்சாப்புக்குச் சென்று, விசாரணைகள் பல புரிந்து, அதன் கொடுமையை உலகத்திற் கறிவிக்கும் விஷயத்தில் அவர் அரிய வேலை செய்தார். அக் கொடுமைக்குத் தக்க பரிகாரத்தைத் துரைத்தனத்தார் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினார். நாடெங்கும் பெருங் கூக்குரல் கிளம்பியது. பிரிட்டிஷ் பாராளு மன்றத்தினர் இதுபற்றி நீதி வழங்குவரென யாவரும் எதிர்பார்த்தனர். ஆயினும் பார்லிமெண்டார் இக் கொடுமையை மேற்போக்காக மழுப்பிவிட்டனர். அதைக் கண்ட மகாத்மா காந்தியடிகளார் இனி அரசாங்கத்தினரை நல்வழிப்படுத்துவதற்கு ஒத்துழையாமையே இந்தியருக்கு ஏற்ற சாதனமெனக் கூறினார். கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டில் காந்தியடிகளார் ஒத்துழையா இயக்கத்தைக் காங்கிரஸ் கைப்பற்ற வேண்டுமென வற்புறுத்தினார். அச்சமயத்தில் சித்தரஞ்சனர் ஒத்துழையாமை இயக்கத்தை மறுத்தாராயினும், அடுத்த முறை நாகபுரியிற் கூடிய மகாநாட்டில் காந்தியடிகளைத் தம் தலைவராக ஏற்றுக்கொண்டு, ஒத்துழையாமை இயக்கத்தைப் பலமாக ஆதரித்தார். அது முதல் மாதந்தோறும் சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய் வருவாய் கிடைத்து

கொண்டிருந்த தமது நியாயவாதத் தொழிலை விட்டொழித்தார். தமது உடல், பொருள், ஆவிகளை ஒருங்கே ஒத்துழையாமை இயக்கத்தின் பெயரால் நாட்டுக்கு அர்ப்பணஞ் செய்யத் துணிந்தார். நாடெங்குஞ் சுற்றி ஒத்துழையாமை இயக்கத்தின் அருமை பெருமைகளை உபந்நியசித்தார். சுதேசியத்தை வற்புறுத்தினார். கதர் முயற்சியைக் கனப்படுத்தினார். பெருஞ் செல்வத்தில் திளைத்துக்கொண்டிருந்த தமது வாழ்க்கையை எளிமையாக மாற்றிக்கொண்டார். ஒத்துழையாமைப் போரின் மூலகர்த்தர் காந்தியடிகளா யிருப்பினும் அப் போரிற் சேனைத் தலைவராகச் சித்தரஞ்சன தாசர் விளங்கினார். சித்தரஞ்சனரின் மனைவியாரும், அவரது குமாரரும், தாசரது உடன் பிறந்த சகோதரிகளும் அவரது தேச ஊழியத்திற் பங்கு பெற்று வேலை செய்யத் தொடங்கினர். ஆங்கில அரசாங்கத்தின் அடிமை விலங்கினின்றும் பாரத தேசத்தை விடுதலை செய்வதற்குத் தாசர் பட்ட பாடு அளவிட முடியாது. அஹிம்சையோடு கூடிய சத்தியாக்கிரகப் போரின் உண்மைகளையும், பெருமைகளையுஞ் சித்தரஞ்சனர் எடுத்துக் கூறிய ஆற்றலினால் நாடெங்கும் அவ் வியக்கத்திற்கு அதிக ஆதரவு தோன்றியது. வங்காளத்தில் கலாசாலை மாணவ, மாணவிகள் பெருவாரியாகக் கலாசாலைகளை விடுத்துக் காங்கிரஸ் தொண்டில் ஈடுபட்டனர். அந் நிலையில் தந்தையைப் பின்பற்றி ஒத்துழையா வியக்கத்தில் வீறுகொண்டு உழைத்து வந்ததை முன்னிட்டுச் சித்தரஞ்சனரின் புதல்வராகிய சிர ரஞ்சன தாசரை அதிகாரிகள் 1921-ம் ஆண்டு டிசம்பர் 6-ந் தேதி கைதிசெய்து ஆறு மாதம் சிறைத் தண்டனை விதித்தனர். புத்திரனைத் தாசர் புன்முறுவலோடு சிறைப் புக விடுத்தார். அச்சமயத்தில் ஆங்கில இளவரசர் இந் நாட்டைக் காண வந்தார். அவரது வருகையை பகிஷ்கரித்து இந்திய மக்கள் தங்கள் அசம்மதியை வெளியிட முயன்றனர். கல்கத்தா நகரத்திற்கு இளவரசர் வரும் நாளில் சித்தரஞ்சனருடைய சகோதரியாராகிய ஊர்மிளா தேவியாரும், தாசரது மனைவியாரும் நகர வீதிகளிற் கதர் துணிகளை விற்றுக்கொண்டே, இளவரசரைக் காணத் தெருக்களிற் கூடிய மக்களைத் திரும்பிச் செல்லுமாறு போதிக்க முற்பட்டனர். அதைக் கண்ட அதிகார வர்க்கத்தினர் அவ் விருவர்களையுஞ் சிறைப்படுத்திப் பின்னர் விடுதலையாக்கினர். அதன் பின் 1921-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ந் தேதி ஆமதாபாத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்ட மொன்றில் தாசர் தலைமை பூண்டு அக் கூட்டத்தை நடத்திக்கொண்டிருக்கையில் அதிகாரிகளால் அவரும், அவரது சகாக்களுங் கைதி செய்யப்பட்டனர். அதுபற்றிய வழக்கு இரண்டு மாதங்கள் நடைபெற்று, ஆறு மாதச் சிறைவாசத்தை வெகுமதியாகத் தாசர் பெற்றார்.



அதனால் அவ்வாண்டு ஆமதாபாத்தில் நடைபெற்ற அகில இந்திய தேசிய மகாநாட்டின் தலைமைப் பதவிக்குத் தாசர் தேர்ந்தெடுக்கப்பட்டாராயினும், அத் தலைமையை அவர் வகிப்பதற் கில்லாமற் போயிற்று. சித்தரஞ்சனர் சிறை புகுந்தாரென்ற செய்தி நாடெங்கும் பரவி, பெருங் கிளர்ச்சி யுண்டாக்கியது. செல்வத்தை யீட்டிச் சுவர்க்க போகங்க ளன்ன சுகங்களை நுகர்ந்துகொண்டு சுகமே காலங் கடத்திய தாசர், தேச பக்தியின் மேலீட்டால் தஞ் சுகத்தைத் துறந்து, எளிய வாழ்க்கையைக் கைப்பற்றி, நாட்டுக்கு உழைத்துச் சிறைவாசத்தை மேற்கொண்ட தியாகத்தை என்னென்பது? அவர் இந்திய நாட்டுக்கே ஒப்பற்ற உறவினராகத் திகழ்ந்த பெருமையைக் கருதியே பாரத மக்கள் அனைவரும் அவரைத் "தேசபந்து" என்ற சிறந்த பெயரால் அழைக்க ஆரம்பித்தனர்.

## சுயராஜ்யக் கட்சியும் சட்ட சபை யாட்சியும்

ஆறு மாத காலம் விரைவிற் கழிந்தது. முன்னிலும் பன்மடங்கு வீரத்துடனும், உற்சாகத்துடனும் சித்தரஞ்சனர் சிறையினின்றும் வெளி வந்தார். அதற்கு முன்னரே மகாத்மா காந்தியடிகளார் பர்டோலியில் தொடங்கிய சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தி வைத்துத் தாமும் சிறைப் புகுந்திருந்தார். அரசனில்லாத குடிகளைப் போலும், தலைவ னில்லாத தானையைப் போலும் பாரத மக்கள் தலைவ ரின்றிச் செய்வன அறியாது திகைத்துக்கொண்டிருந்தனர். சட்ட மறுப்புப் போர் நிறுத்தப் பட்டமையின் நாடெங்கும் உற்சாகங் குன்றி நின்றது. காங்கிரஸ் வாதிகள் பலரும் சோர்ந்து காணப்பட்டனர். அந் நிலையைத் தேசபந்து கவனித்தார். நாட்டு மக்களுக்குப் புதிய உற்சாகத்தைக் கிளப்பி விடுவதற்கு என்ன வழி என்று யோசித்தார். கால நிலைமைக் கேற்ப ஒத்துழையாமைத் திட்டங்களை மாற்றி யமைக்க வேண்டுவது அவசியமென உணர்ந்தார். எனவே காங்கிரஸ் வாதிகள் சட்ட சபைகள் முதலிய அரசியல் ஸ்தாபனங்கள் அனைத்தையும் பகிஷ்கரித்து வெளியில் வேலை செய்வதைவிட, காங்கிரஸ் வாதிகள் தேர்தல்களில் நின்று, பெருந் தொகையினராகச் சட்ட சபைகளில் புகுந்து, அதன் மூலம் அரசாங்கத்தின் எதேச்சாதிகாரங்களுக்கு முட்டுக் கட்டை போட வேண்டுமென்று கூறினர். ஆனால் காங்கிரஸ் வாதிகளிற் பலர் அவரது கருத்தை எதிர்த்தனர். பழைய ஒத்துழையாமைத் திட்டங்களை ஒரு சிறிதும் மாற்றக் கூடாதென்று அவர்கள் கூறினார்கள். அதனால் தேசபந்துவின் கருத்தின்படி மாறுதல் வேண்டுவோர் சிலரும், மாறுதல் வேண்டாதோர் சிலருமாகக் காங்கிரஸில் இரு பிரிவினர் ஏற்பட்டனர். ஆயினும்

அவ்வாண்டில் கயாவில் கூடிய காங்கிரஸ் மகா நாட்டுக்கு நந் தேசபந்து தாசரே தலைவராக ஏக மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அம்மகா நாட்டில் தாசர் தமது தலைமைப் பேருரையிலும் சட்டசபைப் பிரவேசத்தை வற்புறுத்திப் பேசினார். எனினும் காங்கிரஸிற் பெரும்பான்மையான வாக்குகளால் சட்ட சபைப் பிரவேசத் தீர்மானம் தோல்வி யடைந்தது. அதைக் கண்ட தாசர் மனந் தளரவில்லை. தமது கருத்தின்படி மாறுதல் வேண்டுவதன் அவசியத்தைப் பற்றி நாட்டு மக்களுக்கு விளக்கிக் கூற முற்பட்டார். பண்டித மோதிலால் நேரு முதலிய அறிஞர்களும் தாசரின் கருத்தை யாதரித்தனர். ஆகவே தமது கருத்தைச் செய்கையிற் கொணர்ந்து காட்டுவதற்காக வேண்டிக் காங்கிரசின் தலைமையின் கீழ் சட்டசபைப் பிரவேசத்தை ஆதரிப்பதற்கெனச் "சுயராஜ்யக் கட்சி" யென்ற பெயரால் ஒரு சபை ஏற்படுத்தினார். அச் சபைக்குத் தாசர் தலைவராகவும், மோதிலால் நேரு காரியதரிசியாகவும் அமைந்தனர். அவ்விருவருங் கூடி நாட்டிற் செய்துவந்த பிரசாரத்தின் வேகத்தால் நாளுக்கு நாள் சுயராஜ்யக் கட்சிக்கு அதிகச் செல்வாக்கு ஏற்படத் தலைப்பட்டது. அதுவரையில் சட்டசபை மோப்பம் பிடித்துக்கொண்டு நாவில் நீர் வடித்துக்கொண்டிருந்த சென்னைத் தலைவர்கள் சிலரும் அதுவே சமயமெனக் கொண்டு வெகு அவசரமாகச் சுயராஜ்யக் கட்சியில் நுழைந்தனர். எப்படியும் உற்சாகங் குறைந்திருந்த நாட்டில் சட்டசபைத் தேர்தலின் காரணமாக ஒருபுதிய கிளர்ச்சியைத் தேசபந்து உண்டாக்கிவிட்டார். அதன் பயனாக 1923-ம் ஆண்டில் நாட்டில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்கள் பலவற்றிலுஞ் சுயராஜ்யக் கட்சியினர் பெரும்பாலாராகத் தேர்ந் தெடுக்கப்பட்டனர். தேசபந்து தாசர் வங்காள மாகாண சட்டசபைக்கு அங்கத்தினராயினார். மோதிலால் நேரு இந்தியா சட்டசபையில் அங்கம் பெற்றார். அவ்வாறு தாசர் செய்த உற்சாகமான முயற்சிகளைக் கண்ட காங்கிரஸ் மகாநாடும் அடுத்த கூட்டத்தில் தாசரின் திட்டங்களை ஒப்புக்கொண்டு, காங்கிரஸின் அரசியற் பணிகளை சுயராஜ்யக் கட்சியாரிடமே ஒப்படைக்கலாயிற்று. முதல் வருடத்தில் தாசரின் மாறுதலை நிராகரித்த தேசிய மகாநாடு, அடுத்த ஒரு வருடத்திற்குள் காங்கிரஸின் அரசியற் பொறுப்பனைத்தையும் தாசரின் வழி விட்டுக்கொடுக்க முற்பட்டதென்றால் தாசர் எவ்வளவு வேலை செய்திருக்க வேண்டுமென்பதை எண்ணிப் பாருங்கள். காங்கிரசைத் தமது வழிக்குத் திருப்பியதோடு தாசர் நின்றுவிடவில்லை. தாம் முதலில் கூறியபடியே தாமுந் தமது சகாக்களுங் கூடி மாகாண சட்டசபைகளிலும், இந்தியா சட்டசபையிலும் அரசாங்கத்தாரின் எதேச்சாதிகார அமுலை ஒவ்வொரு நிமிடமுந் தடுத்துக்கொண்டேவந்தனர்.



தேச நலத்தை மறந்து, சுயநலத்தை நாடிச் சட்டசபைகளிற் புகுந்து, அங்கம் வகித்து, அதிகார வர்க்கத்தினரின் பாட்டுக்குத் தாளம் போட்டுக்கொண்டிருந்த தலையாட்டி மெம்பர்கள் பலருக்குச் சட்டசபையில் இடமில்லாமற் செய்த பெருமையும் தாசருக்கே உரியதென்பதை யாரால் மறுக்கமுடியும்? தேசியக் கட்சியினர் ஸ்தல ஸ்தாபனங்களையுங் கைப்பற்றி, அவற்றின் மூலமுந் தேச நலத்திற்கான கருமங்களை யாற்ற வேண்டுமென்று தாசர் குறிப்பிட்டார். அவ்வாறே நாட்டிற் பல ஸ்தல ஸ்தாபனங்கள் தேசியக் கட்சியினரின் தலைமையின் கீழ் வந்தன. கல்கத்தா நகர சபையிலும் சுயராஜ்யக் கட்சியினரே பெரும்பாலாராக வந்தனர். ஆகவே அந் நகர பரிபாலன சபைக்குத் தலைவராக நமது தேசபந்துவே தேர்ந்தெடுக்கப்பட்டார். கல்கத்தா கார்ப்பொரேஷனுக்கு மேயராக வந்த முதல் இந்தியர் அவரேயாவர். எனவே கல்கத்தா எங்கும் இந்தியரிடையிற் பெரு மகிழ்ச்சி பொங்கியது. அவ்விதம் நகர சபைத் தலைமை பூண்ட நமது தாசர், நகர சபை நிகழ்ச்சிகளில் அரசியற் கட்சி வேற்றுமைகளைப் புகுத்தாமல் நகரத்தின் மேன்மைக்கும், குடிகளின் நன்மைக்குஞ் செய்த வேலைகள் பல. இளமையினின்றும் தாசரின் மனம் கிராமவாசிகளின் மீதும், ஏழை மக்களின் மீதுமே ஆழ்ந்து பதிந்திருந்தபடியால் நகர சபையின் மூலம் ஏழை மக்களுக்கு எவ்வளவு உதவிகள் புரியக் கூடுமோ அவ்வளவையுஞ் செய்ய முற்பட்டார். ஏழைகளுக்கு வீடுகள் கட்டி வழங்கியும், இலவசப் பாடசாலைகள் அமைத்தும், சுகாதார வசதிகளேற்படுத்தியும் நகர சபை உழைக்கலாயிற்று. அவ்விதம் தாசர் நகர சபையின் மூலம் செய்த ஊழியங்கள் அநேகம்.

## மந்திரி சபை மறைவும் தேசபந்துவின் மரணமும்.

1919-ம் ஆண்டில் இந்தியாவுக்கு வழங்கப்பட்ட மாண்டேகு—செம்ஸ்போர்டு அரசியற் சீர்திருத்தங்கள் தேச நிர்வாகத்தில் இரட்டையாட்சியைப் புகுத்தின. அவ் விரட்டையாட்சி முறை நாட்டுக்குக் கேடு சூழச் செய்வதென்பதைக் கருதியே, தேசியக் கட்சியினர் அச் சீர்திருத்தங்களைத் தேவையில்லையென நிராகரித்தனர். ஆயினும், நாட்டில் அரசாங்கத்தினரின் செய்கையை ஆதரிக்க மனிதர்கள் இல்லாமற் போகவில்லை. எனவே தேச நலத்தை மறந்த மிதவாதக் கூட்டத்தாரின் துணையுடன், சட்டசபைகளின் மூலம், இரட்டையாட்சி தாண்டவம் புரியத் தலைப்பட்டது. அதை நோக்கியே தாசர் சட்டசபைகளிலுள்ள பிறமி அங்கத்தினர்களை வெளியிலோட்டித், தேசியக் கட்சியினர் அச் சபைகளிற் புகுவதற்காக அரும்பாடு பட்டார். அவ்வாறு தாங்கள் சட்டசபைகளிற் புகுந்தது முதல் இரட்டையாட்சியை எவ்வாறு வீழ்ச்சி

படையச் செய்வதென்பதே அவருக்கு முக்கிய கவலையாயிற்று. அரசாங்கத்தினரின் ஒவ்வொரு செய்கையையுந் தடுத்துக்கொண்டே வந்தார். இரட்டையாட்சி மந்திரி சபையை வீழ்ச்சியடையச் செய்வதற்குச் சமயம் நோக்கிக்கொண்டிருந்தார். அவ்வாறு தாசர் பற்பல காரியங்களில் இடைவிடாது ஓய்வின்றி உழைத்து வந்தபடியால் அவரது உடல்நலங் குன்றியது. அந்த நிலையில் பெல்காமில் நடந்த காங்கிரஸ் மகா சபைக்குஞ் சென்றார். அதன்மேல் அவரது வியாதி அதிகப்படவே கல்கத்தாவில் தங்கிச் சிகிச்சை செய்துகொண்டு, மருத்துவர்களின் எச்சரிக்கையின்படி சின்னாள் இளைப்பாறக் கருதிப் பாட்னாவுக்குச் சென்று தமது சகோதரராகிய பிரபுல்ல ரஞ்சன தாசருடன் வசித்தார். சிறிது உடல் நலம் எய்தியவுடன் மீண்டும் தேச ஊழியத்தில் இறங்கினார். தேச நலங் கருதித் தமது பொருள் அனைத்தையும் வறியோருக்கு வழங்கினார். கல்கத்தாவில் தாம் வசித்துவந்த பிரம்மாண்டமான மாளிகையைப் பொது மக்களின் உபயோகத்திற்கென உதவினார். அம் மாளிகையின் மீதிருந்த கடனை நீக்கி, மேல்கொண்டு மதிப்பிடுமிடத்து அம் மாளிகையை வழங்கிய முகத்தால் லட்சத்து எண்ணாயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட தொகை, பொது நன்மைக்குத் தாசர் கொடுத்திருக்கிறாரெனக் கூறலாம். மேலும் இம் மாளிகையை வழங்குவதற்கு முன்னரே தம்முடையதென இருந்த சகல பொருள்களையும் ஏழைகளின் நன்மைக்கே பயன்படுத்திவிட்டாரென்பதையும் நாம் கவனிக்கவேண்டும். அப்போது பரிதிப்பூரில் கூடிய வங்காள மாகாண மகாநாட்டுக்குத் தேசபந்து தாசரே தலைவராக வரிக்கப்பட்டார். அம் மகாநாட்டில் அவர் "இந்தியரின் பிறப்புரிமை ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டால், இந்திய சுயராஜ்யம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ் நடைபெறவேண்டும்; இன்றேல் ஏகாதிபத்தியத்திற்கு வெளியிலேயே இந்தியரின் உரிமை ஸ்தாபிக்கப்படவேண்டும்" என்று வீர கர்ஜனை புரிந்தார். அவர் எவ்வளவு பேசியபோதிலும் அவரது கருத்து இரட்டையாட்சியை வீழ்த்த வேண்டுமென்பதையே நாடியிருந்தது. அதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்துவந்தார். மீண்டும் அவரது உடல் நலி வெய்தியது. அந்த நிலைமையில் 1925-ம் வருடம் மார்ச்சு மாதத்தில் வங்காள மாகாண சட்டசபையில் மந்திரி சபையின் சம்பளத்தைப் பற்றிய தீர்மானம் எழுந்தது. பார்த்தார் தாசர். அவ்வமயத்தைக் கைவிடுதல் கூடாதென்பதைக் கருதித் தமது சகாக்களுக்கு எச்சரிக்கை செய்து தமது நோய்வாய்ப் படுக்கையினின்றும் உடல் நிலையையுங் கவனியாமல், நாற்காலியில் தம்மைச் சட்டசபைக் கூட்டத்திற்கு எடுத்துச் செல்லச் செய்து, மந்திரிகளின் சம்பளத்தைப்பற்றிய தீர்மானத்தைக் கீழ் வீழ்த்தினார். அதிகார வர்க்



கத்தினர் மும்முறை மந்திரி சபையை நிலைநிறுத்த முயன்றுந் தோல்வியேயடைந்தனர். அதனால் வங்காள மாகாணத்தில் இரட்டையாட்சி முறை அடியோடு வீழ்ந்து பட்டது. தாசர் தாங்கொண்ட அழிவு வேலையில் வெற்றி பெற்றார். நாடெங்கும் அவரது வெற்றி பேசப்பட்டது. அரசாங்கத்தாரும் தாசரின் திறமையைக் கண்டு வியப்படைந்தனர். மற்ற மாகாண மக்களும் தாசரின் வழி பற்றி நடக்க விருப்பங் கொண்டனர். ஆனால் சென்னை மாகாண சட்டசபையில், மந்திரி சபையை வீழ்த்துவதற்குப் பதிலாகத் தாமே முன்னின்று திரிசங்கு சுவர்க்கம்போன்ற பினாமி மந்திரி சபையைச் சிருஷ்டித்து, தேசபந்து தாசரின் திட்டத்திற்குத் துரோகம் விளைவித்த சென்னைச் சுயராஜ்யக் கட்சித் தலைவர்களின் செய்கையை இங்குக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. தாசரைப் பொறுத்தமட்டில் சுயராஜ்யக் கட்சியின் தீரத்தை நாம் பாராட்டியே தீரவேண்டும். அவ்வாறு தாசர் வங்காளத்தில் இரட்டையாட்சியை யழித்த பின்னர், தேச நலத்திற்கான ஆக்க வேலைகளை யியற்றுவதற்கு முற்பட்டார். எனினும் அவரது உடல்நிலை அதற்கு இடங் கொடுக்கவில்லை. ஆகவே சின்னாள் ஓய்வெடுத்துக்கொண்டு உடல் நலம் எய்தக் கருதி "டார்ஜிலிங்" என்ற இடத்திற்குச் சென்றார். அவ்வாறு டார்ஜிலிங்கில் அவர் தங்கியிருக்கையில் முறை ஜுரம் அவரை விடாது வருத்திக்கொண்டிருந்தது. எத்துணைச் சிகிச்சைகளுக்கும் அந் நோய் குணமடையாமல் மேன்மேலும் அவரது உடல் வன்மையைக் குறைத்துக்கொண்டே வந்தது. கடைசியில் பாரத தேவியின் துரதிர்ஷ்ட வசமாய், தேசபந்து தாசர் தமது அருமை மனைவியும், அன்புக்குரிய புத்திரரும் அருகிலிருக்கையில், தமது ஐம்பத்தைந்தாவது வயதில், 1925-ம் ஆண்டு ஜுன்மீ 16-ந் தேதி மாலை 5 மணிக்குப் பூதவுடம்பை நீத்துப் புகழுடம்பைத் தாங்கினார். சித்தரஞ்சனர் இறந்து பட்டாரென்ற செய்தி காட்டுத் தீயைப்போல் எங்கும் பரவியது. பாரத மக்களின் உள்ளம் துடித்தது; மனம் பதைத்தது; கண்ணீர் ஆறாய்ப் பெருகியது. தாசரின் உடல் மறுநாள் கல்கத்தாவுக்கு ரயிலில் கொண்டுவரப்பட்டு, அந் நகர் வழியே ஊர்வலமாக மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அன்று கல்கத்தா நகரெங்கும் ஜனக் கூட்டம் சொல்லிமுடியாத அளவு கூடி நின்றது. மகாத்மா காந்தியடிகள் முதலிய பெரியோர்கள் பலரும் கல்கத்தாவுக்கு அன்றே வந்து சேர்ந்தனர். தாசரின் சவ ஊர்வலம் சினிமாப் படங்களாகவும் எடுக்கப்பட்டது. பலவாறு கூறுவானேன்? பாரத தேசமே ஆறாத் துயரில் மூழ்கியிருக்கத் தாசரின் உடல் அக்கினிக்கு அர்ப்பணஞ் செய்யப்பட்டது. அவரது மரணத்தைப்பற்றி இந்தியா மந்திரி, இராஜப்பிரதிநிதி முதலியோரும் வருந்திக் கடிதங்கள் எழு

# சூரிய அஸ்தமனம்.

திரு. து. லா சசிவர்ணம் அவர்கள்.

கதிரோன் மேலைக் கடலில் மறைகிறான். வித விதமான வர்ண விஸ்தாரத்தையுடைய மேகங்கள், தங்களாற் கூடுமானவரை மேலைவானை அழகுபட அலங்கரித்து, மனோஹரமான அந்த நேரத்தை இரம்மியப்படுத்துகின்றன. கண்ணையுங் கருத்தையுங் கவ்வும் அஸ்தமன சூரியனின் தங்க மயமான கிரணங்கள், நீலமேக படலத்தைக் கிழித்துக்கொண்டு சேய்மையிலுள்ள அழகிய குன்றின் உச்சியில் பிரகிருதா ஜோதிதம் ஜ்வலிக்கத் தவழ்கின்றன. அக் கண் கொள்ளாக் காக்ஷி வெற்பின் உச்சியைத் தங்கத் தகடால் முலாம் செய்திருப்பது போலத் திகழ்கின்றது. மனதைக் குதூகலிக்கச் செய்யும் மாலை வேளை. அத்துடன் தென்றிசைத் தென்றலுங் கூடிக்கொண்டு, ஒவ்வொரு தோட்டங்களுக்கும் விஜயஞ் செய்கிறது. மரத்துக்கு மரம், இலைக்கு இலை, மலர்க்கு மலர், ஏன்? இதழுக்கு இதழ் சென்று வழக்கப்படி "ஒருவரை ஒருவர் நேசியுங்கள்" என்ற நற்செய்தியை இனிமையான தொனியில் மெதுவாய்ச் சொல்லிச் செல்லுகிறது. அம் மந்த மாருதம், தனது மார்த்தவம் வாய்ந்த மந்த கதியால் ஒவ்வொரு செடி கொடிகளையும் அததன் அருகாமையிற் செழிப்பாய் வளர்ந்திருக்கும் செடி கொடிகளை முத்தமிட்டுத் தழுவி மகிழ்த்தல் செய்கிறது.

மரங்களின் உச்சியில் இருந்துகொண்டு குயில், வானம்பாடி, நாகணவாய், தூக்கணத்தான் முதலிய பறவைக் குழாங்கள் கேட்போர் மனம் இன்பத்தில் மூழ்கும்படி, இனிமைக் குரலால் உல்லாசமாகப் பாடிக்கொண்டு கானவர்ஷத்தை வாரி வாரி யிறைத்துக் கொண்டிருக்கின்றன. காக்கை இனங்கள் பகலிற் பற்பல கஷ்டங்கள் மத்தியிலும் கவலைகளுக்கிடையுங் கழித்த சிரமத்தைப் போக்கி

---

திஞர்களென்றால் இந்தியரின் நிலையை யாரால் வர்ணிக்க முடியும்? தேசபந்துவின் ஆன்மா இன்று முப்பத்துமுக்கோடி பாரத மக்களின் உள்ளத்திலும் உறைந்து, ஊக்கி, நிற்கிறதெனக் கூறலாம்.



விஸ்ராந்தி செய்துகொள்ளுவதற்காகக் கூண்டை நோக்கிப் பறக்கின்றன. அதற்குள்ளும் பசித்துவிட்டதா? அவசர அவசரமாக அவைகள் பகலெல்லாம், மேய்ந்தது போதாமல் இன்னும் இரைக் கலைகின்றன. கிளிக் கூட்டங்கள் மரப் பொந்துகளாகிற தங்கள் கூடு நோக்கித் தாவள்யமான விண்ணில் பறக்கும் மரகதக் காட்சி மனத்தையள்ளுகிறது. அப்புறம் அணிற் காட்சி! முதுகில் மூந்திறப் பட்டை தீட்டப் பெற்று ராமதாரியாய்த் தோன்றும் அழகிய அணில், தனது அடர்த்தியான வாலை நூதன முறையில் சந்தோஷத்துடன் ஆட்டிக் கொண்டு, அடர்ந்த புதருக்குள்ளிருக்குங் கூட்டை நோக்கி விரைவாய் ஓடுகிறது. இடையிடையே அணில் தனது இனிய சிறிய குரலால் "டிங் டிங்" என ஒலிக்கிறது. இச் சப்தத்தைக் கேட்ட மாத்திரத்தில், மர உச்சியில் இருந்துகொண்டு ஏவரோ மணிநாதம் செய்கிறதுபோலிருக்கும். பகலில் வெகு நேரங் காத்திருந்து, இருட்டிய பின் இரை தேடத் திருட்டு எலியானது துவாரத்தை விட்டு மெல்லென வெளி வருகிறது. கடைசியாக ஆந்தையும், வௌவாலும், பகலவன் மேலைக் கடலில் மூழ்கும்வரை பொறுமையுடன் காத்திருந்து, நள்ளிருளில், உலகத்தில் தங்கள் பாகத்தை நடிக்க மகிழ்ச்சியுடன் வெளி வந்து உலாவுகின்றன.

பகல் முழுதும் வயலில் மெய்நோகக் கஷ்டப்பட்டு வேலை செய்து களைப்புற்ற ஏழைக் குடியானவன், மாலையில் வீடு நோக்கி மெதுவாய் வந்துகொண் டிருக்கிறான். அவனை அன்று பகலெல்லாம் காணாதிருந்த அவனது இளங் குழந்தைகள் சிரித்த முகத்துடன், கரங்களை நீட்டிக்கொண்டு ஆவலோடும் ஓடி வருகின்றன. அவன் மனைவி, நாயகனுக்குங் குழந்தைகளுக்குஞ் சோறு சமைக்கின்றாள். அதிலே புத்ர வாஞ்சையையும், காதல் பக்தியையும் ரஸமாகப் பிழிந்து பெய்கின்றாள். இல்லாவிட்டால் அவ்வளவு கேவலமான உணவுக்கு இவ்வளவு ருசி எங்கிருந்து வரும்? ஆனிரைகளை மேய்புலத்தே கொண்டு சென்ற யாதவச் சிறுவன், பகற்கால முழுதும் புல்லடர்ந்த பாங்குகளில் மேய்த்துவிட்டு, மாடுகளைத் தனக்கு முன்னே விட்டு ஓட்டிக்கொண்டு மலையிலிருந்தும் இறங்கி வந்து கொண்டிருக்கிறான். பசுக் கூட்டங்களைச் சம்ரக்ஷிப்பதில் அவன் அடைந்திருக்கிற இன்பத்தைப் பாட்டாக இசைத்து, கேட்போர் மனமுருக இனிமையாய்ப் பாடிக்கொண்டு வருகிறான். இடையிடையே மாடுகளின் கழுத்து மணிகள், மாடுகள் நடக்கும்பொழுது இங்கும் அங்குமோடி கணீர் கணீர் எனச் சப்தித்துக் கொண்டிருக்கிறது. இம் மணிகளின் ஓசையும், யாதவச் சிறுவனின் புல்லாங்

குழற் கானமும், ஒன்றாய்க் கலந்து மலை யடிவாரத்தில் உள்ள சிறிய கிராமத்திற்கு இனிமையாகக் கேட்கிறது.

அக் கிராமத்தின் அண்மையில் உள்ள பசும்புற் பிரதேசத்தில் அவ்வூர்ச் சிறுவர்கள் ஆனந்தமாய்க் கிளித்தட்டு, பளீன் சடுகுடு, வட்டக்கவடி, நெடுங்கவடி முதலிய வீர விளையாட்டுகள் விளையாடும் பொழுது எழாநின்ற பேரிரைச்சல், சிறிது சிறிதாக ஒடுங்க ஆரம்பிக்கிறது. வியர்த்து விருவிருக்க விளையாடிய அச் சிறார்கள் அருகாமையில் நிஸ்ஸப்தமாய் ஓடிக்கொண்டிருக்கும் நீல நீரோடைக்குச் சென்று, உல்லாசமாய் ஆரவாரம் செய்து நீந்திக் குளிக்கிறார்கள். அவர்களுடைய தாய்மாருஞ் சகோதரிகளும் மட் குடங்களை இடையில் ஏந்தி ஊருக்கு வெளியிலே உள்ள கிணற்றிற்குத் தண்ணீர் கொண்டுவர வேகமாய்ப் போய்க்கொண் டிருக்கிறார்கள். அவ்விதம் நடந்து போகும் பொழுது அவர்களின் மெல்லிய பாதத்தை அழகு செய்துகொண் டிருக்கின்ற, பொற்சிலம்புகளும், மிஞ்சிகளும் கலீர் கலீரென ஒலிக்கின்றன. அச் சப்தம் கேட்ட பலர் அப் பெண்கள் பாடிக்கொண்டு போகின்றார்களோ என ஐயுறுகிறார்கள்.

இவ் வுலகத்தில் நிமிஷத்திற்கு நிமிஷம் சப்தம் ஒடுங்கி நிஸ்ஸப்தம் ஓங்குகிறது. எனது அழகிய அறையின் சாளரத்தைத் திறந்து தலையை வெளியே நீட்டி எனக் கெதிரில் தோன்றும் நறுமலர்ச் சோலையைப் பார்த்தேன். பிறகு எனது பார்வை கூப்பிடு தூரத்திற் சலசலவெனச் சப்தித்து, மெதுவாய்க் கீழ்த் திசை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் சிற்றாறை அடைந்தது. மேலைவானில் பொன் மயமாய்ப் பிரகாசிக்கும் அஸ்தமன ஆதித்தனும், அதனைச் சூழ்ந்து அழகாய்த் தோன்றிய மேகங்களும் அந் நதியின் சலனமற்றிருந்த ஜலத்தில் பிரதிபிம்பித்துக் கண்ணைப் பறிக்கும் காட்சியைக் கண்டு, நான் அடைந்த ஆனந்தத்திற் சிறிது போழ்து கற்சிலை யென அசைவற்று நின்றுவிட்டேன். ஸ்வர்ண மயமாய் விளங்கும் அச் சிறு நதிக்குப் பின்னால், தென்னை, மா, பலா, கமுகு, வாழை முதலிய மரங்கள் வானை முட்டி மேகங்களை முத்தமிட்டுக் கொஞ்சும் பச்சைப் பள்ளத்தாக்கு ஒன்று எனது பார்வைற் பட்டது. தென் திசையினின்றும் திவ்யமென் காற்று நறுமலர்ச் சோலையில் நன்மணங் கவர்ந்து மெல்லென சாளரம் வழியாக அறைக்குள் நுழைந்து எனது இரு கன்னங்களை இடைவிடாமல் தொடர்ச்சியாய்த் தொட்டுத் தொட்டுச் சென்றது.

வெளி உலகமெங்கும் சந்தோஷம் நிரம்பி யிருக்கிறது. என் ஹிருதயத்தில் மட்டும் துக்கமும் அமைதியின்மையும் ஏனோ குடிகொண்டிருக்கிறது? மலை உச்சியில் உள்ள பங்களாவில் ஏற்றப்பட்



டிருக்கும் மின்சார தீபத்தின் பிரகாசம், எனது ஹிருதயத்தில் உள்ள துக்க மென்னும் இருளை யெட்டித் தொடத்தானும் முடியவில்லை. மேலும் அச் சிறிய மலையின் மத்தியில் உள்ள தேயிலைத் தொழிற் சாலையில் பிரகாசிக்கும் தீபமும், எனது மனதைக் களிப்பிக்கவில்லை.

மேற்கு வானத்திற் பலவித நிறந் தீட்டிய, அழகிய மேகக் கூட்டங்களுக் கிடையில், பொன் போல் ஜ்வலிக்கும் தனது உருவத்தை மறைத்துக்கொள்ளப் போகிற செங்கதிர்த் தேவனைக் கடைசி முறையாக ஆவலோடு பார்த்து ஆனந்தித்த பின், ஜன்னலை மூடித் தாளிட்டேன். உடனே இருள் கொஞ்சங் கொஞ்சமாக வளர்ந்து, இறுதியில் எனது அறை முழுதும் அந்தகார மயமாய் விளங்கும்படி செய்தது. நான் எனது விளக்கைக் கொளுத்தினேன். உடனே இருள் சூரியனைக் கண்ட பனி யென மறைய ஆரம்பித்தது. வெளிச்சம் எனது அறையின் மூலை முடுக்கு, சந்து பொந்து, எல்லா இடத்திலும் பரவி, அறைக்குள் இருள் மருந்துக்கு மில்லர்மல் செய்தது. ஆனால் ஒரு இடத்தில் இருந்த இருள் மட்டும் நீங்கவில்லை. அந்த இடத்தை எனது தீபத்தினாலும் அல்லது இப் பிரபஞ்சத்தில் உள்ள எந்த விளக்கினாலும் நெருங்க முடியாது. அந்த இடந்தான் துக்க மென்னும் சாகரத்தில் மூழ்கிக் கிடக்கும் என் ஹிருதயம். புறத்தில் ஆனந்தமான வெளிச்சம்; அகத்தில் அசைக்க முடியாத காரிருள். ஆழமான சமுத்திரத்தினடியில் உள்ள இருண்ட பயங்கரக் குகைகளைப் போல எனது ஹிருதயத்தில் துக்க இருள் நிரம்பி யிருந்தது. ஐயோ! கஷ்டம்! பகல் முழுதும் ஓய்வின்றி நெற்றி வியர்வை நிலம் நோக்கி விழக் கஷ்டத்துடன் வேலை செய்ததினால் ஏற்பட்ட களைப்புத்தான், ஹிருதயத்தைத் துன்பப்படும்படி செய்தது. அதுதான் எனது ஆறாத துக்கம். மனிதப் பிரயத்தனத்தால், அக் களைப்பை நீக்கும் ஓர் மருந்தை—எனது ஹிருதய கமலத்தை மூடிக்கொண் டிருக்கும் இருளை நீக்குஞ் சக்தியுள்ள ஒரு பிரகாசத்தைக் கண்டுபிடிக்க முடியுமா?

ஹா! என்ன ஆச்சர்யம்! கண்டேன் சஞ்சீவியை! இதோ வருகிறது வெளிச்சம்! நான் விரும்பிப் படிக்கும் "பாரதி" என்னும் அருட்சோதி, அதனுடைய உயரிய கட்டுரைகளுடனும், இனிய காதற் கதைகளுடனும், ஜெகப் பெரியார்களின் திவ்ய சரித்திரங்களுடனும் வருகிறது. வினோத வியாசங்களுடன் தோன்றும் "பாரதி" தன்னைப் படிக்கும் அன்பர்களைப் பரவசப்படுத்துகிறது. அதைப் படிப்போர், பகலில் தாங்கள் பட்டபாட்டையும், கஷ்டத்தையும், அதனாலேற்பட்ட கவலையையும் மறந்து ஆனந்த சாகரத்தில் மூழ்குகிறார்கள். பாரத மாதாவின் தவப் புதல்வர்களாலும், புதல்விகளாலும்

பாடப் பெற்ற இனிய அழகிய பாடல்களைப் "பாரதி" தன்னகத்தே ஏந்தி, வெளிவந்து வாசகர்களுக்குச் செவி அமுதூட்டுகிறது.

பூமியை இருள் மூட ஆரம்பிக்கிறது. எனது ஹிருதயத்தில் நிறைந்திருந்த இருள் சிறிது சிறிதாக மறைந்துகொண்டிருக்க, வெளியிருள் கொஞ்சங் கொஞ்சமாக வளர்ந்துகொண்டிருக்கிறது. இறுதியில் இருள் எங்கும் பரவிவிட்டது. எனது ஹிருதயம் நிமிஷத்திற்கு நிமிஷம் காந்தியைப் பெற்றுக் கடைசியில் பூரண பிரகாசத்துடன் விளங்குகிறது. எனது ஹிருதயத்திற்குப் பூரண பிரகாசம் அளித்தது எது? அஸ்தமிக்கும் ஆதித்தனின் அருட் ஜோதியா? அல்லது எனது மேஜைமீதிருக்கும் தீபத்தின் பிரகாசமா? அதோ வெற்பின் உச்சியில் காம்பீர்யமாய் வீற்றிருக்கும் பங்களாவிற் பிரகாசிக்கும் மின்சார தீபத்தின் காந்தியா? இல்லை அவற்றுள் ஒன்றுமே இல்லை. ஆனால் அதுதான், ஒரு சில தனவந்தர்களால் போஷிக்கப்பட்டு, எண்ணற்ற பெரியோர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு, கணக்கிடங்காப் பத்திரிகாபிமானிகளால் பாராட்டப்பட்டுப், பல அறிவாளிகளின் கட்டுரைகளுடன் தமிழ் நாட்டின் "மாடேர்ன் ரெவ்யூ" எனப் புகழ் பெற்று வெளி வந்து உலாவும் உயரிய "பாரதி" எனச் சொல்லவும் வேண்டுமோ? எனது திரேகத்தைப் பீடித்திருந்த களைப்பு என்னும் பிணி நீங்கிற்று. மனதில் இருந்த துக்கம் மறைந்து மனம் நல்ல நிலை எய்தியதுடன் மறு நாள் வேலைக்குந் தயாராய் இருந்தது. தன்னை மறந்த லயந்தனில் அயர்ந்து தூங்கிவிட்டேன். "பாரதி"யின் தாலாட்டு என்னை நித்திரா தேவியோடு நன்றாய்ச் சம்மேளிக்க—மெய்ப்பாடுறச் செய்திருந்தது. காலையிற் கண் விழித்தேன். கீழ வானிலே "பாரதி"யின் பரிதித் தோற்றம் பரம பவித்திரமான பவிசோடும் பிரபாகரமாகப் பிராப்தமாகி யிருந்தது.

---

"வயிற்றுக்கு ஒரு ரொட்டித் துண்டமும், தொண்டைக்கு ஒரு கை சுத்த ஜலமும், மனஸிற்கு ரஸமான ஒரு காவியமும், தலை சாய்க்கச் சிறிது நிழலும் இருந்து, துணைக்குப் பாடற் காந்தை ஒருத்தியும் இருந்துவிட்டால் பாலைவனங்கூட இன்ப உலகமாகிவிடுகிறது.

* * *

"அதோ அந்த ரோஜாப் புஷ்பத்தைப் பார்! சிரித்துக் கொண்டே அது சொல்லுகிறது:— உலகத்திலே நான் பிறந்தேன். பட்டுப் பட்டா யிருக்கும் இதழ்களைத் திறந்து எனது க்ஷேமத் திரவியங்களாகிற வர்ணத்தையும், வாசனையையும், அழகையும், உலக உத்தியானத்திலேதானே கொட்டிவிட்டுப் போகிறேன்."

—உமர் கையம்.

# எனது குருநாதரின் கடிதம்.

## (மனோகரனார்.)

## VII

இந்தியத் தாயின் தவப் புதல்வர்களாகிய
இளைஞர்களே! வாலிபர்களே!!

அன்னையின் அழைப்பு உங்கள் செவிக் கெட்டவில்லையா? என்ன செய்கிறீர்கள்? உங்கள் பிற்கால வாழ்வின் உன்னதத்திற்கு அடிகோலினீர்களா? இன்று உங்களிற் பலர் பள்ளியிற் படிக்கும் மாணவர்களா யிருக்கலாம்; மற்றும் பலர் தொழிற்சாலைகளில் வேலை புரியும் கூலிச் சிறுவர்களா யிருக்கலாம்; வேறு பலர் கால் நடைகளை மேய்த்து, விவசாயத்திற் குதவி புரிந்து வரும் பண்ணை யாட்களா யிருக்கலாம். இன்றேல் உலகத்தின் இன்னல்கள் இன்ன தென்பதை யறியாது களியாட்டயரும் காளையரா யிருக்கலாம். எவ்வாறிருப்பினு மென்ன? இளைஞர்களாக—வாலிபர்களாக இன்று இலங்கி வரும் நீங்களே நாளைப், பெரியவர்களாகி உலகை ஆக்கி,அளிக்க வேண்டியவர்களாவீர்க ளென்பதில் ஐயமுண்டோ? இன்று மணலிற் சிற்றில் அமைத்துச் சிறு விளையாட்டைப் பயிலும் நீங்கள், நாளை மண்டலத்தில் மாட மாளிகைகளை யமைத்து, மகா சாம்ராஜ்யங்களை நடத்த வேண்டியவராகலாம். இன்று மாதாவின் மடியில் தவழ்ந்து மழலைகள் பேசி, தந்தையின் மருங்கில் தளுக்குடன் குலவிக் காலம் போக்கும் நீங்கள், நாளை அன்னை பாரதியின் அரியாசனத்தைச் சூழ்ந்து, அவளது அரசுரிமையை நடாத்தும் அமைச்சர்களாகவும், வேற்றரசர்களின் வீறு தணித்துத் தந்தையர் நாட்டைத் தனிப்படக் காக்கும், வீரம் புரியும் தீரர்களாகவும் ஆகலாம். உங்களிற் பலர் இராஜ தந்திர விவேகிகளாகவும், விஞ்ஞான சாஸ்திர விசாரதர்களாகவும், மக்களின் மன இருளை யகற்றும் மாபெரும் பண்டித மணிகளாகவும், உலக சமாதானத்தை நிலை நாட்டக் கூடிய மேன்மை வாய்ந்த மேதாவிகளாகவும், பரோபகாரமே பரம லக்ஷியமாகக் கொண்டு உலக நன்மைக் குழைக்கும் உத்தமர்களாகவும், அற்புதங்களைக் (Inventions) கண்டு பிடிக்கும் விற்பன்னர்களாகவும், தியாக சீலர்களாகவும், ஜன சமூக சேவையாளராகவும் ஆகலா மென்பதை எண்ணிப் பாருங்கள். வாலிப இந்தியாவின் இடைவிடா முயற்சியாலேயே இனி நவ (New) இந்தியா உலகில் நாட்டப்பட வேண்டும். உலக சரித்திரத்தை ஒரு முறை உற்றுப் பாருங்கள். எந்த நாடும்,

எந்த இயக்கமும், எந்தச் சமூகமும் வாலிபர்களின் முயற்சியாலேயே ஓங்கி யிருப்பதைக் காண்பீர்கள். முடியரசர் யிருந்த பிரான்சு நாட்டைக் குடியரசாக்கிப் பிரபஞ்சத்திற்கே ஜனப் பிரதிநிதி யாக்ஷிக்கு வழி காட்டியவர்கள் அந் நாட்டு வாலிப வீரச் சிங்கங்களே யல்லவா? அமெரிக்காவை அடிமை வாழ்க்கையினின்றும் மீட்டு அற்புதச் சுயேச்சை யெய்தச் செய்தவர்கள் அந் நாட்டு வாலிபர்களல்லவா? வெகு தூரம் போவானேன்? அயர்லாந்தின் அபிவிருத்திக்கும், ருஷியாவின் முற்போக்கிற்கும், துருக்கியின் மேன்மைக்கும், ஜப்பானின் செல்வாக்கிற்கும், சீனாவின் சிறப்புக்கும் வழி கோலியவர்கள் அவ்வந் நாட்டு வாலிப ஊழியர்களல்லவா? இளமையும், மாசு மறுவற்ற உள்ளமும், உண்மை யிடத்துப் பற்றும், ஊக்கத்தோடு கூடிய வீரமும், கொண்ட கருமத்தில் உறுதியும் படைத்த, புதிய இரத்தம் உடலில் ஓடப்பெற்ற வாலிபர்களாலன்றி உலகில் மாபெருங் காரியங்கள் வேறு யாரால் சாதிக்கப்படு மென்பதை நீங்களே கூறுங்கள்?

பாரத மாதாவின் மணி வயிற்றை யலங்கரித்த இந்திய வாலிபச் சிங்கக் குட்டிகளே! எழுங்கள்! நீங்கள் அன்னியர் கூறுகிறபடி காட்டுமிராண்டிகளாகிய கருப்பு மனிதர்களல்ல வென்பதைக் கவனியுங்கள். உங்கள் நாகரிகம் மிகப் பழமையானது. பழமையும், பெருமையும் வாய்ந்த **எகிப்து, பாபிலோனியா, ரோம** சாம்ராஜ்யங்களுக்கும் நாகரிக அறிவு ஊட்டியது உங்கள் தாயகமாகிய **பாரத** சாம்ராஜ்யமென்பதை எண்ணிப் பாருங்கள். சாத்திரங்களுக்கும், கலைகளுக்கும் பிறப்பிடம் உங்கள் தந் தாய் நாடே யாகும். தத்துவ ஆராய்ச்சியில் முத்தினவராகிய வைதீக ரிஷிகளுக்கும், சாஸ்திர (Science) நுட்பங்களைக் கண்டுபிடித்துச் சித்துக்கள் புரிந்து, அற்புதங்கள் செய்த **சித்தர்**களுக்கும் பிறப்பிடமும், இருப்பிடமுமாய்த் திகழ்ந்தது உங்கள் நாடன்றி வேறெந் நாடாகும்? கரிபுரம், கார்லி, **அஜந்தா, எல்லோரா** போன்ற இடங்களிலுள்ள சிற்பச் சித்திரங்களின் மாட்சி வேறெந் நாட்டிலுள்ளது? **நாளந்தா, தக்ஷசீலா. வாரணாசி, காஷ்மீரம், காஞ்சிபுரம், மதுரை** போன்ற இடங்களிற் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோன்றி, விளங்கிப், புகழ் படைத்த சர்வகலாசாலைகளும், கலைமகட் கழகங்களும், பண்டிதச் சங்கங்களும், வித்யா பீடங்களும் பாரத நாட்டின் பண்டைப் பெருமையை விளக்குபவையன்றோ? **தில்லி, ஆக்ரா, அயோத்தி, மதுரை, ஸ்ரீரங்கம், தஞ்சாவூர், செஞ்சி** போன்ற மாநகரங்களிலுள்ள மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும், கோட்டை கொத்தளங்களும் இந்தியாவின் சிறப்புக்கு அறிகுறிகளன்றோ? **அசோகன், சந்திரகுப்தன், சிவாஜி, ராணா பிரதாபசிம்மன், பிருதிவிராஜன், விஜயநகர ராயன்** போன்ற எண்ணற்ற முடிமன்னர்கள் வாழ்ந்த குடிநிலம் உங்களுடையதன்றோ? **வீம**னின் பலமும், **விஜய**னின் விற்றிறமும், **அரவா**னின் ஆண்மையும், **ஹனுமா**னின்



(எஜமான பக்தி) அன்பும், **சிவாஜி**யின் சிந்தனையும், **பிருதிவி**யின் போர்வலியும் உங்கள் உடலில் ஊறியிருக்க வில்லையா? உங்களை நீங்களே அறிந்துகொள்ளாம லிருக்கிறீர்கள். **சங்கர**ரின் துறவுக்கும், **இராமாநுஜ**ரின் உறவுக்கும், **புத்த**ரின் தியாகத்திற்கும், **சைதன்னிய**ரின் அருளுக்கும், **இராமகிருஷ்ண**ரின் சமரசத்திற்கும், **வித்தியாரண்ய**ரின் விவேகத்திற்கும், **சாணக்கிய**ரின் சாகசத்திற்கும் உரிமையுடையவர்கள் யார்? நீங்களேயல்லவா? இத்துணைப் பெருமைகள் வாய்ந்த உங்கள் நிலை இன்று எப்படி யிருக்கிறது? கவனித்தீர்களா? ஆளும் அரசியலிலும், பேசும் மொழியிலும், பூணும் போலி நாகரீகத்திலும் அடிமை யெய்தி அவஸ்தை யடைகிறீர்கள்! உலகமெங்குஞ் சுதந்திர நாதம் செவிடுபட ஒலித்துக்கொண் டிருக்கையில், உங்களை விட்டு அடிமை மோகம் இன்னும் அகலாமலிருக்கிறது! அயல்நாட்டு மொழிகளில் ஆர்வங்கொண்டு ஜெகப்பிரியர் (ஷேக்ஸ்பியர்) ஹோமர், மில்தன் போன்ற பண்டிதர்களை மெச்சி நச்சிக் கொள்ளுகிறீர்களன்றி, உங்கள் தாய் மொழிகளில் வல்ல **காளிதாசன்**, பண்டித **பவபூதி, பாணன், கம்பன், இளங்கோ, தாயுமானார், போதன்னர், நன்னய பட்டர், துளசிதாசன்** போன்ற எண்ணற்ற கவியரசர்களின் கவிதை யமுதை யுண்டு களிக்கின்றீர்க ளில்லையே! இவ்வாறு கூறியதாற் பழம் பெருமையைப் பேசிப் பட்டாங் கடிக்கின்றோ மெனக் கருதிவிடாதீர்கள். பண்டைக் காலத்திய உங்கள் உயர் நிலையை ஒரு முறை எண்ணிப் பார்க்க மட்டுமே கேட்டுக் கொள்ளுகின்றோம்.

முற் காலத்தில் அத்துணை முன்னேற்ற மடைந்திருந்த உங்கள் நாடு தற்காலத்தில், அடைந்துள்ள நிலைமையை உற்று நோக்குங்கள்! நீங்கள் விவசாயத்தில் அடிமைகள்! வியாபாரத்தில் அடிமைகள்! கைத்தொழிலில் அடிமைகள்! அரசியலில் அடிமைகள்! ஆடையில் அடிமைகள்! உணவில் அடிமைகள்! ஊர்தி (வாகனம்) யில் அடிமைகள்! பேச்சில் (பாஷை) அடிமைகள்! நீச்சில் அடிமைகள்! எண்ணத்தில் அடிமைகள்! எழுத்தில் அடிமைகள்! உள்ளத்தில் அடிமைகள்! உணர்ச்சியில் அடிமைகள்! அந்தோ! உங்கள் அடிமை வாழ்க்கையின் நிலையை எவ்வாறு வர்ணிப்பது! நாட்டுப் பரப்பிலும், ஜனப் பெருக்கத்திலும், இயற்கை வளப்பத்திலும் வேறெந் நாட்டுக்கும் இம்மியளவுங் குறைவு படாத உங்கள் நாடும், நீங்களும் உண்ண உணவுக்கும், உடுக்கத் துணிக்கும் வகையின்றி வறுமை யெய்தி வாடி நிற்பதன் இரகசிய மென்ன? யோசித்தீர்களா? ஐரோப்பிய நாடுகள் அடைந்து வரும் அபிவிருத்திகளைக் கவனியுங்கள். கீழைத் தேசங்களாகிய ஜப்பானும், சீனாவும் முன்னேறி வருவதைச் சிந்தியுங்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகள் அடைந்து வருஞ் செழிப்பை விழித்து நோக்குங்கள். உலகின் பல நாடுகளும் சுதந்திர தேவியின் வெண்

கொற்றக் குடை நிழற் கீழ்ச் செல்வச் சங்கூத, வெற்றி முரச மொலிக்க, சுதந்திர கீதம் முரல, ஆனந்தப் பறை முழங்க உலக பவனி வந்துகொண் டிருக்கையில், பாரத நாடு அடிமைத்தளை பூண்டு வறுமைக் காராக்கிருகத்தில் வருந்திக்கொண் டிருப்பதை ஏறிட்டுப் பாருங்கள். உங்கள் உரோமஞ் சிலிர்க்கவில்லையா? உடல் துடிக்கவில்லையா? இரத்தம் பீறிட்டுப் பாயவில்லையா? என்ன செய்யப் போகிறீர்கள்? இதற்கு விமோசன மென்ன? விடுதலை; விடுதலை; விடுதலை. ஆம். முக்காலும் விடுதலை. விடுதலை மந்திரமே உங்களுக்கு விடுதலை யளிக்க வல்லது. உங்கள் விடுதலைக்கு ஊறு விளைத்து நிற்குஞ் சாதி பேதம், சமய பேதமென்கிற தளைகளை யறுத்துத் தள்ளுங்கள். ஏறக்குறைய முப்பத்தைந்து கோடி பாரத மக்களில் ஒருவர்க்கொருவரை வேறுபடுத்திக் கலைத்து ஜாதியில், மதத்தில், சமூகத்தில், மொழியில் அடிமைப்படுத்தி வைத்திருக்கும் அஞ்ஞானத்தின் சக்தியை எண்ணிப் பாருங்கள். **ஜாதி பேத**மற்ற இந்தியா, **மத பேத**மற்ற இந்தியா, **சமூக பேத**மற்ற இந்தியா, **மொழி வேற்றுமையிற் பகையற்ற** இந்தியா, வாலிபர்களாகிய உங்கள் உழைப்பினிலேயே நிருமாணிக்கப்பட வேண்டுமென்பதை நினைவுறுங்கள்.

போலியான சாத்திரக் குப்பைகளைச் சுமந்து திரிகிறீர்கள். எடுத்ததற் கெல்லாஞ் சாத்திர ஆதாரத்தைத் தேடித் தவிக்கிறீர்கள். மக்களுக்காகச் சாத்திரங்களா? சாத்திரங்களுக்காக மக்களா? தலைக்குத் தகுந்த குல்லாய் செய்துகொள்ளுவதா? குல்லாய்க்குத் தகுந்த தலையைச் செய்துகொள்ளுவதா? உங்கள் பகுத்தறிவு கூறும் முடிவென்ன?. நீதிக்கும், யுக்திக்கும், அனுபவத்திற்கும் பொருத்தமற்ற ஆபாசக் கதைகளை உண்மையான புண்ணியச் சரிதைகளெனப் புகழ்ந்து நிற்கிறீர்களன்றி, உங்கள் நாட்டின் உண்மைச் சரித்திரத்தை யறிந்துகொள்ள முயற்சிக்கின்றீர்களில்லை. வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம் என்ற முறையில் மலிந்த நூல்களின் பெருக்கத்தைக் கண்டு மகிழ்கிறீர்களன்றி, அவற்றுள் காணப்படும் முரண்பாடுகளையும், உண்மைக் கருத்துக்களையும் வேறுபடுத்தி உணர்கின்றீர்களில்லை. உலகில் தத்துவ சாஸ்திரங்களுக்கு முதன்மையும், பெருமையும் வாய்ந்த பிரஸ்தானத் திரயங்களென்ற **உபநிடதங்கள், வேதாந்தச் சூத்திரங்கள், பகவத் கீதைகள்** எங்களுடையவை யெனப் பெருமை பாராட்டுகிறீர்களன்றி, அவற்றிற்குச் சங்கரரும், மத்வரும், இராமானுஜரும் முறையே அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம் என்ற முத்துறைகளிற் பாஷ்யங்கள் (உரை) எழுதியதன் உண்மையை உய்த்துணர்ந்தீர்களில்லை. ஹிந்து வாலிப வீரர்களே! சமயத் துறையில் திருத்தங்கள் புரிவதற்கு உங்கள் பெரியோர்களாகிய வைதீகர்கள் சுலபத்தில் ஒருப்படமாட்டார்கள். அவர்களுடைய உள்ளத்திற் குருட்டுப் பிடிவாதமும், சமயப் பித்தும் தடிப்பேறி



நிற்கின்றன. எனவே இளைஞர்களாகிய நீங்களே சீர்திருத்தத் துறையில் துணிந்து இறங்க வேண்டும். இன்று புனாவில் (ஒடுக்கப் பட்டாருக்கும் ஜாதி ஹிந்துக்களுக்கும்) ஏற்பட்ட ஒப்பந்தம் ஹிந்துக்களிடையில் நேரவிருந்த பெரும் பிளவை யகற்றிய தென்பது உண்மையே. ஆயினுமென்ன? தீண்டாதா ரென்ற மக்களைச் சாதி ஹிந்துக்களென்போர் சரி நிகர் சமானமாக நடத்த முற்படாத வரையில் வேற்றுமை யென்பது வேறுபட் டொழியுமா? சாதி ஹிந்துக்களாகிய வாலிபர்களே! **காந்தி** யடிகளாரின் உண்ணு விரதத்தை இன்று ஒரு வகையில் முடிக்கச் செய்துவிட்டோ மென்று உள்ளங் களிக்கிறீர்கள். அதோ உங்கள் வைதீகப் பெரியார்களாகிய ஆச்சாரிகளும், பூசாரிகளும் புனா ஒப்பந்தத்தை வெட்டி வீழ்த்தப் படை திரட்டுகின்றனர். இளைஞர்களே! இப்பொழுது என்ன செய்யப் போகிறீர்கள்? வைதீகர்களின் வீண் மிரட்டல்களை யடக்கி, யொடுக்கிச் சீர்திருத்தங்களுக்கு வழிகோலி, நாட்டின் ஒற்றுமையை நனி சாதிக்க முன்வரப் போகிறீர்களா? அன்றி வைதீகர்களின் பிடிவாதத்திற்குத் தலை வணங்கி நாடு கெட, உலகம் போற்றும் **மகாத்மாஜீ**யை மீண்டும் விபத்தில் விடப் போகிறீர்களா? இரண்டில் ஒன்றைத் தீர்மானியுங்கள். நீங்கள் படித்த கல்வியும், பெற்ற உலகிய லறிவும் என்ன கூறுகின்றன? மூட வைதீகத்தை வெட்டி வீழ்த்தி, நாட்டு மக்களை ஒன்றுபடுத்துவது அவசியமெனத் தோன்றவில்லையா? இதுகாறும் குருட்டு வைதீகத்தால் நாட்டுக்கு விளைந்த நன்மை யென்ன? ஆறு கோடி ஹரி ஜனங்களைத் தீண்டாதாராக்கி ஹிந்து சமூகத்தைப் பிளவு செய்ததும், நாளடைவில் ஹிந்து சமூகத்தைக் குறைத்து இஸ்லாம், கிறிஸ்து ஆகிய சமூகங்களைப் பெருக்கியதுமன்றி வைதீகத்தால் விளைந்த வேறு விளைவுகள் என்னை? எனவே சமூகப் புரட்சி இயக்கத்தை எழுப்புங்கள். உங்கள் உள்ளத்தில் பதிந்துள்ள ஆன்ம சக்தியை வெளிப்படுத்துங்கள். காந்தி யடிகளாரின் புதிய சகாப்தம் தொடங்கிவிட்டது. இனி இந்தியாவில் இந்தியரென்ற ஒரு சமூகத்தினரை யன்றி ஹிந்துக்க ளென்றோ, முஸல்மான்க ளென்றோ, கிறிஸ்தவ ரென்றோ, சீக்கிய ரென்றோ, பிராமண ரென்றோ, அல்லாதா ரென்றோ பிரிவுகளைக் காண முடியாதென வெற்றிச் சங்கூதுங்கள். **சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம்** என்கிற தாரக மந்திரத்தை ஜெபஞ் செய்யுங்கள்.. உங்கள் நாடே அன்றி, உலகமே ஒன்றுபடுங் காலம் நெருங்கி வருகிறதென்பதை நெஞ்சிலிருத்துங்கள்.

இந்திய இளைஞர்களே! உங்கள் உடல் உரத்தை ஓம்பி வளருங்கள்! அறிவு நலத்தைப் பண்படுத்துங்கள்! நாட்டில் எங்கும்

சிலம்பக் கூடங்களும், உடற் பயிற்சிச் சாலைகளும், விளையாட்டு மேடைகளும், நீச்சுப் போட்டிகளும், வழி நடை ஓட்டங்களும், கடல் வழி யாட்டங்களும், மரக் கலப் பயிற்சிகளும், குதிரை ஏற்றங்களும், குஸ்திப் பழக்கங்களுங் காண முயலுங்கள்! உடல்வலியில்லாதார் எதையுஞ் சாதிக்கமாட்டார். உங்களின் போலி வைதீகம் உங்கள் உரத்தையுங் கெடுத்தது. நிலையற்ற உடலை யோம்புதல் மடமை என்ற மட வேதாந்தம், பாரத நாட்டை அடிமைக் குழியில் வீழ்த்திய தென்பதில் ஐயம் இல்லை. **பொன்னும், மண்ணும், பெண்ணும்** வெறுக்கத்தக்கவை யென்ற வெற்றுரை, வேதாந்தமாக மாறி நாட்டைக் கெடுத்து வந்திருப்பதைக் கவனியுங்கள்! மேற்கண்ட மூன்றை விட்டு மக்கள் உலகில் தனிப்பட வாழ்தல் கூடுமானதாமா? செல்வமும், தேசமும், மக்களைப் பெற்று மகிதலத்தை வாழ்விக்க வந்த மங்கையரும், இல்லாத மானிடர் வாழ்க்கைதானென்ன? இவற்றை வெறுப்பவர் இயற்கையை மறுப்பவரும், கடவுள் கட்டளையைக் கடப்பவரும் ஆவரன்றோ? எனவே சோம்பேறிகளின் வேதாந்தத்தை விரட்டியடியுங்கள்! நாட்டு நன்மைக்குப் பயன்படாத மக்களுக்கு, நாட்டில் இடமில்லாமற் செய்யுங்கள்! சோம்பேறிகளை யொழியுங்கள்! பிச்சை யேற்றுப் பிழைக்கும் சமூகங்கள், இந்திய சமூக விருக்ஷத்தை யழிக்கப் பிறந்த புல்லுருவிகளென்று எண்ணுங்கள்! ஆகவே இந்தியாவிற் பிச்சைக்காரக் கூட்டங்களை யழிக்க வகை தேடுங்கள்! தருமத்தின் பெயரால் சத்திரங்களில் திண்ணைத் தூங்கிச் சோம்பேறிகளுக்குச் சோறு போட்டு வந்தது போதும். அத் தருமச் சத்திரங்களைச், சாதி வித்தியாசங்களின்றி ஏழைகளாக வந்து தங்கும் பிரயாணிகளுக்கும், வேலைசெய்து பிழைக்க இயலாத கூன், குருடு, செவிடு முதலிய அங்க ஹீனர்களுக்கும், பெரு நோயாளருக்கும் உணவு கொடுத்து ஆதரிக்கும் உண்மை அறச்சாலைகளாக மாற்றி யமையுங்கள்! கோவில் கண்ட விடத்தும், கும்பல் கண்ட விடத்தும், ஊர் கண்ட விடத்துஞ் சூழ்ந்து நின்று பிரஜைகளைப் பிடுங்கித் தின்னும் பிச்சைக்காரர் கூட்டத்தை நந்நாடிலன்றி வேறெந் நாட்டிலுங் காண முடியாது. இத்தகைய சோம்பேறிக் கூட்டத்திற்கு வழங்குதலே அறம் என்ற அறியாமை இந்தியரை மேற்கொண்டிருக்கிறது. ஐரோப்பிய நாடுகளைப் போன்று உங்கள் நாட்டிலும் பிச்சைக்காரரைத் தாந்தோன்றிகளாகத் திரியவொட்டாமல் ஆங்காங்கே அறச்சாலைகளில் ஒன்று கூட்டி, அவரவருக் கேற்ற கைத்தொழிலைக் கொடுத்து வேலை செய்யச் செய்து, உணவு கொடுத்து ஆதரிக்க முன் வாருங்கள்! நாட்டிற் கைத்தொழிலுக்கு மரியாதை செய்யுங்கள்! சுதேசியத்தைச் சட்டிப் போற்றுங்கள்! சுதேசப் பொருள்களையே ஆதரிப்பதென்ற விரதத்தை அனுஷ்டிக்க முற்படுங்கள்! உத்தியோகத்திற் கொண்ட



மோகத்தை உதறித் தள்ளுங்கள்! இனி வருஞ் சுதந்திர இந்தியாவில் உத்தியோகத்திற்கு உயர்வு வேண்டாம்; உயர்ந்த சம்பளமும் வேண்டாம். விவசாயமும், வியாபாரமும், கைத்தொழிலுமே மரியாதை பெற்று மாண்புறட்டும்! இதுகாறும் நீங்கள் படித்த புராணப் படிப்புப் போதும். விஞ்ஞானக் கலைகளை விரிவாக்கப் பாருங்கள்! தாய் மொழிகளிற் பற்றுக் கொள்ளுங்கள்! அழகைப் போற்றுங்கள்! அன்பை ஏற்றுங்கள்! ஒழுக்கத்தை யோம்புங்கள்! உயர்வைக் கைப்பற்றுங்கள்! விண்ணில் பறக்கவும், கடலில் மூழ்கவும், நிலத்தில் விரைந்து செல்லவும், காற்றில் பேசவும், காலனை வெல்லவும், கடுகைத் துளைத்து எழுகடலைப் புகுத்தவும் ஏற்ற சாதனங்களைக் காண முயலுங்கள்!

இன்று அயல்நாட்டிற் கிழவனைக் குமரனாக்குகிறான். ஆணைப் பெண்ணாக்குகிறான்; பெண்ணை ஆணாக்குகிறான். மரணத்தை வெல்லப் பார்க்கிறான். சந்திரனோடு பேச முயலுகிறான். இருந்த இடத்தினின்று உலகைக் காண்கிறான்; உலகோடு பேசுகிறான். செயற்கை மனிதனைச் சிருஷ்டிக்கிறான். மரத்தை மாற்றுகிறான். மனம்போல மலரை மலரச் செய்கிறான். கருத்திற்கேற்ற வகையில் காய் கனிகளை விளைவிக்கிறான். பலநாட் பயிர்களைச் சிலநாளில் விளைவிக்கிறான். காற்றை யடக்குகிறான்; கனல்மீது ஊர்கிறான். நினைத்தபோது மழை நீரைப் பெய்விக்கிறான். கதிரவன் கதிர்களைப் பிடித்துவைத்துப் பணியாற்றிக்கொள்ள முனைந்து நிற்கிறான். கடல் அலைகளைக்கொண்டு இயந்திரங்களை யியக்கப்போகிறான். மனோ சக்தியைக்கொண்டு மண்டலத்தை யாட்டப்போகிறான். பண்டைப் பெருமை பேசிக் காலங் கழிக்கும் பாரத நாட்டு வாலிபர்களே! நீங்கள் யாது செய்கிறீர்கள்? தீண்டாதானைத் தொடலாமா? திருக்கோயிலுக்குள் யார் நுழையலாம்? பெற்ற பெண்ணை விவாகம் செய்து கொடுக்க யாருக்குப் பொருத்தமிருக்கிறது? உடலில் தோன்றிய வியாதிக்கு மருந்துண்ண நல்ல நாள் எப்பொழுது? புதிய கோடியுடுத்தவும், புது வீடு புகவும், பற்றுக் கணக்கெழுதவும் பரிசுத்தமான நாள் எஃது? உணவு உண்ணுவதற்கு எத் திசையை நோக்கியுட்காரவேண்டும்? தூங்கி எழுந்தவுடன் எதை நோக்கிக் கண் விழிக்க வேண்டும்? தெற்கு நோக்கிப் பல் துலக்கலாமா? என்கிற சந்தேகங்களுக்குச், சாத்திர ஏடுகளைப் புரட்டிக்கொண் டிருப்பதே உங்கள் ஆராய்ச்சியாக இருக்கிறது! நீங்கள் முன்னேறுவ தெக்காலம்? உங்களிலும் விஞ்ஞானப் புலவர்கள் (Scientists) இரண் டொருவர் இருக்கிறதாகக் கூறுகிறீர்களா? ஆனால் ஒரு **போசும்**, ஒரு **ரேயும்**, ஒரு **ராமனும்** எங்களுக்குளர் என்று நினைத்து வாளா யிருக்கப் போகிறீர்களா? அல்லது ஆயிரக் கணக்கான போசுக்களும், ரேக்களும், ராமன்களும் உங்களில் வெளிவர முயற்சிக்கப் போகிறீர்

களா? ஏட்டை யுருப்போட்டுப் பாடமேற்றிப் படித்துப் பட்டம் பெறும் பதவி உங்களுக்கு வேண்டாம். **கவி தாகூர்** எந்தச் சர்வகலாசாலையிற் படித்துப் பட்டம் பெற்று உயர்வடைந்தார்? **ஜகதீச சந்திர வசுவும், பிரபுல்ல சந்திர ராயரும்** எந்தப் பல்கலைக் கழகத்திற் கற்றுக் கனம் பெற்றனர்? காந்தியடிகள் எந்த யுனிவர்சிடியிற் படித்து மகாத்மாவாயினர்? இராஜா ரவிவர்மா எந்தக் கல்விக் கழகத்திற் கற்று ஓவியப் பண்டிதரானார்? சிந்தித்தீர்களா? நாட்டில் எத்தனை பீ.ஏ.க்கள், எத்தனை எம்.ஏ.க்கள், எத்தனை பி.எல்.கள் உளர்? அவர்கள் அனைவரும் கவியரசராகவோ, கலை வல்லுநராகவோ, சைன்ஸ் சாஸ்திரிகளாகவோ, மகாத்மாக்களாகவோ, ஓவியக்காரர்களாகவோ உயர்வு பெற்றனரா? இல்லை. இல்லை. இல்லையே. தனிமையில் தங்கள் உதவியின்றிக் கற்று உயர்வு பெற்ற பெரியோர்களுக்கும் பட்டங்கள் வழங்கி மரியாதை செய்து சர்வகலாசாலைகள் உயர்வு பெற்றனவன்றி, சர்வகலாசாலைகளால் உயர்வு பெற்றுப் பெரியோர்களானவர்களில்லை யென்பதைக் கவனியுங்கள். எனவே பட்டத்தில் ஆர்வம் வேண்டாம்; தொழில் திட்டத்தில் ஆர்வம் வையுங்கள். "பள்ளிக் கணக்கு புள்ளிக் குதவா" தென்றபடி வாழ்க்கை நலத்திற்கு உதவாத வறட்டுக் கல்வியாலாம் பயனென்ன? ஒரு தொழிலுஞ் செய்யத் தெரியாமல் ஒரு செய்யுளுக்குப் பத்துவிதப் பொருள் கூறும் புலமை வாய்ந்த ஒருவனைவிட, நாட்டுக்குப் பயன்படும் ஒரு சிறு மிதியடியைச் செய்யமாட்டும் ஒரு தொழிலாளன் மேலானவன் என்கிற எண்ணம் உங்களிடையில் நிலவட்டும்.

பாரத வாலிபர்களே! உங்கள் சமூகத்திற் பாதிப் பேராகிய பெண்மக்கள் உங்களுடன் சரிநிகர் சமானமாக வாழ்க்கை நலனை யெய்த வழி கோலுங்கள்! உங்கள் முயற்சிகளனைத்திற்கும் வாலிபப் பெண்களின் இடைவிடாத் துணை நலத்தைப் பெற முயலுங்கள்! இந்தியப் பெண்ணுலகம் விடுதலை யடையட்டும்! சொத்தில் சமமான பங்கு பெறட்டும்! கல்வியறிவில் மேம்படட்டும்! நாட்டின் நன்மைக்கான எல்லா முயற்சிகளிலும் ஈடுபடட்டும்! உங்களிடையிற் கலப்பு விவாகங்களும், காதல் மணங்களும், விதவை வாழ்வை வெருட்டி யோட்டும் விசேஷ விவாகங்களும் விரிவாக நடக்கட்டும்! பண்டை இந்தியர்கள் செய்துகொண்ட கலப்பு—காதல்—கைமை மணங்களுக்குப் பண்டை நூல்களிற் பல உதாரணங்களைக் காணலாம். இத்தகைய மணங்களால் நாட்டிற் கற்பு நிலவவும், ஒழுக்கம் வளரவும், ஒற்றுமை யுயரவும், சமத்துவந் தோன்றவுஞ் சாதனமுண்டாதல் நிச்சயம். இந்தியத் தாயின் இருந் தவச் செல்வர்களாகிய இளைஞர்களே! சீர்திருத்தப் புரட்சி இயக்கத்தை விரைந்து நடத்திப் புதிய இந்தியாவை ஏற்படுத்துங்கள்! புரட்சி என்ற மாத்திரத்தில் வட நாட்டில் இரண்டொரு வாலிபர்கள் அறியாமையாற்



செய்துவரும் வெடிக்குண்டு வேட்டை, பட்டப் பகற் கொள்ளை, வெள்ளையரைக் கொல்லல் போன்ற கொடிய இயக்கமெனக் கருதி விடாதீர்கள். நாட்டின் நலத்திற்கான சீர்திருத்தங்களைச் செய்வதற்கு மேற்கண்ட ஹிம்சையோடு கூடிய கொடிய முறைகளைக் கையாளுவது நாட்டுக்கும் மக்களுக்குங் கேடு சூழச் செய்வதாகும். அவற்றால் நாடு ஒருபோதும் நன்மை யெய்தப் போவதில்லை. எனவே மகாத்மாஜி அவர்களின் கட்டளைப்படி அஹிம்சையோடு கூடிய சாத்வீகப் புரட்சி இயக்கமே நீங்கள் காணவேண்டியதாகும். அதுவே அறிவுடைமையாகும்; மேலும் உலக மக்களின் நன் மதிப்பைப் பெறுவதுமாகும். இந்திய நாட்டு இளவல்களே! பாரதத் தாய் உங்கள் திருப்பணியை எதிர்நோக்கிக்கொண் டிருக்கிறாள். இமயம் முதல் கன்னிவரையிற் பரந்த இப் பார் முழுவதும் உங்கள் உழைப்பை எதிர்பார்க்கிறது. உங்கள் திருக் கோயில்களில் தீண்டாதாருக்கேயன்றி மக்களினத்தவருக்கெல்லாந் திருக் கதவுகளைத் திறந்துவிடுங்கள். பல தெய்வ வணக்கங்களைக் குறைத்து, ஒரு தெய்வ வணக்கத்திற்கு வழி காணுங்கள். நாத்திகர், ஆத்திகர் சண்டைகளுக்கு உள்ளாகாதீர்கள். ஒருவர் நாத்திகராகட்டும் அன்றி ஆத்திகராகட்டும் அவரும் மனிதரேயன்றோ? அவரும் சகோதர மக்கட் பிறப்பினரே யன்றோ? ஒருவர் ஆத்திகராயிருப்பதாலோ, நாத்திகரா யிருப்பதாலோ பெருமையும், சிறுமையுமில்லை. எவரேயாயினும் நாட்டு மக்களின் நன்மைக்கு ஒல்லும் வகையில் உழைப்பவர்களே பெருமைக் குரியவராவர்.

ஹரி ஜனங்களாகிய வாலிபர்களே! நீங்களும் இந்தியரே என்பதைக் கருதி வேலை செய்யுங்கள். உங்கள் மனத்தை அடிமைகொண்டுள்ள அஞ்ஞானத்தை யகற்றுங்கள். நீங்களும் மனிதர்களே யென்பதையும், மக்களுக்குள்ள சகல உரிமைகளும் உங்களுக்கும் உண்டு என்பதையும் எண்ணி எழுச்சியடையுங்கள். உங்களிடையில் அறியாமையாற் பரவிய அநாசாரங்களை விட்டொழியுங்கள். ஆசார சீலர்களாக ஆக முயலுங்கள். ஏனைய மக்களோடு சரிநிகர் சமானமாக வாழ முயலுங்கள். உங்கள் சுதந்திரத்தை நாட்ட முற்படுங்கள். தாழ்த்தப்பட்டோ ரென்றோ, ஹரி ஜனங்க ளென்றோ தனிப்படக் கூறப்பெறும் பெயர்களை இந்திய ரென்ற பொதுப் பெயரின் கீழ்ச் சேர்த்துக்கொள்ள முயலுங்கள். கிறிஸ்தவ, முஹம்மதிய சமூகங்களைச் சார்ந்த வாலிபச் செல்வர்களே! நீங்கள் கிறிஸ்துநாதரை வழிபடுவராயினு மென்ன? முஹம்மதுவின் வழி அல்லாவை வழிபடுபவராயினுமென்ன? நீங்களும் இந்தியரேயன்றோ? உங்கள் தாயகம் இந்தியாவே யல்லவா? நீங்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து நலம் பெறவேண்டிய இடம் இந் நாடே யல்லவா? கிறிஸ்தவ நாடுகளாகிய இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா முதலிய தேசங்கள் சுதந்திரம் பெற்றுச் சுகமே வாழ்ந்து வருகின்றன. இந்தியக் கிறிஸ்தவர்களா

ிய உங்களுக்கு அதனால் என்ன நன்மைகள் விளைந்தன? அப்படியே முகம்மதிய நாடுகளாகிய துருக்கிஸ்தானமும், ஆப்கானிஸ்தானமும் சுதந்திர வாழ்விற் சுகமெய்தி வருகின்றன. இந்திய நாட்டு முகம்மதியர்களாகிய உங்களுக்கு உண்டான உபயோகமென்ன? இந்தியா அடிமை நாடாயின் நீங்களும் அடிமைகளேயாகும். அடிமைகளாகிய உங்களுக்கு எந்நாட்டிலும் உயர்வு (மரியாதை) கிடையாது. எனவே நீங்கள் விடுதலை அல்லது உயர்வு அடைய வேண்டுமானால், உங்கள் தாய்நாடாகிய இந்தியாவைச் சுதந்திர நாடாக்க வேண்டும். இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு ஹிந்துக்களும், கிறிஸ்தவரும், மகம்மதியரும் பிறருமாகிய இந்தியக் குடிகளனைவரும் ஒற்றுமையெய்த வேண்டும். அவ்வொற்றுமையாலேயே இந்தியா பலப்பட வேண்டும். உங்களிடையிற் சமய பேதங்களைக் கூறிப், பிரிந்து நிற்காமல் சகலரும் ஒன்றுபடுங்கள். டாக்டர் அன்சாரி, மௌலானா ஷௌக்கத்தலி போன்ற மாபெருந் தலைவர்கள் பலர் ஒற்றுமைக்கு வழி காண முயன்றுகொண்டிருக்கிறார்கள். அவர்களின் முயற்சிக்கு வாலிபர்களாகிய நீங்கள் துணை நில்லுங்கள். மத வைராக்கியமும், மூடப் பிடிவாதமும் படைத்த மக்களால், உலகுக்கு நேர்ந்த நன்மை யென்ன? சற்றே யோசியுங்கள்! உலகில் விளைந்த சண்டைகள், சச்சரவுகள், கொலைகள், களவுகள், கலகங்கள் முதலிய அனைத்திற்கும் மூல காரணமாயிருந்தவை மதமும், அதை யொட்டிய மக்கட் பிரிவினையுமே யன்றோ? ஆதலால் பகுத்தறிவுக்கும், உலகிய லறிவுக்கும், ஈசுவர சிருஷ்டி யென்று கருதியவற்றை மாற்றி யமைக்கும் சூக்கும அறிவுக்கும் (விசுவாமித்திர சிருஷ்டி), ஆன்ம சக்திக்கும், விஞ்ஞானப் பயிற்சிக்கும், விவேக முதிர்ச்சிக்கும் பெயர் வாய்ந்த இவ்விருபதாவது நூற்றாண்டில் இனி மனிதனுக்கு மனிதன் வேறுபடுத்திப் பகை விளைக்கும் மதம், சாதி, சமூகம், தேசம், பாஷை, நிறம், உடை, செல்வம், உயர்வு, தாழ்வு என்ற வேற்றுமைகள் வீழ்ச்சியடைய வேண்டுவதே. அனைத்தும் ஒன்றாகவேண்டிய காலம் நெருங்கிவிட்டது. அவை கலந்த இடத்தின்மீது உலக ஒற்றுமை யென்கிற கோபுரம் எழும்ப வேண்டுவதே. இந்திய வாலிபர்களாகிய நீங்கள் அனைவரும் அதற்குத் துணைபுரிய முனைந்து நில்லுங்கள். நீங்கள் வெற்றி பெறுவது சரதம். உங்கள் நாடு உயர்வடைவது உறுதி. எழுங்கள்! வேலை செய்யுங்கள்!!

"தெய்வத்தா லாகாதெனினும் முயற்சிதன்
மெய் வருத்தக் கூலி தரும்"

என்ற மறைமொழியைச் சிந்தையிற் கொள்ளுங்கள்!

வந்தே மாதரம்.

---

# பிரெஞ்சு இந்தோ-சைனா.

## (FRENCH INDO-CHINA.)

திரு. M. K. அழகப்பா அவர்கள்.

பிரெஞ்சு இந்தோ-சைனா, ஆசியாக் கண்டத்தின் தென்மேற்குப் பாகத்தில், வடக்கே சைனாவையும், மேற்கே சயாமையும், கிழக்கே தொங்கின் குடாக் கடலையும் எல்லையாகக் கொண்டது. இது ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இதன் மொத்த விஸ்தீரணம் 2,85,000 சதுர மைல்களாகும். 1926-வது வருடக் கணக்குப்படி இதன் ஜனத்தொகை 2,07,00,000. இதில் ராணுவம் உள்பட ஐரோப்பியர்கள் 33,000 ஆவார்கள். இங்குள்ள சுதேசிகள் மங்கோலிய வகுப்பாரைச் சார்ந்தவர்கள். இந்நாட்டு மக்கள் பெரும்பான்மையோர் புத்த மதத்தைச் சேர்ந்தவர்களானாலுஞ், சிறிது காலமாக ரோமன் கத்தோலிக்க மதத்தைத் தீவிரமாகத் தழுவி இதுபோது தொங்கினிலும், அன்னாமிலும் 10,00,000 கத்தோலிக்கர்களிருக்கிறார்கள். இந்நாட்டின் கல்வி மேல்நாட்டின் முறைப்படி அதி தீவிரமாகப் பரவிவருகிறது. அன்னேய் என்கிற முக்கிய பட்டணத்தில் இக்கல்விக்குத் துணையாக ஓர் சர்வகலாசாலையு மிருந்துவருகிறது.

பிரெஞ்சு இந்தோ-சைனா உத்தராயணாந்த சக்கரத்திற்குத் தெற்கே மத்திய ரேகை (Equator)க்கு 8 டிக்கிரிவரையில் வடக்கிலிருக்கிறபடியால், கோடைகாலத்தில் அதிக உஷ்ணமாக இருக்கிறது. ஆனால் சில இடங்களிற் சீதோஷ்ண ஸ்திதி சற்று வித்தியாசமாக இருப்பதையுங் காணலாம். மெக்காங் (Mekong) என்ற இடத்திற்குத் தெற்கே மேமீ முதல் அக்டோபர் வரை, மாரி காலமாகவும், நவம்பர் முதல் ஏப்ரல் வரை கோடை காலமாகவு மிருக்கிறது. கொச்சின்-சைனாவும், கம்போஜியாவும் சமுத்திரத்திற் கருகாமையி லிருக்கிறபடியால் இங்குச் சீதோஷ்ண ஸ்திதி ஒரே நிலைமையிலிருக்கிறது. அன்னாம் கரையோரமாகச் சென்றால் பருவப் பயற்சிக் காற்று (Mansoon) அதிக வித்தியாசப்படுவதுடன், மாரிகாலத்தில் தென்மேற்கிலிருந்து பருவப் பயற்சிக் காற்றடிக்கிறது. தொங்கினிலும், மேற்கு அன்னாமிலும் பிப்ரவரி முதல் மார்ச்சுவரை சிறிது விடா மழை பெய்கிறது. இது கொஞ்சங் குளிர்ச்சியான பிரதேசம். இங்கு அடிக்கடி சீதோஷ்ண ஸ்திதி மாறும்பொழுதெல்லாம் புயற்காற்று உண்டாகிறது.

கோச்சின்-சைனா (Cochin-China) 1862-ம் வருடத்தில் பிரெஞ்சுக்காரர்களின் குடியேற்ற நாடாக்கப்பட்டது. அன்னாமும், (Annam) தொங்கினும் (Tonkin) 1884-ம் வருடத்திலிருந்தும், கம்போஜியா (Combodge) 1863-ம் வருடத்திலிருந்தும் பிரெஞ்சுக்காரர்களின் பாதுகாப்பில் (Protectorate) இருந்துவருகிறது. சயாம்காரர்களால் 1907-ம் வருடத்தில் கொடுக்கப்பட்ட பட்டம்பாங் (Battambang) என்கிற பிரதேசமும் கம்போஜியாவுக்குள் ளிருக்கிறது. லாஓஸ் (Laos), குவாங்-சோ-வான் (Kwang-Chau-wan) ஸ்டேட்டும் சீனர்களாற் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது.

இத் தேச முழுமையும் ஒரு கவர்னர் ஜெனரலால் ஆளப்படுகிறது. அவருக்கு உதவியாக ஒரு செக்ரட்டரி ஜெனரலுமுண்டு. ஒவ்வொரு மாகாண அதிபதிகளுக்கும் ரெசிடெண்ட் சுப்பீரியரென்னும் உத்தியோகப் பெயர் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் கோச்சின்-சைனா மட்டும் பிரான்சுக்காரர்களின் நேரிய ஆட்சியிலிருக்கிறபடியால் இங்கு ஒரு கவர்னர் தான் இருக்கிறார். தவிர இம்மாகாணத்தில் பிரெஞ்சுக்கார மாஜிஸ்ட்ரேட்டுகளால் நீதி வழங்கப்படுகிறது. பிரான்சுக்காரர்களின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களிற் சுதேசிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்கச் சுதேசி நீதிமன்றங்களும், ஐரோப்பியர் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்க ஐரோப்பிய நீதிமன்றங்களும் உண்டு. மேற்சொன்ன சுதேசி நீதி மன்றங்களிலிருந்து அப்பீல் செய்ய வேண்டுமானால் சைகோனிலும், அன்னோயிலுமுள்ள கோர்ட்டுகளுக்குத்தான் போகவேண்டும். ஆங்கு ஐரோப்பிய ஜட்ஜுகளும் அவர்களுக்கு உதவியாக சுதேசிகளான அன்னமித் மண்டாரின்களும் (Mandarin) இருந்து வழக்குகளை விசாரித்து வருகிறார்கள்.

இந்தோ-சைனாவின் வரவு செலவு (The Revenue and Expenditure of the Common Budget) 1931-ம் வருடக் கணக்குப் பிரகாரம் 10,80,00,000 ஆக இருந்து 1932-ம் வருடத்து வருமானம் 9,10,00,000 ஆகக் குறைந்து போய்விட்டது. இங்கு ஒவ்வொரு மாகாணங்களுக்குந் தனித் தனி வரவு செலவுகள் உண்டு. ஆனால் கோச்சின்-சைனாவில் மட்டும் ஒவ்வொரு ஜில்லாவிற்கும், ஒவ்வொரு நகர சபைகளுக்குந் தனித் தனி வரவு செலவுகளுண்டு.

இந்தோ-சைனாவிலுள்ள மொத்த ரயில் பாதைகளின் நீளம் 1927-வது வருடக் கணக்குப் பிரகாரம் 1,485 மைலாகும். இதில் மூன்றி லிரண்டு பாகம் சர்க்காருக்குச் சொந்தமானது. இங்குள்ள நதிகள் போக்கு வரத்துச் சாதனங்களுக்குப் பேருதவியாக விருக்கின்றன. மேலும் இந் நாட்டில் 7,300 மைல் கப்பி ரோடுகளும் 10,000 மைல் சாதாரண ரோடுகளும் உள்ளன. இத் தேசத்தைச்



சுற்றிப் பார்ப்பவர்களின் (Touristic) சௌகரியத்திற்காக சைகோனிலிருந்து, உலகத்திலேயே மிகப் பிரபலம் வாய்ந்த கண்காட்சிகளில் ஒன்றாக இருக்கும் புராதன கோவிலாயுள்ள அங்கோர் என்கிற ஊருக்கு ஆகாயவிமானப் போக்கு வரத்தும் வைத்திருக்கிறார்கள்.

இங்குள்ள நாணயம் பியாஸ்டர் (Piastre) எனப்படும் தங்கப் பிணைப்பிலுள்ள ஒரு வெள்ளி நாணயமாகும். இது ஏற்கனவே 27 கிராமாக விருந்து (27 Gramme) ஓராண்டாக 24 கிராம் எடையுள்ளதாக இருக்கின்றது. (8 கிராம் கொண்டது ஒரு பவுண்டு எடையாகும்) நிறை, அளவு முதலியன பிரான்ஸ் தேசத்திலுள்ளதே போல் வழங்கப்பட்டு வருகின்றன.

## பாங்குகள் (*Banks*).

சைகோனில் பாங்-டி-லா இந்தோ-சைனா (Banque del Indo-China) என்ற தலைமை பாங்க் ஒன்று உளது. அதன் மூலதனம் 7 கோடியே 20 லட்சம் பிராங்குகள். அதன் ரிசர்வ் நிதி முதலியவைகள் சேர்ந்து 80 கோடி பிராங்குகளாகிறது. (இந் நாட்டின் பியாஸ்டர் 8,00,000 ஆகும்.) இது இத் தேசத்தின் முக்கிய பாங்காகவும், நாணயம் வழங்கும் உரிமையுடையதாகவு மிருக்கின்றது. இந்தோ-சைனா சர்க்காரால் கொடுக்கப்பட்ட இச் சுதந்திரம் 1920-ம் வருடத்தோடு முடிந்துவிட்டதானாலும், பிரான்ஸ் பார்லிமெண்டில் இதைப்பற்றிய ஒரு முடிவு ஏற்படாமல் வருடா வருடம் ஒத்திவைக்கப்பெற்றே வந்து, அப்பால் 1930-ம் வருட முடிவில் பார்லிமெண்டால் மீண்டும் இச் சுதந்திரம் இருபத்தைந்து வருடத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது. சைகோனிலும், அய்போனிலும் சார்டர்டு பாங்கும் (The Chartered Bank of India, Austrelia and China) ஹாங்காங் பாங்கும் (The Hongkong and Shanghai Banking Corp.) இன்னு மநேக சிறிய பாங்குகளு முண்டு.

## விவசாயம் (*Agriculture.*)

இந் நாட்டின் முக்கிய விளைபொருள் நெல். இந் நாட்டைச் சுற்றி எங்கு நோக்கினும் செந்நெற் கதிர் நிலங்களே யாண்டுங் காட்சி யளிப்பதிலிருந்து, இந் நாட்டின் ஜீவாதாரமான விளைபொருள் நெல்தானென்பதைப் பார்ப்போர் வெகு சுலபத்தி லறிந்துகொள்ளலாம். அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் அரிசி மொத்தப் 100-க்கு 65 வீதமாகும். இங்கு 1930-ம் வருடத்தில் ஏற்றுமதியான அரிசியின் மொத்தம் 1,121,597,963 kgs. (கிலோகிராம்).

இதன் பெறுமானம் 1,34,43,04,100 பிராங்க்ஸ் (Francs) ஆகும். (10 பிராங்க்ஸ் கொண்டது ஒரு பியாஸ்டர்.) இது தவிரச் சோளம், மொச்சை, புகையிலை, கரும்பு, ரப்பர், மிளகு, தேயிலை, காப்பி, சர்க்கரை, வள்ளிக்கிழங்கு, நிலக்கடலை, தேங்காய், பாக்கு, ஆரஞ்சு, வாழை, நீலம், பருத்தி முதலியவைகளும், இங்கு விளைகின்றன. மேலும் நிலங்களைப் பண்படுத்துதற்காக அதிகப் பிரயாசை எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆனால் சில இடங்களில் இம் முறை அதிக முற்போக்கு மடைந்திருக்கின்றது. புனப்பெனுக்கும் (Pnom Penh) மணிலாவுக்கும் மத்தியில் ஏராளமான ஆடுகள் வளர்க்கப் படுகின்றன. அன்னாமிலும் சொற்பமாக உண்டு. லாஓசில் காணப் படுங் காட்டு எருமைகளை விவசாயத்துக்குப் பழக்கி வருவதுடன் எருதுகளைப் போக்குவரத்துச் சாதனங்களுக்கும் உபயோகப் படுத்திக்கொள்ளுகிறார்கள். இந் நாட்டிலுள்ள கால்நடைப் பிராணிகளிற் பன்றிதான் எதேஷ்டமாக வுள்ளதென்று சொல்லலாம். அதிகமான ஜனங்கள் தெங்கின் குடாவிலும், அன்னாம் தென் கரையோரத்திலும், கம்போஜியாவிலுள்ள பெரிய ஏரிகளிலும் மீன் பிடித்துப் பிழைக்கிறார்கள். கம்போஜியாவின் மத்தியிலுள்ள பெரிய ஏரிக்கு மெக்காங் (Mekong) என்ற நதியிலிருந்து தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. தண்ணீர் வற்றிய காலத்தில் ஏரியிலுள்ள மீன்களைப் பிடித்துப் பதப்படுத்தி வைத்து, மீன், மீன் எண்ணெய், ஆமை ஓடு இவைகளுடன் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

## காட்டிலாகா (*Forestry*).

இந்தோ-சைனாவிலுள்ள காடுகளின் மொத்தம் 60 கோடி ஏக்கராகும். இதிற் பலவிதமான மிருகங்களு முண்டு. தொங்கினிலும், கொச்சின்-சைனாவிலுங் காடுகளைச் சரியான முறையில் கையாளாததால் அதிக நஷ்ட மேற்பட்டிருக்கிறது. கம்போஜியா, லாஓஸ், தென் அன்னா மிவைகளிலுள்ள காடுகள் சரியான முறையிலிருந்து வருகின்றன. போக்குவரத்துச் சாதனங்கள் ஏற்பட்ட பிறகு இக் காடுகளினாற் பெருத்த லாபமடையலாமென்றுங் கூறப் படுகிறது. தற்போது போக்கு வரத்துச் சாதனங்களுக்கு உதவியாக இருந்துவருகிற மெக்காங் நதி வழியாக மேற்சொன்ன காடுகளிலிருந்து வெட்டப்படுந் தேக்கு மரங்களும், இதர மரங்களுங் கம்போஜியாவுக்கு அனுப்பப்படுகின்றன.

## கனிகள் (*Mining.*)

இந்தோ-சைனாவில் 1928-ம் வருடத்தில், பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட பொருள்களின் மொத்தப் பெறுமானம் 18,46,00.000 பிராங்குகளாகும். கனிகளில் வேலை செய்யுந் தொழிலாளிகள் 38,790.



இங்கு முக்கியமாக வெட்டி யெடுக்கப்படும் பொருள் நிலக்கரியாகும். 1929-ம் வருடத்தில் நிலக்கரி டன் 19,83,000-ம், துத்தநாகம் டன் 18,750-ம் அதிகரித்திருக்கின்றன. இன்னும் பூமியிலிருந்து வெட்டி யெடுக்கப்படும் பொருள்கள் வெள்ளி, ஈயம், டின் (Tin), இரும்பு டங்ஸ்டின் (Tungsten), மலைக் கற்களுமாகும் (Phosphate rock). இதில் துத்தநாகமும், நிலக்கரியும் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

## தொழில்கள் (*Manufacturing*).

இத் தேசத்தில் பெரும்பான்மையோர் பயிர்த் தொழிற் செய்து ஜீவித்துவருகிறபடியால், தங்கள் தேசத்திற்கு வேண்டிய பொருள்களைத் தவிர வேறு அதிகம் உற்பத்தி செய்வதில்லை. நெல், மில்களில் அறைக்கப்படுகிறது. சிறிது காலமாகத் தொழிலை அபிவிருத்தி செய்யும்பொருட்டு, பிரான்ஸ் முதலாளிகள் பஞ்சு இயந்திரமுண்டாக்குவதில் ஓரளவு உற்சாகங் காட்டிவருகின்றனர். ரசம் வடிக்கும் வீடுகளும், (Breweries) மூங்கில்களிலிருந்து காகிதஞ் செய்யும் மில்களும், தாவர வர்க்கங்களிலிருந்து எண்ணெய் எடுக்கும் மில்களும், நெருப்புப்பெட்டி பாக்டரிகளும், தோல் பதனிடுஞ் சாலைகளுஞ் சில இடங்களில் காணப்படுகின்றன. தொங்கினில் விசேஷமாகப் பட்டு நூல் உற்பத்தி செய்யப்பட்டுச் சிறிது ஏற்றுமதி செய்ததுபோக மீதமுள்ளவை உள்ளூர் நெசவுசாலைகளில் நெய்யப்படுகிறது. கம்போஜியாவிற் சுதேசிகளால் பருத்தித் துணிகளும், பட்டுத் துணிகளும், சொற்பமாக மண்பாண்டங்களும், பாய்களுஞ் செய்யப்படுகின்றன.

## அய்போன் (*Haiphong*).

அய்போன் என்னும் பட்டணம், தொங்கினுக்கு முக்கிய வியாபாரத் துறைமுகப் பட்டணமா யிருக்கிறது. இதனருகில் குவாகாம் (Cua Cam) என்கிற நதி ஓடுகிறது. இப் பட்டணம், ஒரு சிறிய குக்கிராமமாக விருந்து 1884-ம் வருடத்திற் பெரிய பட்டணமாகி வியாபார ஸ்தலமாகவும் ஆகிவிட்டது. இவ் வூரின் ஜனத்தொகை 1,00,000. இப் பட்டணத்தின் ஆர்பர் (The Harbour is provided with a wharf 2,000 Feet long.) இரண்டாயிரம் அடி நீளமுள்ள ஒரு துறைமுகத்தைக் கொண்டதாகும். இதில் ஒரே சமயத்தில் ஐந்து பெரிய கப்பல்கள் நிற்கக்கூடிய வசதி உள்ளது. 330 அடி நீளமுள்ளதும் 2,500 டன் பருமன் கொண்டதுமான கப்பல்களை வைத்துப் பழுது பார்ப்பதற்குத் தகுந்த, கப்பல் செப்பனிடுந் துறையும் (A Floding dock) அதைச் சேர்ந்த சாலையுமுண்டு.

## அன்னோய் (*Hanoi Tonkin*).

தொங்கின் மாகாணத்தின் மத்தியில் சாங்குவே (Sangkhoi) என்னும் நதியின் வலது கரையில் அன்னோய் என்னும் பட்டணம் உளது. இது தொங்கின் மாகாணத்துத் தலைநகரமாகும். 16-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் பிரெஞ்சுக்காரர்களும், டச்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் வியாபாரதிற்காக இங்கு வந்ததாகத் தெரிகிறது. ஆனால் 19-ம் நூற்றாண்டின் முடிவில் இந் நாடு பிரெஞ்சுக்காரர்களின் பாதுகாப்பிற்குள் வந்ததும் 1860-ம் வருடத்தில் இம் மாகாணத்திற்கு பால் பேர் (Paul Bert) என்பவர் முதலாவது கவர்னராக நியமிக்கப்பட்டார். அதன் பிறகுதான் இங்கு நல்ல சாலைகளும், மின்சார விளக்குகளும், சுகாதாரக் குறைவின்றிப் புறக்கடை வசதிகளும், குடி நீர் வசதியும் கீழ்நாட்டிலுள்ள மற்ற நகரங்களைக் காட்டிலும் அதி மேன்மையாக அமைக்கப்பட்டன. மேலும் பட்டணத்துக்குள்ளும், பக்கத்திலுமுள்ள சிற்றூர்களுக்குப் போக்குவரத்துச் சாதனங்களுக்காக மின்சார வண்டிகளும் (Electric railways) அமைக்கப்பட்டிருக்கின்றன. இந் நகரின் விஸ்தீரணம் (The City of Hanoi Comprises an area of about 945 hectares or 3·61 Sq. miles.) 945 ஏக்தார் அல்லது 3·61 சதுர மைல்களாகும். ஏற்கனவே இது 106 கிராமங்களைக் கொண்டதாக விருந்து இப்பொழுது அக் கிராமங்களெல்லாம் சேர்ந்து ஒரு பெரிய பட்டணமாகிவிட்டது. இந் நகரின் ஜனத்தொகை 1,30,000 இதில் 5,000 ஐரோப்பியர்கள் (ராணுவ மில்லாமல்); பாக்கியுள்ளவர்கள் அன்னங்காரர்களும், சீனர்களும், இந்தியர்களுமாவார்கள்.

## சைகோன் (*Saigon-Cochin-China*).

கொச்சின்-சைனாவின் தலைநகரமாகிய சைகோன் நகர், செயிண்ட் சாக்கிஸ் (Cape St. Jacques) முனையிலிருந்து 48 மைல் தூரத்தில் சைகோன் நதியின் வலது கரையிலிருக்கிறது. ஒவ்வொரு ஆறு மணி நேரமும் மாறுகிற நீரோட்டத்தில் இந்த ஆற்றில் பெரிய பெரிய கப்பல்களும் வரக்கூடும்.

## ஜனத்தொகை.

இந் நகரின் ஜனத்தொகை 1,45,000. பக்கத்திலுள்ள வியாபார ஸ்தலமும், கைத்தொழில் பட்டணமுமாகிய சோலன் (Cholon) என்னும் நகரையும் சேர்த்தால் இதன் ஜனத்தொகை 3,00,000 மாகும். இந் நாடு பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சிக்குள் வருமுன் காடாகவும், வனங்களாகவு மிருந்ததோடு, இந் நாட்டு மக்கள் காட்டுச் சாதியினராகவும், நாகரீக மற்றவர்களாகவும், தங்களுக்கென எழு



தப் படிக்க ஒரு சுயபாஷையில்லாதவர்களாகவும் இருந்ததாகக் காணப்படுகிறது. பிறகு பிரான்சுக்காரர்களின் ஆட்சிக் குட்பட்டதும, அவர்களின் தீவிர முயற்சியாற் சதுப்பு நிலமாகவும், காடாகவுமிருந்த இடம், இப்பொழுது ஒரு உன்னதமான பெரிய பட்டணமாகக் காணப்படுகிறது. மேலும் காட்டுச் சாதியினராக இருந்தவர்கள் நாகரீக மடைந்தவர்களாகவும், அவர்களுக்கென்ற ஒரு பாஷையைப் பேச்சின் சப்தத்திற்குகந்தவாறு, லத்தின் (Latin) எழுத்தால் பிரெஞ்சு பாதிரியாரான அதரான் (M. Adran) என்பவரால் உண்டாக்கப்பட்டு, அப் பாஷையே வழக்கத்தில் கொண்டுவரப் பெற்றிருக்கின்றது.

இந் நகரானது, அனேக அழகிய மாடி வீடுகளைக் கொண்டதாகவும், காண்போர் மனதைக் கவரும் வண்ணம் நிழல் தரக்கூடிய மரங்கள் உண்டாக்கப்பட்ட அகன்ற பெரிய வீதிகளைக் கொண்டதாகவும், உல்லாசமான திடல்களையும், அழகிய பூந் தோட்டங்களையும், மனதிற்கினிய மனோகரமான பங்களாக்களையுங் கொண்டு கீழ்த்திசையில் இது ஒரு அழகிய பட்டணமாக விளங்குகின்றதைக் கண்டு அடிக்கடி இப் பட்டணத்தைச் சிறிய பாரிசென்றும் ("Le Petite Paris") கீழ் நாட்டின் முத்து என்றும் ("Pearl of the East") சிறப்புப் பெயரைக் கொண்டு அழைக்கின்றார்கள். சுருங்கக் கூறுமிடத்து இதன் பொதுத் தோற்றம், முற்காலத்தில் நமது நிடத நாட்டின் வளங் கூற வந்த புகழேந்தியவர்கள், இவ்வூரின் வாசியாக இருந்திருப்பரோ வென்று சந்தேகிக்கும்வண்ணம் அவர் கூறிய நகர்ச் சிறப்புகளனைத்தும், இந் நகரை அரண்செய்து கொண்டிருக்கின்றன. அக்கால நிடத நாட்டின் தோற்றங்களை ஈண்டு யாண்டுங் காட்சி செய்கின்றன.

இந்நகரி னமைப்பு, சைனிஸ் அராயோ (Chinese Arrayo) ஆற்றின் அப்புறம் கன்னோய் (Khanh hoi) என்னுமிடத்தில், கப்பல் துறைமுகங்களும், கப்பல் தொழிலாளிகளும் வசிக்கின்றனர். மற்றொருபுறம் பாங்குகளும், ஏற்றுமதி இறக்குமதி ஆபீஸ்களும், பண்டகசாலைகளும், ஐரோப்பிய, ஆசிய வாணிப ஸ்தலங்களும், அரசாங்கக் காரியாலயங்களுமிருக்கின்றன. ஆற்றுக்கு எதிரே வியாபார சங்கமும், புல்வார் தெலசோம், புல்வார் சரனேர் என்ற இரு பெரிய வீதிகளும், அவ் வீதியின் முனையில் பெரிய நகர ஸ்தலமும், அதனிடது பக்கத்தில் கம்பெட்டா (Cambetta) வென்ற இடமுமிருக்கிறது. ரூய்கத்தினா (Rue Catinat) என்ற முக்கிய வீதி, மேல்நாட்டு முறையி லமைக்கப்பட்டிருக்கிறது. அவ் வீதிகளி னிரு பக்கங்களிலும் மேல்நாட்டுச் சாமான்கள் விற்குங் கடைகளும், சுதேசிகளான தொங்கின்காரர்களாற் செய்யப்பட்ட சுத்தச் சாமான்களும், தென்னிந்திய முகம்மதியர்களின் நாணய மாற்றுக் கடை

களும், பாம்பே இந்தியர்களின் பட்டுப் புடவை வியாபார ஸ்தலங்களும் இருந்துவருகின்றன.

இந்தோ-சைனா முழுமையும் மொத்தம் இந்தியர்கள் 3.500-க்கு மேல் அதிகமானவர்களிருக்கின்றனர். விசேடமாகக் கொச்சின்-சைனா மாகாணத்தில்தான் அதிகமாக வசித்து வருகின்றனர். பிரெஞ்சு இந்தியாவிலிருந்து இங்கு வந்து அரசாங்க உத்தியோகத்திலிருந்து வருகிறவர்களைத் தவிர மீதமுள்ளவர்கள் அநேகமாக நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் அவர்களைச் சார்ந்த உத்தியோகஸ்தர்களுமாக இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்களா ரர்கள். இவர்களுக்கு இக் கொச்சின்-சைனா மாகாணத்திலுள்ள வரதான நகரங்களில் லேவாதேவிக் கடைகள் நூற்றுப்பத்துபி வரையிருக்கின்றன. இவர்கள் தொழில் முறையில் கொடுக்கப்பட்டிருக்கும் மொத்தத் தொகை 8 கோடி பியாஸ்டர்களென மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந் நாட்டிற் கிவர்கள் புதியவர்களல்ல. அறுபது வருடத்திற்கு முன்பே இந்தியாவிலிருந்து இந்நாடுபோந்து தொழில் நடத்திவந்தவர்களாகவுந் தெரிவதோடு, இந் நாடு இவ்வித செழிமையடைந்ததற்கு முக்கிய காரணமாக வுள்ளவர்களுமாவார்கள். மேலுஞ் சமீபத்தில் தோன்றிய பாங்குகளும், சொசைட்டிகளும் சொற்ப காலத்திற்கு முன் ஸ்தாபகமான தொருபுறமிருக்க அவைகளெல்லாஞ் சேர்ந்து கடன் கொடுத்திருக்கும் தொகைகளைக் கணக்கிட்டுப் பார்ப்பின், செட்டியார்கள் கொடுத்திருக்கும் தொகை அளவிராதென்றே சொல்லலாம். பாங்குகளும், சொசைட்டிகளுந் தக்க அடமானத்தின் பேரில்தான் கடன் கொடுத்துவருகிறது. செட்டியார்களோ சொத்துப் பெறுமதிவரையிலுங் கடன் கொடுத்து வாங்குவதோடு, ஆசாமிகளின் நம்பிக்கையைப் பொறுத்தும், வெண்ணிலையிலும் (Pronotes), வியாபாரத்தைப் பொறுத்தும், கையெழுத்தை நம்பியும் ஏழை முதல் தனவந்தர்கள்வரை கடன் கொடுத்து வாங்கி வந்திருக்கின்றார்கள். இவர்களின் நம்பிக்கையான தொழில்முறையில் எவ்வளவு லாப நஷ்ட மேற்படுமென்பதை விவரிக்கத் தேவையில்லை.

இந் நாட்டில் எவ்வித வியாபாரஞ் செய்வதற்கும் பத்தாந் (Patente) என்ற அரசாங்க லைசென்ஸ் எடுத்து அதன் பேரில்தான் வியாபாரஞ் செய்யவேண்டும். மேலும் அந் நாட்டுச் சுதேசிகளுக்கு (பெண்கள் நீங்கலாக) தலைவரி வருடா வருடம் பியாஸ்டர் 6 செலுத்திப் பாஸ் பெற்றுக்கொள்ளவேண்டும். சுதேசிகளில்லாத பிற நாட்டினர்களுக்கு இம்மிகிரேஷன் (Immegration) இலாகா ஏற்படுத்தி ஒவ்வொரு வகுப்பினருக்கும் சேப் கோங்ரேஷன் (Chef de la Congration) என்ற தலைவரொருவரை நியமித்து, அவர்களின் மூலம் வருடா வருடம் நபர் ஒன்றுக்கு பியாஸ்டர் $35\frac{3}{4}$ விகிதம்



வசூல்செய்து பாஸ் கொடுக்கப்படுகிறது. அவ்வாறு பணஞ் செலுத்திப் பாஸ் பெற்றுக்கொள்ளாத நபர்களைப் போலீஸ் சோதனையின் பேரில் சேப் கோங்கரேஷன் என்ற தலைவரின் பொருட்செலவின்பேரில் அவரவர்களின் சுய தேசத்திற்கு அனுப்பப்படுகிறது. இத் தொல்லை ஜப்பானியர் நீங்கலாக பிற ஆசியாக் கண்டத்தவர்களுக்குத்தான். மேலும் இந் நாட்டினின்றுந் தாய் நாட்டிற்குப் பிரயாணமாக வேண்டுமாயின், 15 தினத்திற்கு முன் பாஸ் மாற்றிக்கொண்டு போய்க் கப்பல் ஆபீசில் காண்பித்ததின்பேரில்தான் கப்பல் ஆர்டர் கொடுக்கப்படும். பிரிட்டிஷ் குடிகளான இந்தியர்களுக்கு எவ்வித உதவி வேண்டி நேரிடினும், பிரிட்டிஷ் கான்சல் ஜெனரலிடம் முறையிடுவதைத் தவிர வேறு வழியில்லை.

## தெய்வாலயங்கள்.

ஆதிகாலத்தில், இவ் வூரில் அன்னங்காரர்கட்குப் புராதன கோவில்கள் அநேகமில்லாதிருந்தாலும் இடைக் காலத்திற் சீனர்களின் கூட்டுறவாற் கண்ட ஒரு சில புத்தக் கோவில்களும், பிரான்சுக்காரர்களின் ஆளுகைக்கு வந்த பிறகு அநேகக் கிறிஸ்தவச் சர்ச்சுகளும், நம்மவர்களால் இரு சுப்பிரமணியர் கோவில்களும், ஒரு மாரியம்மன் கோவிலும் இருக்கின்றன. இவ்வாறு நம்மவர்கள் கண்ட கோவில்களில் பிரதானமாக சுப்பிரமணியர் ஆலயம் ஒன்று, நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் ஆதிக்கத்துக் குட்பட்டது. இவ் வாலயத்தில் நமது இந்துக் கொள்கைப்படி கொஞ்சமுந் தவறாது சகல உத்சவாதிகளும் நடத்தப்பட்டுத் தை மாதத்துப் பூச விழா வருடா வருடம் வெகு விமரிசையாக நடத்தப்படுகின்றன. இத் திருவிழாக் காலத்திலேதான் சுவாமி வெள்ளி ரதத்தில் ஆரோகணித்து வீதி சுற்றிப் பவனி வருகின்றது. மற்ற இரு கோவில்களும், ஏனைய இந்தியர்களின் ஆதிக்கத்திலிருந்து வருகின்றன. அதில் ஒன்று மாரியம்மன் கோவில். இக் கோவில் பொதுவாக இந்தியர்களுக்குச் சொந்தமானதாலும் சிறப்பாக இவ்வூர் அன்னங்காரர், சீனர்களால்தான் கொண்டாடப்படுகின்றது. தெய்வ பக்தியில் நாம்தான் சிறந்தவர்கள் என்று இறுமாப்புக் கொண்டிருக்கும் நம்மவர்களிடத்தில் பந்தயம் போட்டுப் பரிசு பெறுவதில் அன்னங்காரர், சீனர்கள் ஒருவிதத்திலும் பின்னடைய மாட்டாதவர்களா யிருக்கிறார்கள்.

## புதிய மதம்.

இவ் வூர் அன்னங்காரர்கள் ஆதிகாலத்தில் புத்த மதக் கொள்கையில் ஈடுபட்டு இடைக் காலத்தில் பிரெஞ்சுப் பாதிரிகளின் போதனையினால் அனேகர் கிறிஸ்தவ மார்க்கத்தில் சேர்ந்து தற்காலம் காவ் டாய் (Cao Dai) என்ற ஒரு புதிய மதத்தை ஏற்படுத்திக்கொண்டு வெகு தீவிரமாக அம் மதத்தைத் தங்களுக்குள் பரப்பி வருகிறார்கள். அதா

வது உலக மத கர்த்தாவின் தாயகராகிய கடவுளுக்கு இரண்டு கண் தேவை யில்லை யென்றும், சர்வ தயாபரனாகிய கடவுளுக்கு ஒரு கண் தான் உண்டு என்றும், அவ்வாறு ஒரு கண் இருந்தால்தான் அனைவரையும் ஒரே பார்வையில் கண்காணிக்கலா மென்றும், ஒரு கண் உள்ள தெய்வத்தைக் கற்பித்துக்கொண்டு அதற்கு அறிகுறியாகச் சூரியனைக் குறித்து அதனையே வணங்கி வருகிறார்கள். இம் மதம் சமீப காலத்தில் உண்டாயினவாயினும் அதி தீவிரமாக ஜனங்களிடையே பரவிவருகின்றது.

## காக்ஷிகள்-

இந் நகரில் முக்கியமாகப் பார்க்கத் தகுந்தது, பிரபல்யம் வாய்ந்த தலைவர்களின் சிலைகளும், அழகிய பூந் தோட்டங்களும், கவர்னர் ஜெனரல் மாளிகையும், தற்பொழுது ஏராளமான பொருட் செலவிட்டுக் கட்டி முடிக்கப்பட்ட குதிரை ரேஸ் திடலும், பப்ளிக் லைப்ரரியும், கண்காக்ஷிசாலையும், விஞ்ஞானக் கண்காக்ஷிசாலையும், முனிசிபல் தியேட்டரும் (இது கீழ் நாட்டிலுள்ள நடனசாலைகளில் முதன்மை பெற்றதாகச் சொல்லப்படுகிறது), மேல்நாட்டின் முறையி லமைக்கப்பட்ட அநேகம் அழகிய ஹோட்டல்களும், 12 லட்சம் பியாஸ்டர் செலவிட்டுக் கட்டப்பட்ட பாங்-தே-லா இந்தோ-சைனாக் கட்டிடமும், ஒவ்வொருவனுடைய வாழ்க்கைக்கு என்னென்ன பொருள் தேவையோ அத்தனையும், அரசன் முதல் ஆண்டிவரையில், பாலியர், வயோதிகர், ஆண், பெண் அடங்கலாக வாங்குவதற்குத் தக்க சாதனமமைந்த சகல விதப் பொருள்களையும் ஒருங்கே வியாபாரம் செய்யும் கிராண்டு மகாசேன் (Grand Magasin Charner) என்ற ஒரு பெரிய வியாபார ஸ்தலமுமாகும்.

வெகு சொற்ப காலத்திற்கு முன் அதிகப்படியான சரக்குகளை ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்காக நவீன முறைப்படி இவ் வூர்த் துறைமுகம் அமைக்கப்பட் டிருக்கிறது. இவ் வூரின் நதி, அதிக ஆழமுடையதாகையினால் பெரிய பெரிய கப்பல்களும் வந்து போக மிக்க சௌகர்யமா யிருக்கின்றது.

சொலன் என்ற நகர், சைகோனிலிருந்து 6 Km. கிலோமீட்டருக்குச் சமீபத்திலுள்ள ஒரு பெரிய வியாபார ஸ்தலமாக விருக்கின்றன. இந்தோ-சைனாவின் தென் பாகத்தில் விளையும் நெல் இங்கு விலையாகின்றன. சைகோனிலிருந்து டிராம்வே போக்கு வரத்துச் சாதனங்களு முண்டு. புதிதாக வந்தவர்களுக்குச் சைகோனும், சோலனும் தனித்தனி ஊர் என்று விளங்காவண்ணம் இரண்டு ஊர்களையும் அழகிய மாடமாளிகைகளும், செல்வர்களின் உல்லாச பங்களாக்களும், இணைத்துக்கொண் டிருக்கின்றன. இந் நகரில் நெல் மில்களும், நெல்லிலிருந்து ஒருவகைச் சாராயம் செய்யும் (சமுசு என்று வழங்கும்) மில்களும், சீனர்களின் ஸ்டோர்களும், சிற்றுண்டிச்சாலைகளுங் காணப்படுகின்றன.



## கம்போஜியா (**Combodge**).

கம்போஜியாவின் தலைநகரமாகிய புனம்பென், (Pnompenh) சைகோனிலிருந்து 160 மைல் தூரத்தில் மெக்காங் நதியின் வலது கரையில் உளது. இதன் ஜனத்தொகை 80,000. இப் பட்டணம் மூன்று பாகமாகப் பிரிக்கப்பட் டிருக்கின்றது. (1) ஐரோப்பியர்கள் வசிக்குமிடம், (2) சுதேசிகள் வசிக்குமிடம், (3) சுதேச அரசரின் உட்கோட்டை. இக் கோட்டையின் மத்தியில் கம்போஜியா அரசரின் அரண்மனை காணப்படுகிறது. இவ் வரண்மனை ஏராளமான பொருட் செலவில் கட்டப்பட்டதாகவும் தெரிவதோடு அவ் வரண்மனைக்குள் காணப்படுவதாவது: தரை பூராவும் வெள்ளியால் வார்க்கப்பட்ட வெள்ளிப் பகோடாவும், (Silver Pagoda) மரகதத்தாலாகிய புத்த சிலைகளும், வயிரத்தா லிழைக்கப்பட்ட பொற் சிலைகளும், ஜகஜோதியாய்ப் பார்ப்போர் மனதைக் கவரும் தன்மையி லமைக்கப்பட்டிருக்கின்றன. உலகத்திலேயே உயரிய பெரிய வைரம், கெம்பு, மரகதம், மாணிக்கம் இத்தகைய நவரத்தினங்களைப் பார்க்க வேண்டுமேல், ஒருமுறை இவ் வரண்மனைக்கு வந்தால் அனைத்தையும் காணலாம். இவைக ளெல்லாம் பண்டைய அரசர்களால் சேமித்து வைக்கப்பெற்றவைகள். தற்காலம் பிரெஞ்சு கவர்ன்மெண்டாரால் இவைகள் கண்காக்ஷியாக வைக்கப்பெற் றிருக்கின்றன. புனப்பனிலுள்ள லே புனோம் (Le Phnom) என்ற மலையின்மீ தேறினால் அப் பட்டணம் முழுதையும் மிகத் தெளிவாகப் பார்க்கக் கூடும். அம் மலைச் சாரலில் நேர்த்தியான தோட்டங்களுங் காணப்படுவதோடு புலி, சிறுத்தை. காடி, மான் இன்னும் பலவகை மிருகங்களும் சில நூதனப் பறவைகளும் வசிக்கின்றன.

## அங்கோர் (**Ankor**).

சைகோனிலிருந்து இருநூறுக்கு மேற்பட்ட மைல் தூரத்திலிருக்கும் அங்கோரின், உன்னதமான புராதனக் கட்டிடங்கள் உலகிலேயே மிகவும் கீர்த்தி வாய்ந்தவை. அது ஒரு புராதனமான நகரமிருந்து அழிந்துபோன இடமென்றும், அந் நகரம் இப்பொழுது காட்டில் மறைந்துகொண் டிருப்பதாகவும் அவ் வூர் வாசிகளிடம் ஒரு புராணக் கதையுமுண்டு. கிறிஸ்து பிறந்த முதல் நூற்றாண்டில், இந் நகரம் பார்மியர்களால் கட்டப்பட்டதாகவும், கி. பி. 14-ம் நூற்றாண்டு வரை அதிக செழிப்புட னிருந்ததாகவும் தெரிகிறது. பின்பு அதன்

அரசியல் பலம் குன்றக் குன்றப் புராதனமான கட்டிடங்களைக் காட்டு மிருகங்கள் கைக்கொள்ளலாயின. இதில் முக்கியமான இடம் தற்பொழுது காணப்படும் அங்கோர் வாட் (Ankor Vat) என்னும் கோவிலாகும். அக் கோவில் கட்டி 800 ஆண்டுகளாகியும், 4 நூற்றாண்டுகளாகக் கவனிப்பாரில்லாது விடப்பட்டிருந்தும் இன்னும் வெகு கம்பீரமாகவே அதன் தோற்றங் காணப்படுகின்றது. இவ்விடத்தைச் சுற்றி 200 கஜ மீட்டருக்கு (Meters) மேல் அகலமும் 5 Km. கிலோ மீட்டர் நீளமுமான ஒரு அகழியும் காணப்படுகிறது. இப் புராதனக் கட்டிடத்தினுள்ளே இரு பாரிசமும், வெகு விசித்திரமான வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. இக் கோவிலினுள்ள சிலைகளும், கல்லில் செதுக்கப்பட்ட சிற்ப வேலைகளும் இராமாயணத்தை முற்றிலும் அடிப்படையாகக் கொண்டே செதுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை யுற்று நோக்குபவர்கள், புராதன இந்தியர்களுக்கும், இந் நாட்டுக்குமுள்ள தொடர்பை வெகு சுலபத்தி லறிந்துகொள்ளலாம். இந்தியர்களாகப் பிறந்த ஒவ்வொரு பாரத மகனும் இக் கோவிலைக் கண்டு நம் பண்டைய முன்னோர்களின் சிற்ப வன்மையையும், இயற்கை வளப்பத்தையுங் கண்டிப்பாக அறிய வேண்டுவது முக்கிய கடமை என்று துணிந்து கூறலாம். 1929-ம் வருடத்திலே ஜுன் மாதத்திலே ஜப்பானிலிருந்து திரும்பி வரும் பொழுது, இந் நாட்டு இந்தியர்களாலும், சுதேசிகளாலும், அரசாங்கத்தாராலும் மிக்க கௌரவத்துடன் வரவேற்கப்பட்ட இந்திய நாட்டின் கலாபீடம்-கவிச் சக்கரவர்த்தி ரவீந்திரநாத தாகூரவர்கள் இவ்வின்பத் தோற்றத்தைக் கண்டு ஆற்றிய சொற்பொழிவின் சாரம் வருமாறு:—

“பல நூற்றாண்டுகளுக்கு முந்திய காட்சியை நான் காண்கின்றேன். இன்னுமென ரத்தத்தி லோடிக்கொண்டிருப்பதும், இத் தேசத்தில் தனது அடையாளங்களை விட்டுப் போனதுமான ஒரு ஜீவியம் எனது சிந்தனையில் தோன்றுகிறது. பழைமையான சந்திப்பின் ஞாபகத்தை யான் உங்களுக்குக் கொண்டு வருகின்றேன். அது எப்படிப்பட்டதென்றால், இந் நாட்டினரின் உற்சாகத்தைக் கிளப்பிவிட்டு அவர்களுடைய பொக்கிஷமாகிய எண்ணங்களும், கலைகளும், சித்திபெறச் செய்த ஒரு சந்திப்பாகும். அந்த யுகம் இப்பொழுது கிழிந்துபோன ஏடுகளில் மௌனமாகவிருக்கின்றது. “கால” மென்னுங் கள்வனால் கொண்டுபோகப்பட்ட ஒரு மாணிக்கத்துக்கு அது ஒப்பாயிருக்கின்றது. ஆனால் அம் மாணிக்கம் வைக்கப்பெற்றிருந்த பெட்டிமட்டும், இற்றுப் பாழடைந்த பழைய கட்டிடங்களின் ரூபமாகக் காக்ஷியளிக்கின்றன.”

---

# நமது அரசியல் தஸ்தவேஜு.

## அலகாபாத்து சமரஸத் தீர்மானங்கள்.

[தினப் பத்திரிகைகளும், வார வெளியீடுகளும் அன்றுடமோ அல்லது வார அப்தத்திலோ வாசித்து முடிந்ததும் அப்புறம் கையினாலுந் தீண்டப்படுகிறதில்லை. மாஸிகைகளின் கெதியோ வேறு விதம். இம்மாத வெளியீடு இம்மாதத்தோடு பழமை யெய்திவிடுவதன்று. என்றும் புதிதாய், என்றுஞ் சிரஞ்சீவியாய் இருப்பன மாத மலர்கள். அவைகளிற் பதிவுறுஞ் செய்திகள் பத்திரமாய்ச் சேமிதஞ் செய்து வைக்கப்படுகின்றன. அன்று பூத்து அன்றுதானே வாடிப்போகும் நாள் மலர்களிற் பதிவு செய்யப்படுவதைவிட மதிதொறும் பூத்து, மரணத்தையும் மூப்பையுங் கடந்த மாதப் பத்திரிகைகளில் அரசியல் தஸ்தவேஜுகள் வரையப்பட்டிருப்பின் வாசகர்களும், ஆசிரியர்களுங்கூடச் சடுதியில், வேண்டியபோது, புரட்டிப் பார்த்துக்கொள்ளச் சாத்தியமாகிறது என்கிற நோக்கத்தோடு **நமது அரசியல் தஸ்தவேஜு** என்ற பேரேட்டின் கீழ் அரசியல் சம்மந்தமான தீர்மானங்கள், நடவடிக்கைகள், முடிவுகள் வரையப்பெறும். இம் மணியின் தலைப்பில் வரைந்துள்ள ஐக்கிய பாரதத்தைப் பீடிகையாகவும், இறுதியிற் கொடுத்துள்ள ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரின் அறிக்கையை முடிவுரையாகவும் சேர்த்துப் படித்தால் விசால பாரதம் முடிவுற்றதாக முடியும்.] —ப-ர்.

ஒற்றுமைக் கமிட்டியி லேற்பட்ட முடிவுகளைப்பற்றி உத்யோக தோரணையில் பொதுக் காரியதரிசி கொடுத்துள்ள விவரம் வருமாறு:—

(அ) அரசியல் அமைப்பில் அடிப்படையான உரிமைகளைப்பற்றிக் கூறும் விதிகளில் சமூகங்களுக்குத் தங்கள் தங்கள் கலை, பாஷை, லிபி, கல்வி, மத விதிப்படி நடத்தல், தர்ம சொத்துக்கள் ஆகியவைகளுக்குப் பாதுகாப்பளிக்கப்படுமெனச் சேர்க்கப்பெறும்.

(ஆ) ஒவ்வொரு சமூகத்திற்குரிய தனிவிதிகள், அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ள குறிப்பிட்ட விதிகளின் மூலம் பாதுகாக்கப்படும்.

(இ) அநேக மாகாணங்களிலுள்ள சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் முதலிய உரிமைகளைப் பாதுகாப்பதும், அது சம்பந்தப்பட்ட இதர விஷயங்களும் மத்திய சர்க்காரின் பொறுப்பிலிருக்கும்.

## பலுச்சுஸ்தானம்.

பலுச்சிஸ்தானத்திற்கும் ஒழுங்கான அரசியல் முறை நிர்வாகத்தின் நன்மைகளை அளிக்க வேண்டுமென இம் மகாநாடு அபிப்பிராயப்படுகிறது. அதை எவ்விதம் நிறைவேற்றுவதென்பது பின்னர் யோசிக்கப்படும்.

## எல்லைப்புறம்.

வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் இதர மாகாணங்களிலுள்ளதேபோன்ற நிர்வாக முறை யிருக்கவேண்டும்.

## சர்க்கார் உத்தியோகம்.

(1) ஒரு கட்சியிலும் சேராத பொது உத்தியோகக் கமிஷனால் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுவார்கள். அக் கமிஷனே உத்தியோகங்களுக்குரிய யோக்கியதாம்சத்தை வெளியிடும். சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் திறமைபற்றியும், நாட்டின் உத்தியோகத்தில் எல்லா சமூகத்தினருக்கும் நியாயமான பாகமிருக்க வேண்டுமென்ற கொள்கையைப்பற்றியும் அக் கமிஷனே போதிய கவனஞ் செலுத்தவேண்டும்.

(2) பாஞ்சாலப் பொது உத்யோகக் கமிஷனில் முஸ்லீம்கள், ஹிந்துக்கள், சீக்கியர் ஆகியோரின் பிரதிநிதிகளிருப்பார்கள். அதே போல இதர மாகாணங்களிலும் அந்தந்த மாகாணத்து முக்கிய வகுப்புகளுக்கு அக் கமிஷன்களில் பிரதிநிதித்துவமளிக்கப்படும்.

(3) இத் தீர்மானத்தில் கண்ட கொள்கைகளை அமுலுக்குக் கொண்டுவருவதுபற்றி யோசனைசெய்து ஒரு திட்டம் வகுக்க, இன்னும் வேண்டியவர்களைச் சேர்த்துக்கொள்ளும் அதிகாரத்துடன் எழு பேரடங்கிய கமிட்டியொன்று நியமிப்பதென ஒப்புக்கொள்ளப்பட்டது.

குறிப்பு:—இக் கமிட்டியில் மூன்று இந்துக்கள், இரண்டு முஸ்லீம்கள், ஒரு சீக்கியர், ஒரு கிறிஸ்தவர் இருப்பார்கள்.

## மதங்களைப் பாதிக்கும் சட்டங்கள்.

ஒரு சமூகத்தினரின் மதத்தையோ அல்லது மத விதிப்படியுள்ள சமூக வழக்கத்தையோ, அல்லது அச் சமூகத்தினரின் அடிப்படையான உரிமைகளையோ பாதிப்பதாகச் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டுள்ள ஒரு மசோதாவை, அச் சமூகத்தின் சார்பில் சட்டசபையிலுள்ள அங்கத்தினர்களில் மூன்றிலிரு பகுதியினர்



கருதினாலும், அச் சபையின் மூன்றிலொரு பகுதியினர் அம் மசோதாவை எதிர்த்தாலும், அவ்வங்கத்தினர்கள், மசோதா நிறைவேற்றப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் தலைவரிடம் தங்கள் ஆக்ஷேபணையைப் பதிவு செய்யலாம். அவர் அதை கவர்னர் ஜெனரலுக்கோ கவர்னருக்கோ அன்றி அனுப்பவேண்டிய உரிய இடத்திற்கோ அனுப்பிவிடுவர். அதன் பின்னர் அவர் அச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதை ஒரு வருட காலத்திற்கு நிறுத்திவைக்கலாம். அக் காலம் முடிவான பின்பு, அவர் அந்த மசோதாவை மீண்டும் சட்டசபையில் புனராலோசனை செய்வதற்கு அனுப்பிவிடலாம்.

இதுபோன்ற மசோதாபற்றி மேலும் சட்டசபையில் யோசனை செய்யப்படும்போது, அச் சட்டசபை அம் மசோதாவைத் திருத்தியமைக்க மறுத்துவிட்டால், ஆட்சேபணைக்கு இடங்கொடுப்பதற்காக கவர்னர் ஜெனரலோ, கவர்னரோ சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி, தமது யோசனைப் பிரகாரம் அம் மசோதாவிற்கு அனுமதியளிக்கவோ மறுக்கவோ கூடும்.

மேலும் இம் மசோதா சட்டபூர்வமானதா என்பதைப்பற்றி, இம் மசோதா தங்கள் அடிப்படையான உரிமைகளைப் பாதிப்பதாக அவ் வகுப்பைச் சார்ந்த எந்த இரு அங்கத்தினராவது சுப்ரீம் கோர்ட்டார் அபிப்பிராயத்திற்கு அதைக் கொண்டுவர இடங்கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவ் விதி, பாஞ்சாலம், பம்பாய், பீஹார், ஒரிஸ்ஸா, ஐக்கிய மாகாணம் ஆகிய மாகாணங்களுக்கு ஒப்புக்கொண்டு அளிக்கப்பட்டுள்ள விசேஷ பாதுகாப்பைப் பாதிக்காது.

## முஸ்லீம்களுக்கு அதிக ஸ்தானம்.

பிரிட்டிஷ் மந்திரி சபை முடிவுக்கு முன்பு, முஸ்லீம் சிறுபான்மையார் அனுபவித்துவந்த அதிகப்படியான ஸ்தானத்தை அடுத்த பத்து வருடங்களுக்கு அவர்கள் அனுபவிப்பதை ஒப்புக்கொள்ளப்பட்டது.

## ராணுவம், நீதி இலாகா.

இந்தியா முழுவதுமுள்ள ராணுவத்திலும், நீதி இலாகாவிலும் இந்திய மக்களின் எல்லாப் பிரிவினரும் அனுமதிக்கப்பட வேண்டுமென ஒப்புக்கொள்ளப்பட்டது. இவ்விரு இலாக்காக்களுக்கும் உத்தியோகஸ்தர்கள் நியமனஞ் செய்வதற்கு, அவரவர்களின் யோக்கியதாம்சமே முக்கியமானதாகக் கருதப்படும். அவர்கள் வகுப்பு, மாகாணம், அரசியற் கட்சிகள் முதலியனவற்றிற் சம்பந்தப்படாதவர்களாயிருப்பார்கள்.

## மத்திய சட்டசபை.

அகில இந்திய ஐக்கிய அரசியல் சட்டசபைக்கு இந்திய சமஸ்தானங்கள் எத்தனை விகிதத்தில் அங்கத்தினர்களை அனுப்புவரென்பதும், அவர்கள் அதிகாரமும் வேலையும் இன்னதெனவும் சரியான விவரம் கிடைக்கா திருக்கையில், பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதித்துவம் சம்பந்தப்பட்டமட்டில் மத்திய சட்டசபையில் ஸ்தானங்கள் ஒதுக்கி வைப்பதுபற்றி அடியிற்கண்ட முடிவு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மத்திய சட்டசபையில் பிரிட்டிஷ் இந்தியாவிற்குக் கொடுக்கப்பட்ட ஸ்தானத்தில், முஸ்லீம்களுக்கு நூற்றுக்கு முப்பத்திரண்டு விகிதமும், சீக்கியருக்கு 4.2/3 விகிதமும் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது.

## அரசியல் முறை.

தேசீய சர்க்காரின் பூரண உரிமைகளுடன் ஜனங்களுக்கே மத்திய சர்க்காரில் முழுதும் பொறுப்பாகவுள்ள அரசியல் முறையே இந்தியாவின் கோரிக்கைக்குத் திருப்தியளிக்குமெனவும், இந்திய ஜனங்களின் க்ஷேமத்திற்கு உறுதியளிக்குமெனவும் இம் மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

ஆகவே, இந்தியாவின் நன்மைக்காகிய, குறுகிய காலத்திற்குச் சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகளுடன் இந்திய மக்கள் வசம் இந்திய சர்க்காரை ஒப்புவித்துவிட வேண்டுமென இம் மகாநாடு கூறுகிறது.

இவ் வொப்பந்தத்தின் எல்லாப் பாகங்களும் ஒன்றுக்கொன்று சம்பந்த முடையனவென்றும், அவைகள் பிரிக்கப்படக்கூடாத ஒரே மொத்தமான விஷயமெனக் கருதப்படுமென்றும் இவ் வொப்பந்த முழுதுமே அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

## விசேஷ அதிகாரங்கள்.

விசேஷ அதிகாரங்களையொட்டி, மாகாண சர்க்கார்களின் அதிகாரங்கள் பூரணமாகக் குறிப்பிடப்பட்டு இவ்விதம் பிரிக்கப்பட்ட அதிகாரங்கள் மத்திய சர்க்காரால் ரத்து செய்யப்படக் கூடாதெனவும் அங்கீகரிக்கப்பட்டது. மேலும் அட்டவணையில் தெளிவாகக் குறிப்பிடப்படாத எந்த விஷயமும், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களுடன் அதற்குள்ள பொருத்தத்தின் மூலம் இந்திய சர்க்காரையோ அல்லது மாகாண சர்க்காரையோ சார்ந்ததாகும்.



அட்டவணையில் குறிப்பிடாத சந்தேகமான விஷயங்களைப்பற்றி இறுதியான முடிவு செய்ய சுப்ரீம் கோர்ட்டுக்கே அதிகாரமுண்டு. தற்காலிகமான உத்திரவோ அல்லது இறுதியான முடிவோ பெறும் வரை அவசர சமயங்களில் மத்திய சர்க்காரின் அபிப்பிராயமே அமுலிலிருக்கும்.

## சமூக விதிகள்.

ஒரு சமூகத்திற்குரிய தனிவிதிகளை சட்டசபையிலுள்ள அதன் பிரதிநிதிகளின் விருப்பத்திற் கிணங்கியோ, அல்லது இதர பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கு ஒப்பியோ அச் சமூக மக்களின் பொதுவான ஆதரவுடனல்லாது திருத்தியமைக்க முடியாது.

இஸ்லாமியக் கொள்கைகளின்படி யன்றி, பிரிட்டிஷ் இந்தியாவில் அமுலிலிருக்கும் முஸல்மான்களின் சமூக விதிகளில் யாதொரு மாறுதலுஞ் செய்யக்கூடாது.

## மந்திரி சபைகள்.

(அ) மத்திய சர்க்காரின் மந்திரி சபை அமைப்பதில், முஸல்மான் சமூகத்தைச் சார்ந்த அங்கத்தினர்கள், சீக்கியர், கூடுமான வரை இந்தியாவிலுள்ள இதர சிறுபான்மைச் சமூகத்தினர் ஆகியோரும் நிச்சயிக்கப்பட்ட ஒரு தீர்மானப்படி சேர்த்துக்கொள்ளப்படுவர்.

மேலும், மத்திய சர்க்கார் அமைப்பேற்பட்ட முதல் பத்து வருடங்களுக்குச் சீக்கிய சமூகத்தைச் சார்ந்த ஒரு அங்கத்தினருக்கு மந்திரி சபையில் ஸ்தானம் கொடுக்கப்படும்.

(ஆ) மாகாண மந்திரி சபைகள் அமைப்பதில், அந்தந்த மாகாணங்களிலுள்ள முக்கியமான சிறுபான்மை வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும் ஸ்தானங்கள் அளிக்கவேண்டும்.

## கூட்டுத் தொகுதி.

எல்லாத் தேர்தலுங் கூட்டுத்தொகுதி முறையிலேயே நடைபெற வேண்டுமென ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் அடுத்த பத்து வருட காலத்திற்கு அடியிற்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்ட, முகமதலித் திட்டம் அமுலிலிருக்கும்:—

**"தங்கள் சொந்த சமூகத்தினரின் குறைந்த பட்சம் நூற்றுக்கு முப்பது விகித வாக்குகளாவது பெற்றுக் கூட்டுத் தொகுதியிலும் அதிகப்படியான வாக்குகள் பெற்றவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுவர்.**

தனது சமூகத்தின் முப்பது விகித வாக்குகளைப் பெற்ற ஒருவராவது இல்லாதிருப்பின், அச் சமூகத்தில் அதிகப்படியான வாக்குகள் பெற்ற இருவரில் கூட்டுத் தொகுதியில் அதிகப்படியான வாக்குப் பெற்றவர்களே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுவர்.

பத்தாவது வருட முடிவில், நூற்றுக்கு முப்பது விகிதம் வேண்டுமென்கிற விதி தானாகவே முடிவடைந்துவிடும். எனினும், எந்த மாகாணத்திலுள்ள எந்த சமூகத்தினராவது பத்து வருட காலத்திற்குள்ளேயே தங்களுக்குப் பரிசுத்தமான பூரண கூட்டுத் தொகுதியே தேவை யென விரும்பினால் அவ்விதம் அவர்கள் சேர்ந்துகொள்ள உரிமை யுண்டு.

## வங்காளம்.

(1) ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட்ட கூட்டுத் தொகுதி வேண்டும்.

(2) முஸ்லீம்களுக்கு நூற்றுக்கு ஐம்பத்தொரு விகித ஸ்தானங்கள் அளிக்கப்படும். பொதுத் தொகுதியிற் சேர்ந்துள்ள இந்துக்களுக்கும் ஏனையோருக்கும் விசேஷத் தொகுதிகளுள்பட 44.7 விகித ஸ்தானங்க ளிருக்கவேண்டும்.

(3) ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படுவதும் விசேஷ தொகுதிகளும் பத்து வருடங்களுக்குப் பின்னால் தாமாகவே முடிவடைந்துவிடும். வங்காள சட்ட சபைக்கு ஒப்புக்கொள்ளப்பட்ட விகிதப்படி முஸ்லீம்களோ இந்துக்களோ அதிகப்படியான ஸ்தானம் பெறுவது பற்றியும்.

(4) 1,2 பிரிவுகளை யொட்டிய இதர விஷயங்களை யொட்டியும் முடிவு செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட வேண்டும்.

(5) வங்க சட்ட சபையில் நூற்றுக்கு ஐம்பத்தொரு விகித ஸ்தானத்தைப் பெற்றால்தான் முஸ்லீம்கள் கூட்டுத் தொகுதியை ஒப்புக்கொள்ளுவர்.

(6) மத்திய சர்க்காரிலும் மாகாணங்களிலும் உடனே பூரண பொறுப்பாட்சி பெற ஹிந்து முஸ்லீம் இரு சமூகத்தினரும் ஒற்றுமையாகப் பணியாற்றுவர்

(7) ஸ்தானங்கள் ஒதுக்கி வைப்பது முடிவடைந்த பின், வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை யளிக்கப்பட வேண்டும்.

(8) எல்லாப் பிரிவுகளையும் மொத்தமாகவே அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.



## பாஞ்சாலம்.

அடியிற்கண்ட ஏற்பாடு, அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட முதல் பத்து வருட காலத்திற்கே அமுலிலிருக்க வேண்டுமென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(1) மாகாண மந்திரி சபையில் குறைந்தது ஒரு சீக்கியராவது ஒரு இந்துவாவது இருக்க வேண்டும்.

(2) சட்ட சபைக்கு மந்திரிகள் கூட்டு முறையிற் பொறுப்பு வாய்ந்தவர்கள்.

(3) (அ) மந்திரி சபையாரால் கொண்டு வரப்பட்ட எந்த மசோதாவாவது அல்லது நிர்வாக வேலை முறையாவது, அத் திட்டம் வித்தியாசம் காட்டக்கூடியதா யிருக்கின்றதென்றோ அல்லது ஏதாவது சிறுபான்மை வகுப்பினரின் நன்மைக்குத் தீங்கிழைப்பதென்றோ சட்ட சபையிலுள்ள எல்லாச் சிறுபான்மை வகுப்பு அங்கத்தினர்களிலும் முக்கால் பாகத்தினர் ஆட்சேபனை செய்தால், அவ் வாட்சேபனை நியாயமானதென மந்திரி சபை ஒப்புக்கொண்டால் வாபீஸ், வாங்கப்படலாம். மந்திரிகள் ஒப்புக்கொள்ளாவிடில் அம் மசோதாவோ, வேலைத் திட்டமோ, அத்தன்மையதாக விருப்பின், அது மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட மூன்று அங்கத்தினர்க ளடங்கிய விசேஷ பஞ்சாயத்தின் முடிவுக்கு விடப்பட வேண்டும். இப் பஞ்சாயத்தில் மூன்று இந்திய நீதிபதிகளே யிருக்க வேண்டும். அவர்களிலும் ஒரே வகுப்பைச் சார்ந்த இருவர் இருக்கக் கூடாது. அதிலும், குறையுற்ற வகுப்பைச் சார்ந்தவர்களி லொருவர் அப் பஞ்சாயத்து அங்கத்தினர்களிலொருவராக யிருக்க வேண்டும். மேலும் அப் பஞ்சாயத்தார் கருத்து அவர்கள் முன், தாவா விஷயம் வைக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள் வெளியிடப்பட வேண்டும். இம் முடிவை மந்திரி சபையார் ஏற்றுக்கொள்ள மறுத்தால் அவர்கள் ராஜினாமாச் செய்ய வேண்டியது.

மேலே காட்டப்பட்ட முறையில், அதே போன்ற எந்த மசோதாவாவது உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினரால் கொண்டு வரப்பட்டு, மேலே குறிப்பிட்டவாறு ஆட்சேபனை செய்யப்படின், அவ்விஷயம் பற்றி பூரணமாக மேற் குறிப்பிட்டவாறே நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட பாதுகாப்புகள் ஐக்கிய மாகாணம், பீஹார், ஒரிஸ்ஸா, பம்பாய் ஆகிய மாகாணங்களுக்குப் பொருந்தும்.

(4) விசேஷ தொகுதிகளுள்பட சட்ட சபையில் அடியிற் கண்டவிதமாக ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படும்.

முஸ்லீம்கள் 51 விகிதம்; சீக்கியர் 20 விகிதம்; இந்துக்கள் 27 விகிதம்; இந்தியக் கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ-இந்தியர்கள், ஐரோப்பியர்கள் 2 விகிதம்.

சட்ட சபை அங்கத்தினர்களின் எண்ணிக்கையை இருநூருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டது. (பிரதம மந்திரி அறிக்கையில் இத் தொகை 175 ஆகக் கூறப்பட் டிருக்கிறது.) ஆனால் முடிவாக எந்தத் தொகை நிச்சயிக்கப்பட்டாலும், அநேக சமூகங்களுக்கும் மேலே கண்ட விகிதம் ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படும்.

(5) மேலே கண்டுள்ள எல்லாப் பிரிவுகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகும்.

## சிந்து.

பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள இதர பெரிய மாகாணங்களுக்குள்ள அதே சுதந்தரத்துடன், சிந்துவைத் தனி மாகாணமாகச் சிறுபான்மையாருக்கென ஒப்புக்கொள்ளப்பட்ட அடியிற்கண்ட பாதுகாப்புகளுடன், பிரிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டது:—

(1) மாகாண மந்திரி சபையினர் சட்ட சபைக்குக் கூட்டுமுறையில் ஜவாப்தாரி யாவார்கள். அச் சபையில் குறைந்த பக்ஷம் ஒரு இந்து மந்திரியாவது இருக்கவேண்டும்.

(2) பாஞ்சாலத் திட்டத்தின் மூன்றாவது பிரிவிற் காட்டப்பட்டுள்ளபடி கொண்டு வரப்படும் மசோதாக்கள் பற்றி, அதில் குறித்துள்ள முறைப்படியே நடவடிக்கை யெடுத்துக்கொள்ள வேண்டும்.

(3) (அ) இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் கிராமத் தொகுதி, நகரத் தொகுதிகளில் சம வாக்குரிமை வேண்டும்.

(ஆ) பத்து வருடங்களுக்குப் பின்னர் கூடுமான வரை இரு சமூகத்தினரின் ஜனத் தொகைக்குத் தக்கவாறு, வாக்காளர் ஜாபிதா தயாரிக்கப்படும்.

(இ) மாகாண சட்டசபைகளில் மொத்த ஸ்தானத்தில், விசேஷ தொகுதிகளுள்பட இந்துக்களுக்குக் கூட்டுத் தொகுதி முறையில் முப்பத்தேழு விகிதம் ஒதுக்கி வைக்கப்படும். மேலும் பத்து வருடங்களுக்குப் பின்பு இந்துக்கள் விரும்பினல் ஜனத் தொகைக்குத் தக்கவாறு ஸ்தானங்கள் பெறலாம். ஆனல் அவர்களுக்கு மேலும் அதிக ஸ்தானங்கள் பெறப் போட்டி போடுவதற்கும் உரிமையுண்டு.

(ஈ) ஸ்தல ஸ்தாபனங்களுக்காவது அல்லது சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட எந்த ஸ்தாபனத்திற்காவது கூட்டுத் தொகுதி



முறையிலேயே தேர்தல் நடைபெறும். சிறுபான்மை வகுப்பினர் ஜனத் தொகை விகிதாசாரப்படி தங்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட வேண்டுமெனக் கோரினலன்றிப் பெரும்பான்மைச் சமூகத்தினருக் காதரவாக ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட மாட்டாது. அந்தந்த பகுதியில் உள்ள ஜனத்தொகைப்படி பெரும்பான்மை வகுப்பினர் யாரென நிச்சயிக்கப்படும்.

(உ) சர்க்கார் உத்தியோகங்களுக்குப் பக்ஷபாதமற்ற பொது உத்தியோக கமிஷன் மூலம் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுவார்கள். அக் கமிஷனில் மூன்றிலொரு பாகத்தினராவது இந்துக்களிருக்க வேண்டும். நூற்றுக்கு அறுபது விகித உத்தியோகங்கள் யோக்கிய தாம்சப்படியே கொடுக்கப்பட வேண்டும் நாற்பது விகிதமே சமூகங்களுக்குள் ஏற்பட்ட குறைவை நேர் செய்வதற்காக ஒதுக்கி வைக்கப்படவேண்டும். உத்தியோகஸ்தர்கள் நியமிப்பதில் பொது உத்தியோக கமிஷன் சிந்துவில் பிறந்தவர்களுக்கும் வசிப்பவர்களுக்குமே விசேஷ சலுகை காட்ட வேண்டும்.

(ஊ) நிலங்கள் வாங்குவது விற்பதுடன், எந்தவிதமான தொழிலையும் மேற்கொள்வதுள்பட எல்லா நகர, பொருளாதார உரிமைகளையும் பெறுவதில் ஜாதி, மத, சமூக வேற்றுமை யிருக்கக்கூடாது. தற்சமயம் சிந்து மாகாணத்தில் அமுலிலிருக்கும் எந்தச் சட்டத்தையும் இது பாதிக்காது.

விவசாயிகளின் நன்மைக்காகச் சட்டங்கள் செய்யப்பட வேண்டுவதை யொட்டி "விவசாயி" என்பதற்கு மேலே குறிப்பிட்ட கொள்கைகொப்பப் பொருள்கள் கூறுமாறு சர். ஷா நவாப்பட்டுவையும், புரோபஸர் எச். எல். சபலானியையும் கேட்டுக்கொள்வதுடன் அவர்களது முடிவும் அங்கீகரிக்கப்படவேண்டும்.

(4) நீதி இலாக்கா, நிர்வாக இலாக்காவிற்கு உட்பட்டதாக இருக்கக்கூடாது நிர்வாக இலாகாவிலிருந்து நீதி யிலாக்காவைப் பிரித்து விட வேண்டும்.

(5) சிந்துவிற்கும் ஒரு பிரதம கோர்ட்டோ அல்லது ஹைக் கோர்ட்டோ அமைக்கப்பட வேண்டும்.

(6) இந்தியா முழுவதுக்கும் ஏற்பட்ட வகுப்புச் சமரச ஒப்பந்தத்தின் ஓர் பாகமாகும் சிந்துப் பிரிவினை ஒப்பந்தம். ஏதாவதொரு காரணத்தையொட்டி அவ் வொப்பந்தம் பூராவாக அமுலுக்குக் கொண்டுவரப்படாவிட்டால் முழு ஒப்பந்தமும் பயனற்றது.

(7) பிரெய்ன் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள அதிகச் செலவை நேர் செய்வதற்குரிய வழி காணவும், புரொபஸர் சபலானி கூறிய

யோசனைப்படி கமிட்டி அறிக்கையைப் பொது ஜனங்கள் முன்பு சமர்ப்பிப்பதைப்பற்றி யோசனை செய்யவும், ஒரு கமிட்டி நியமிப்பதற்காக இம் மாத முடிவில் சிந்துத் தலைவர்களடங்கிய மகாநாடொன்று கூட்டுவதென ஒப்புக்கொள்ளப்பட்டது.

## திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் அறிக்கை.

ஹிந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர் அனைவரும் ஒன்றாகவேயிருந்து ஒரே பொதுத் தொகுதியில் ஓட்டு செய்வார்கள். இதுவே ஒப்பந்தத்தின் சாரமானதும், முக்கியமானதுமான பாகம். ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோர் தமது வகுப்பினருள் 30 சத விகிதமுள்ள ஓட்டர்களின் ஆதரவையாவது பெறவேண்டும். இதனாற் கூட்டுத் தொகுதி முறைக்கு யாதொரு விதமான பங்கமும் ஏற்படவில்லை. ஒவ்வொரு வகுப்பிலுமுள்ள அரசியற் கக்ஷியினரும் இந்த 30 சத விகித விதியின் நலத்தைப் பெறுவர். கூட்டுத் தொகுதி முறையால்தான் கடைசியாக அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றார்கள். சிறுபான்மையோரது நலங்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதே தேசியத்தின் முதற் கடமை. அலகாபாத் ஒப்பந்தத்தால் அக் கடமை செவ்வனே நிறைவேறும். அரசியல் நிர்வாகத்திற்குத் தடை யேற்படாத முறையில் ஒப்பந்தம் அமைக்கப்பட் டிருக்கிறது. குறிப்பிட்ட வகுப்பாரின் நலங்கள் பாதிக்கப்படுஞ் சமயத்தில்தான் "பாஞ்சால பாதுகாப்பு முறை" பிரயோகிக்கப்படும். அத்தகைய சந்தர்ப்பங்களில்லாமல் எப்பொழுதுமே அம் முறை பிரயோகிக்கப்படுமென்று ஒருவரும் கருதுதல் வேண்டாம். இந்த ஒரு முறையால் நெருக்கடி ஏற்படுமென்ற பயத்திற்கு இடமே கிடையாது.

## பெருமை கொள்ளத் தக்கது.

அலகாபாத் ஒப்பந்தம் பெருமைகொள்ளத் தக்கதோர் யாதாஸ்தாகும். அதிலுள்ள ஒவ்வொரு பாகமும் மற்றவைகளோடு தொடர்புடையது. ஏதாவது ஒரு பாகத்தைத் திருத்தினாலும், மாற்றினாலுஞ் சம்பந்தப்பட்ட எல்லோரும் அதை நிராகரித்துவிடுவார்கள்.

சகல வகுப்பாரும் அலகாபாத் ஒப்பந்தத்தைத் தேச பக்தி உணர்ச்சியோடு மதிப்பார்களென்றும், திருத்தங்களொன்றுஞ் செய்ய யோசனை கூறமாட்டார்களென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அலகாபாத் ஒப்பந்தம், உண்மையான நம்பிக்கையையும், ஒற்றுமையையும் அடிப்படையாகக் கொண்டது. சென்ற இரண்டு வாரங்களில் நாம் பெற்ற மகத்தான வெற்றி இதுவேயாகும். இதை இந்தியா முழுவதும் மகிழ்ச்சியுடன் வரவேற்க வேண்டும்.

---

# ஆசிரியர் குறிப்புகள்.

## இனி என்ன செய்வோமடா மகோதரா!

இராம—இராவண யுத்தத்திலே ஜம்புமாலி, அக்ஷயகுமாரன், இந்திரஜித்தன் முதலிய யுவராஜ குமாரர்களையும், கும்பகர்ணன், மயில் இராவணன் முதலிய தம்பிமார்களையுஞ் சாகக்கொடுத்த இலங்கேஸ்வரனாகிய இராவணன் தினந்தோறுந் தோல்விக்குமேல் தோல்வியையே கேட்டுக் கேட்டுக் காதுங் கழுத்துங் குத்தலெடுக்கச் சண்டையிலே சலித்துப்போய்த் தனது மந்திரியான மகோதரனை இனிமேல் என்ன செய்யலாமென்று கேட்கிறான். அந்தமாதிரி அவஸ்தையிலே பர்மா சர்க்கார் சிக்கிவிட்டிருக்கிறது உண்மையிலேயே மஹா பரிதாபம். சர். சார்லஸ் இன்னஸ் என்கிற மஹானுபாவன் பர்மாவின் ஆட்சித் தலைவனாக வந்தது முதல் பர்மாவை இந்தியாவிலிருந்தும் பிரித்துவிடுகிறது என்கிற முயற்சியில் எத்தனையோ கஜகரணங்கள் போட்டுப் பார்த்தும் அவனது அந்தரங்க எண்ணஞ் சாயவில்லை. பிரிட்டிஷ் சர்க்கார் தங்களது குடில ராஜ தந்திரத்தில் அபஜெயத்தைத் தவிர ஜெயத்தின் தோற்றம்—உருவகத் தோற்றத்தைக்கூடக் காண முடியவில்லை. பிரித்தாளுங் கொள்கையாகிற தாரத மந்திரத்தை ஆள்வினையாளர் இனியும் நம்பிக்கொண்டிருக்கக் காலம் இதுவல்ல. ஜாதியிற் பிளவுசெய்து ஹிந்துக்களையும் அவர்களுடன் பிறந்த இரத்தச் சகோதரர்களான ஹரி ஜனங்களையும் பிரிக்கப் பார்த்தார்கள். காந்திஜீயின் உண்ணாவிரத வேள்வியில் அச்சூழ்ச்சி சுட்டெரிக்கப்பட்டது. அப்புறம் சமயத்திற் பிளவு—ஹிந்துக்கள், இஸ்லாமியர், சீக்கியர், கிறிஸ்தவருள் பிரிவு. அதுவும் அலஹாபாத்தில் அடித்து வீழ்த்தப்பட்டது. இனி தேசப் பிளவு—பர்மாவை இந்தியாவிலிருந்தும் பிரித்துவிடுகிறது. அதுவும் இப்பொழுது நடந்த நவம்பர் தேர்தலில் புதைக்கப்பட்டுவிட்டது. ஜாதிப் பிளவிலும், சமயப் பிரிவிலும், தேசப் பிரிவினையிலுந் தோல்வியுற்றபோது சர்க்கார் ஒன்றன்பின் னொன்றாய் மூன்று தரந் தோற்றுவிட்டதல்லவா? இனிமேற் பிரித்தாளுஞ் சூழ்ச்சி பலிக்காதென்பதற்கு வேறு சாக்ஷியங்களும் வேண்டுமா?

வட்டமேஜையின் கதியும் அப்படித்தான் மூன்று தோல்வியில் முடியப்போகிறது. முதல் வட்டத்தில் இந்தியரையும் பர்மியரையும் ஒரே யிடத்தில் வைத்துப் பேசினார்கள். இரண்டாவது வட்

டத்தில் இரண்டாய்ப் பிரித்துப் பர்மியருக்கெனத் தனி மேஜை சமைத்தார்கள். அதிலே பிரிவினைப் பிரச்னையை பர்மாவின் ஜனங்களே முடிவு செய்துகொள்ளுகிறது என்ற முடிவு காணப்பட்டது. நல்லெண்ணத்தோடல்ல குடில புத்தியாற் கூறினார்கள். பர்மியர்கள் அனைவரும் பிரிவினை யாதரிப்பதான ஊபாப்பேயும் ஊசூவும் சொன்னதை நம்பி ஜனங்களிடமே அப் பொறுப்பைக் கொடுத்துவிட்டால் பிரிவினைக்குப் பிரிவினை ஜனங்களின் விசுவாசத்திற்கு விசுவாசம் இரண்டையும் ஒரே வேட்டிற் பெற்றுவிடலாமென்கிற நம்பிக்கைகொண்டு செய்யப்பெற்ற தீர்ப்பால் அரசாங்கம் எதிர்பாராததை அடைந்தது. பர்மாவும் அரசியல் சாகஜத்தில் கேந்திரஸ்தானம் பெற்றிருக்கிறது. லண்டன் 'மார்னிங் போஸ்ட்' பத்திரிகை பர்மாவுக்குக் "கீழ்நாட்டு அயர்லாந்து" என்கிற மகுடப்பெயர் சூட்டி "பர்மியத் தேர்தலின் முடிவைக் கண்டு திகைப்புறுவதற்காக சர் சாமுயல் ஹோர் மன்னிப்புக் கேட்கவேண்டிய தேவையில்லை. கீழ்நாட்டு ஐரிஷ்காரர்களாகிய பர்மியர்கள் சுயேச்சையை மறுத்து இந்தியாவின்மீது தங்களுக்குள்ள சுயேச்சையைக் காட்டிவிட்டனர். குடியாட்சி முறையில் ஒரு குறிப்பிட்ட தீர்மானத்தை அங்கீகரிக்கும்படி கீழ்நாட்டாரை மரியாதையுடன் கேட்பதால் ஏற்படும் பயன் இதுவேயாகும்" என்றெழுதி யிருக்கிறது. தேர்தலில் மொத்தம் 80 ஸ்தானங்களில் 42 ஸ்தானத்தைக் கைப்பற்றிக்கொண்டுள்ள பிரிவினை வேண்டாக் கட்சியார் மந்திரி-சபை அமைக்க மறுத்ததில் சர்க்கார் திக்குமுக்காடுகிறது. பர்மா கவர்னர் இன்னஸுக்கு என்ன செய்வது என்று தெரியாமல் இந்தியா மந்திரிக்கும், பிரதம மந்திரிக்கும், வைஸ்ராய்க்கும் தந்திகளைக் கொடுத்து யோஜனை கேட்கிறார். பெரும்பான்மையோர் அரசியலை நிர்வஹிக்கிறது என்கிற மாமூலான வழக்கத்தை நிராகரித்துச் சிறுபான்மையாரிடம் அரசியற் கடிவாள வாரைக் கொடுத்துப் பெரும்பான்மையார் எதிர்க்கட்சியிலிருந்தால் சட்டசபை யாட்சியோ, இரட்டை யாட்சியோ என்னமாய் நடக்க முடியும்? ஏதேச்சாதிகார ஆட்சி நடக்கவும் அதை ஜனங்கள் எதிர்க்கவும், அதன் பயனாய் அரசியல் மாற்றம் ஏற்படவும் ஹேதுவாகுமல்லவா?

## ரயில்வேத் தொழிலாளர் வேலை நிறுத்தம்.

சென்ற அக்டோபர் 24-ம் நாள் ஆரம்பிக்கப்பட்ட எம்.எஸ்.எம். ரயில்வே வேலை நிறுத்தம் நாளிது நவம்பர் இரண்டு வாரங்கள் பூர்த்தியாகியும் இன்னும் முடிவுறவில்லை. தென்றல் முற்றிப் புயலானதுபோல பெரம்பூரில் தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் ஏற்பட்ட ஒரு சின்னத் தகராறை ரயில்வேக் காரியஸ்தர் (ஏஜெண்டு) மஹா பிரமாதமானதாகச் செய்துவிட்டார். இச் சிறு



பொறி வளர்ந்துவரும் வேகத்தைப் பார்க்கையில் பெரம்பூர்ப் பிரச்னை அகில பாரதப் பிரச்னையாகிவிடாதென்று யாரால் சொல்ல முடியும்?

வேலை நிறுத்தத்தின் மூல காரண காரியங்களை விஸ்தாரமாக விசாரஞ் செய்யாமல் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை ரயில்வே நிர்வாஹிகள் நிர்தாக்ஷண்யமாக நிராகரித்துவிட்டார்கள் என்கிறமட்டோடு வைத்துக்கொண்டு விஷயத்தில் இறங்குவோம்.

எம். எஸ். எம். ரயில்வேத் தொழிலாளருக்கும் அதிகாரிகளுக்கும் ஒரு தகராறு ஏற்பட்டது. அதைத் தொழிலாளிகளின் சங்கமாகிற தொழிலாளர் சபை (Labour Union)-க்குத் தெரியப்படுத்தியும் அச் சபைக்குப் போதுமான சந்தர்ப்பமும் அவகாசமும் அளித்தும் தொழிலாளர் தலைவர்களைக்கொண்டு தானே ஒருவாறு தீர்த்திருக்கலாம். அல்லாமலும் ராயல் கமிஷன் சிபார்சுப்படி இத்தகைய பேதாபேதங்களைச் சமரஸ போர்டின் மூலமாகத் தீர்த்துக்கொள்ளுகிறது என்கிற சமாதான மார்க்கத்தையும் அனுஷ்டித்திருக்கலாம். இவை இரண்டையும் விடுத்துச் சிப்பாய் முறுக்கில் மணியஞ் செய்ததுதான் வேலை நிறுத்தத்தை விரைவினில் தூண்டியதாகும். பெரம்பூர்த் தொழிலாளிகள் 10 தினங்கள் சாத்வீக முறையில் வேலை நிறுத்தஞ் செய்து பார்த்தார்கள். அதிகாரிகள் அகம்பாவ ஸ்தானமாகிற உச்சிக் கோபுரத்திலிருந்து ஒரு அடிதானும் சமதளத்தை நோக்கி யெடுத்து வைத்தார்களில்லை. அப்புறம் வேலை நிறுத்த நெருப்பு அரக்கோணத்திலும் வைக்கப்பட்டது. பின்பு ஹூப்ளி (Hubli), பெங்களூர், குண்டக்கல் வகையரா இடங்களிலும் இத் தீ மூட்டப்பட்டிருக்கிறது. இதனால் நாம் ஏற்கனவே கூறியிருக்கிறபடி இவ் வேலை நிறுத்தம் விசால பாரதப் பிரச்னையாக வளர்ந்து கொண்டு வருகிறது.

ஜி.ஐ.பி., பி.என்.ஆர். முதலிய ரயில்வேத் தொழிலாளர்களின் ஆதரவும் ஆசீர்வாதமும் எம்.எஸ்.எம். வேலை நிறுத்தக்காரர்களுக்கு ஏராளமாகக் கிடைத்துவருகிறது. உதவி நிதியும் குவிகிறது. இத்துடன் பொதுஜனங்களின் பூரணமான அனுதாபமுங் கிடைத்துவிட்டால் வேலை நிறுத்தம் வெற்றியில் வெகு சீக்கிரத்தில் பூர்த்தி பெறுமென்பதில் அனுப்பிரமாணம் அனுமானமும் வேண்டாம். ரயில்வே வேலை நிறுத்தத்தால் பொது மஹா ஜனங்களின் போக்குவரத்தும், தபால் வசதியும், பொருள் ஏற்றுமதி இறக்குமதியும் பாதிக்கப்பெறுமாதலாற் பொதுஜனங்கள் இவ் விஷயத்தில் எவருக்கு வந்த விருந்தோ என்றிருந்துவிட முடியாது.

வேலை நிறுத்தத் தோழர்களிற் பெரும்பான்மையோர் பரம ஏழைகள். மிக மிகக் குறைந்த சம்பளத்தைக்கொண்டு தானும் தனது பெண்டு பிள்ளைகளும், பெற்றோரும், பிறரும் ஏதோ அன்றாடம் அடுப்பூதி அரை வயிறுங் குறை வயிறுமாகக் காலக்ஷேபஞ் செய்கிற குடும்பத்தினர் அவர்களில் அநேகம்பே ரிருக்கிறார்கள். அவர்களெல்லாம் இப்பொழுது சத்தியார்த்தமாகத் தர்ம யுத்தஞ் செய்கின்றனர். அதிகாரிகளை யெதிர்த்து உதவி மறுத்தல் போர் செய்வதால் பசியோ டெதிர்த்துப் பட்டினிப் போரையுஞ் செய்ய வேண்டிய நிர்ப்பந்த நிலைமையி லிருக்கிறார்கள். அதற்காகப் பொது ஜனங்கள் தங்கள் தங்களால் இயன்ற அளவுக்கு அந்தத் தீனத் தொழிலாளர்களுக்கு உதவி செய்ய முன் வரவேண்டும். அதுதான் மனுஷ்யச் சாட்டும், தர்ம நீதியுமாகும். தொழிலாளர்களுக்குப் பொதுஜன ஆதரவிருப்பதை ரயில்வே அதிகாரிகள் அறிந்துவிட்டால் அதே நிமிடம் தொழிலாளர் கோரிக்கைகளுக்கு இணங்கிவிடுவதைத் தவிர வேறு விதி அவர்களுக்குக் கிடையாது. இந்தியாவில் சென்ற செப்டம்பர்மீ 30-ந் தேதியுடன் முடிவான மூன்று மாதங்களில் மாத்திரம் தொழிலாளி முதலாளித் தகராறுகள் 37 ஏற்பட்டு 35,653 தொழிலாளர்கள் வேலை நிறுத்தஞ் செய்திருப்பதாகச் சர்க்கார் அறிக்கை யொன்றால் அறியக்கிடக்கின்றது. இனிமேல் இப்பொழு தேற்பட்டிருக்கும் இந்த ரயில்வே சச்சரவால் எத்தனை பேர் வேலை செய்வார்கள்? எவ்வளவு பேர் பட்டினி கிடப்பார்கள்? எத்தனை ஏழை எளியவர்கள் வறுமைத் திருகையில் திணிக்கப்படுவார்கள் என்பதை யார் அறிவார்?

## அடுத்த சஞ்சிகையில் வரும் விஷயங்களிற் சில:—

1. சீனதேசகேசரி சன யாத-சேனன்.
2. பாரத நாட்டின் பண்டைக் கலைகள்.
3. தோட்டக்காரன் மகள்—(சிறு கதை).
4. டாக்டர் சாமுயேல் ஜான்ஸன்.
5. தமிழரின் தற்கால நிலை (நொண்டிச் சிந்து).
6. ஸ்ரீ அரவிந்தப் பெருந்தகையார்.
7. சிறு மணித் திரள்.

## புத்தக விமர்ஸனம்:—

1. உடற்பயிற்சி.
2. புகழேந்திப் புலவர் வரலாறு.

பொறுப்பாசிரியர் திரு. ரா. சுப்ரமண்யம் அவர்களால்,
தமது உத்தமபாளையம் ஆனந்தா பிரஸில், அச்சிட்டு பிரசுரிக்கப்படுகிறது.




# பாரதி

## சிறந்த செந்தமிழ் மாதப் பத்திரிகை

நான்காம் ஆண்டு நடைபெறுகிறது.

சுதந்திரம் கொண்டு சமத்வம்பற்றிச் சகோதரத்வம் ஏற்று
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் மத பேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்தியரனைவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான கொள்கையுடன்
தேசாபி விருத்தியை முக்கிய முதல் நோக்கமாகக்கொண்டு

**தேச விடுதலைக்காக உழைக்கும்**
**தேசீய மணங் கமழும் செந்தமிழ் மாஸிகை**

## "பாரதி" ஒன்றே யாகும்.

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள்.
உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி
அறிக்கை செய்து, சந்தாதாரர்களாய்ச்
சேர்த்துக் கொடுங்கள்.

**சந்தா விபரம்:**

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ. 2/= அல்லது 3 ஷிலிங்.
வெளி நாடுகளுக்கு „ ரூ. 3/= „ 5 „
போஷக சந்தா குறைந்தது ரூ. 100/=

தனிப் பிரதி விலை அணா 3. அயல் நாடு அணா 4.
மாதிரிப் பிரதி வேண்டுவோர் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
நகரங்கள்தோறும் ஏஜெண்டுகள் தேவை.
இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும்
ஏஜெண்டுகளை எதிர்பார்க்கப் படுகின்றது.
விபரத்திற்கு 2 அணா ஸ்டாம்புடன் எழுதவும்.

பொறுப்பாளர்,
"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

197884

விளம்பரங்கள்


# "பாரதி"

# பைண்ட் வால்யம்

'தமிழ் நாட்டு மாடேன் ரேவியூ' வெனப் புகழ்ப்பெற்று,
சென்ற 1929-ம் ஆண்டு முதல் வெளிவந்துகொண்டிருக்கும்

## "பாரதி"ப் பத்திரிகையின் பைண்ட் வால்யம்

உங்கள் புத்தகசாலையை
அழகு செய்வதாயிருக்கின்றது.

இவைகளில் பல பெரியோர்கள் சரிதைகளும்,
தேசாபிமானச் செல்வர்களின் சரிதைகளும்,
அவர்தம் படங்களும் நிறைந்திருக்கின்றன.

தமிழ் நாட்டின் அறிஞர் சிகாமணிகளும், பண்டிதப்
பெரியார்களும், ஆராய்ச்சி நிபுணர்களும் எழுதிய
கட்டுரைகள் என்றும் படித்துணரத்
தக்கவையாய்த் திகழுகின்றன.

விஷயங்களுக்கும் அச்சுக்கும் ஏற்ற விதம் உறுதியாக
பைண்ட் செய்யப்பெற்றிருக்கிறது.

800 பக்கங்கள்; நேர்த்தியான காலிகோ; கில்ட் பிரிண்ட்.

1930-ம் வருட வால்யம் 1-க்கு விலை ரூ. 2—8—0.
1931-ம் ரூ. 2—8—0.

தபாற் செலவு பிரத்தியேகம்.

வெளி நாட்டிலுள்ளோர்க்குத் தபாற் செலவுடன்
ரூ. 3½ அல்லது 5½ ஷிலிங்,

'பாரதி' ஆலயம்,
உத்தமபாளயம், மதுரை ஜில்லா.